www.padippakam.com

Jude...

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 12/00

දිනමුරසු වාරමලර් ஆக. 29 - செப்.04, 1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 324



## இதயத்தைத் திருடிய இளவரசி

## ரணகோஷ புலிகள் செய்துள்ள சூளுரை



## தேவயாணியின் காதல் நாயகன்

www.padippakam.com

# முரசம்

## ஒரே ஒரு சாதனை

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

ஆட்சிக் கட்டிலேறிய
ஐந்தாண்டு காலத்தை
பொதுஜன முன்னணியினர்
கோலாகலமாகக் கொண்டாடியுள்ளனர்!

அவர்கள் ஐந்தாண்டு காலத்தை
கொண்டாடியபோது,
ஐந்தாண்டுகளுக்கு முன்னர்
வழங்கப்பட்ட வாக்குறுதிகளையும்
திருவாளர் பொதுஜனம்
திரும்பிப் பார்த்திருப்பார்!

நிறைவேற்று ஜனாதிபதி
ஆட்சிக்கு முடிவு கட்டுதல்!

இனப் பிரச்சனைக்கு
அரசியல் தீர்வு காணுதல்!
போருக்கு முடிவு கட்டுதல்!

அத்தியாவசிய
உணவுப் பொருட்களது
விலைகளைக் குறைத்தல்!

அடிப்படையான
மனித உரிமைகள்,
ஜனநாயக அரசியல் உரிமைகளை
உத்தரவாதம் செய்தல்!

இவைதான்
பொதுஜன முன்னணியினர்
மக்களுக்கு வழங்கிய
அடிப்படையான வாக்குறுதிகள்!

ஏனைய வாக்குறுதிகள்
அடிப்படையானவையல்ல.
எனவே அவற்றையிட்டு
நாம் அக்கறைப்படவில்லை!

ஆனால் மேற்கண்ட
அடிப்படையான வாக்குறுதிகள்
நிறைவேற்றப்பட்டால் மட்டுமே
ஏனைய வாக்குறுதிகள் மட்டுமன்றி,
நாட்டின் அபிவிருத்திக்கான
சாதனைகளும் படைக்கப்பட முடியும்!

அத்திபாரம் இல்லாது
கட்டடம் அமைக்கவியலாது!

பொதுஜன முன்னணி
முன்வைத்த
அடிப்படையான வாக்குறுதிகள்தான்
அத்திபாரம்!

அந்த அத்திபாரத்தை
நிறுவுவதற்கு பதிலாக
நேர்மாறான நிகழ்வுகளே
நடந்து வருகின்றன!

தமது வாக்குறுதிகளை
நிறைவேற்றாது இருப்பதற்கு
பொ.ஜ.முன்னணியின் நியாயங்கள்
பொருத்தமாக அமையவில்லை!

ஜனாதிபதி ஆட்சிமுறையை
மாற்றுவதற்கு
இனப்பிரச்சனைத் தீர்வோடு
அதனைத் தொடர்புபடுத்துவது:
மொட்டைத் தலைக்கும்
முழங்காலுக்கும் இடையே
முடிச்சுப்போடுவது போன்றதே!

ஜனாதிபதி ஆட்சிமுறையை
மாற்றாது இருப்பதற்கு
ஒரே ஒரு காரணம்தான்!

அந்த நாற்காலியின்
அதிகார பலத்தையும்
அதன் மூலமான பலன்களையும்
இழப்பதற்கு விருப்பமில்லை!

அந்த நாற்காலியில்
அமராதவரை
அதனைத் தூஷிப்பார்கள்!
ஒருமுறை அமர்ந்துவிட்டால்
அதனைத் தக்க வைக்க
என்னென்ன செய்யலாம்
என்றுதான் யோசிப்பார்கள்!

இன்று அந்த ஆட்சிமுறையை
எதிர்த்து நிற்கும்
ரணில் விக்கிரமசிங்காவும்
இந்த நாற்காலியில்
அமர்ந்து விட்டாரேயானால்,
அதிலிருந்து அகலாது இருக்க
இனப்பிரச்சனையை
துணைக்கு அழைக்கக்கூடும்!

ஆட்சியாளரின் வாக்குறுதிகள்
நாற்காலிகளில் அமர முன்பாக,
வழங்கப்பட்டவை!

இப்போது அவற்றுக்கு
உயிர் கொடுத்தால்
அவர்கள் இருக்கும்
நாற்காலிகளுக்கே
ஆபத்தாகிவிடும்!

இனப்பிரச்சனைத் தீர்வு
தொடர்பான வாக்குறுதிகளும்
அதே போன்றதே!

போரை முடிவுக்கு
கொண்டுவந்தால்
சாதனைப் பட்டியல் என்று
தேர்தல் மேடைகளில்
விரித்துக் காட்டுவதற்கு
வேறெதுவும் இருக்காது!

17 வருடகாலமாக
ஐ.தே.கட்சி போட்டுவைத்த
பாதையில்தான்
இன்றைய ஆட்சித் தேரும்
நகர்ந்து கொண்டிருக்கிறது!

பாராளுமன்றத் தெரிவுக்குழு,
தீர்வுக்கு பரந்த விவாதங்கள்,
எதிர்க் கட்சியின் ஒத்துழைப்பு நாடல்
என்பதெல்லாம்
புதிய மொந்தையில் பழைய கள்!

அதேபோல
பொருளாதாரக் கொள்கை,
வெளிநாட்டுக் கொள்கை
என்பவற்றிலும்
புதிய அணுகுமுறைகள்
எதனையும் இன்றைய
ஆட்சியாளர் வகுக்கவில்லை!

எனவே, புதிய சாதனைகள்
என்று சொல்வதற்கு
பொ.ஜ.முன்னணியிடம்
இருப்பது ஒன்றே ஒன்றுதான்–
அதுதான்
தமிழ் பேசும் தரப்பின் வேதனை!

முன்னெப்போதையும்விட
போர் முனைப்பை தீவிரமாக்கி,
தமிழ் பேசும் மக்களை
பெருமளவில் அகதிகளாக்கி
பெரும் துயரில் தள்ளியிருப்பதை
வேண்டுமானால் தமது
சாதனையாகக் கூறிக்கொள்ளலாம்!

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்*



சாதனை?!

## மனிதச் சொத்து

மலர்ந்த முகம், மகிழ்ந்த மனம், கனிந்த பேச்சு இவையெல்லாம் மனிதனுக்கு தானாகவே இருக்க வேண்டிய, இருந்து கொண்டிருக்கிற சொத்து. இவற்றை அவன் அடிக்கடி அனுபவிக்க வேண்டாமா? ஆகையினால்தான் இதை சொத்து எனக் குறிப்பிடுகிறார்கள்.


பலருக்கு எல்லா நேரங்களிலேயும், இந்தக் குணங்கள், தன்மைகள் வராது. பரவாயில்லை, ஏதேனும் சில நேரங்களிலாவது இந்தக் குணங்களை வெளிப்படுத்தவேண்டும். இல்லையென்றால்மனிதப் பிறவியில் சேர்ந்தவன் என்று அவன் கருதப்படமாட்டான்.

ஆகவே மனிதனுக்கு இருக்க வேண்டிய குணங்கள் எல்லாம் இருந்தால்தான் அவனுக்கு மனிதன் என்று பெயர். மனித குணங்கள் இல்லாமல் மனித உருவத்தோடு உலாவிக் கொண்டிருக்கும் அவனைப் பார்த்து மிருகத்தின் பெயரை வைத்து கூப்பிடுகிறார்கள். "அதோ போகிறானே அவன் ஒரு நரி" என்று சொல்லுகிறார்கள். அவன் அம்மா ஒரு நரியையா பெற்றாள்? இல்லை தோற்றத்தில் மனிதன். குணத்தில் நரி அவன்.

ஆகையினால் திருவள்ளுவர் போன்ற ஞானிகள் மனிதனுக்கு உயர்ந்த குணங்கள் இருக்க வேண்டும் எனச் சொல்லி இருக்கிறார்கள். மனிதன் உயர்ந்த பிறவி எடுத்தவன். மனிதன் எப்போதும் தனித்து வாழக்கூடாது. கலந்து வாழணும், பலரோடு சேர்ந்து வாழணும், மிக முக்கியமாக மனிதனாக வாழணும்.

தொகுப்பு: கொல்லந்தை, எஸ்.என்.ராஜரட்ணம்.

# ஆன்மீகம்



## சொல்லும் செயலும் ஒன்றாக அமைந்தது

"பாம்புக்கும் தேளுக்கும் மனிதன் பயப்படுகிறான். அவை இரண்டும் மனிதனுக்குப் பயப்படுகின்றன. உண்மையில், பாம்பைப் பார்த்து நடுங்குகிற மனிதனின் பயத்தையும் மனிதனைக் கண்டு விரைந்து தப்பியோடுகிற பாம்பின் பயத்தையும் நிறுத்துப் பார்க்க முடிந்தால், பாம்பை விட மனிதனே அதிகமாகப் பயப்படுகிறான்.

"எதற்கு-யாருக்குப் பயப்பட வேண்டியதில்லையோ, அதற்கு மனிதன் பயப்படுகின்றான். காரணம் யாருக்குப் பயப்பட வேண்டுமோ அவனுக்கு மனிதன் பயப்படுகிறான் இல்லை." என்று ஞானி சுஃப்யான் சவ்ரி சொன்னார்கள்.

ஒரு முறை அவர்கள் இறைவணக்கத்திற்கு என்று ஒதுக்கி வைத்திருந்த தனியறை ஒன்றில் தொழுது கொண்டு இருந்தார்கள். முதல் 'ரக்அத்'தை முடித்துவிட்டு இரண்டாம் 'ரக்அத்'தைத் துவங்கியபோது நச்சுப் பாம்பு ஒன்று அவரது காலடிகளுக்கு மத்தியில் பின்னாலிருந்து நுழைந்து முன்னால் வந்தது.

சுஜூது செய்யும் இடத்தில் சிறிது நேரம் வளைந்து நெளிந்து விளையாடிற்று. அது அங்கு இருந்து நழுவிச் செல்வதற்கும் அவர் அங்கு சுஜூது செய்வதற்கு மிடையில் இருந்ததெல்லாம் சில வினாடிகள்தான். முகத்தில் அச்சத்தின் ரேகை இல்லாமல், அசைவுகளில்லாமல் தமக்கே உரித்தான ஆழ்ந்த தளர்ச்சியுடன் அவர் தொழுது முடித்தார்கள்.

தொகுப்பு: காத்தான்குடி. மொஹமத் எஸ்.பாரூக்.

## கவிதைப் போட்டி இல. 321

### பரிசுக்குரிய கவிதை

**நாமில்லையா?**

எம்.பி. பலியானால்,
எம்பிக் குதிப்பவர்கள்!
தம்பி நாம் தவிக்கிறோமடா;
திரும்பிப் பார்த்தனரா?
மனித உரிமையாம்
மனிதரில் நாமில்லையா?
ஜனநாயகம் வாழ்கவாம்
ஜனங்கள் நாம் நாயானோமா?

வி. பிரதீபன்- மட்டக்களப்பு.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**



**ஆக்கமும் அழிப்பும்**

தெற்கில்
வீடமைப்புத் திட்டம்!
வடக்கில்
வீடழிப்பு யுத்தம்!

சி. தர்மினி-வவுனியா.

**கார்–போர்**

அரசுக்கு
வால் பிடித்தால்
குண்டு துளைக்காத கார்!
சிரசு நிமிர்ந்து
வாழ விரும்பினால்
குண்டு வீச்சு போர்!
குழாய் வீட்டில் இருப்பினும்
கூஜா தூக்க மாட்டோம்!

எம். விக்கி-கிளிநொச்சி.

**நித்திரை கொள்!**

தண்ணீர் பாலாக
தடக்கு பஞ்சணையாக
கண்ணீர் கோலமிட
கண்மணியே-நீ!
அம்மா வரும் வரைக்கும்
அழாமல் நித்திரை செய்...!

செ. ஞானராசா-மடு.

**காணி சுவீகரிப்பு**

பால்மாவும் வேண்டாம்!
நிவாரணமும் வேண்டாம்!
எங்கள்
நிலங்களையாவது
எம்மிடம்
திருப்பித் தாருங்கள்!

த. நகுலேஸ்வரன்- கல்லடி, மட்டக்களப்பு.

**க(த)ண்ணீர் பாரீர்!?**

தண்ணீர் ஏந்திடும் குழாய்
தந்தது பாரீர் இருப்பிடம்...
கண்ணீர் சிந்திடும் குழந்தைகள்
தவிக்குது பாரீர் எவ்விடம்?

டி. ஜோர்ஜ்-ஹய்பொரஸ்ட.

**நிலப்பறிப்பு**

காகத்தின் கூட்டினிலே
குயிலுக்கும் முட்டை!
பாவம் தமிழன்; பிறந்த நாட்டில்
இவனுக்கில்லை ஒரு குழிநிலக்
கொட்டகை!

ரி. லஷ்மிதேவி-
மட்டக்களப்பு.

**உ(ம)றைவிடம்!**

வவுனியாவில்...
விமானம் கிளம்ப...
மல்லாவியில் நாங்கள்
மதகுக்குள் மறைவிடம்!
அதுவே இன்று...
நிரந்தர...?
உறைவிடம்!


கயல் வண்ணன்-வவுனியா.

**அங்கலாய்ப்பு**

உறவுண்டு வெகுதூரம்
எம் நிலையிங்கே பரிதாபம்!
பசிபோக்கத் திருவோடு
இளைப்பாறல் தெருவோரம்!

கிரிசாந்தி சந்திரகலா-
மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல.324



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 04.09.1999

**முகவரி:** கவிதைப் போட்டி இல.324
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

**கு(ரு) (ழ)வியும் கூ(வீ)டும்**

குருவிகள் கூட
கூட்டில் வாழுகின்றன;
இந்தக் குழவிகளுக்கு
வீடும் இல்லை;
வீதியும் இல்லை!

எஸ். கணேசமூர்த்தி-
அக்கரைப்பற்று.

**கண்ணுறங்கு!**

பாலூட்டத் தாய் இல்லை
பாலா நீ கண்ணுறங்கு!
தாலாட்ட நான் இருக்கேன்
தம்பி நீ கண்ணுறங்கு!
கண்மணியே கண்ணுறங்கு
கஞ்சிவரும் கண்ணுறங்கு!!

களுவாஞ்சி நாதன்-உப்போடை.

**வானொலி அறிக்கை**

கழிவு நீர்க் குழாயினுள் ஒளிந்திருந்த
இரு பயங்கர வாதிகள்
சுட்டுக் கொலை!
பாரிய குண்டு மீட்பு!?

சொலமன்ராஜ்-கண்டி.

**அமைதிப் புறா**

சிட்டுக் குருவி இரண்டு
சிறகடிக்கும் கூட்டைப்பார்!
தம்பி நான் இருக்கேன்
தனிமை உனக்கில்லை!
அம்மாவும் அப்பாவும்
சமாதானம் தான் வேண்டி
சாமியிடம் போனார்களோ?

க. செல்வராசா-வாழைச்சேனை.

## புரோக்கர் வேலை

அமரர் திருச்செல்வம் அன்று செய்த புரோக்கர் வேலையைத்தான் தற்போது தமிழ்க் கட்சிகளும் செய்கின்றன. மக்கள் தமது தேவைகளுக்காகப் போராடுவதை வைத்து இவர்கள் அரசுடன் பேசுகின்றனர். பின்னர் மக்களிடம் வந்து அரசு கூறியதைக் கூறுகின்றனர். இரண்டு பக்கமும் நல்ல பெயர் எடுக்கின்றனர். இது புரோக்கர் வேலைதானே!

வ. ஆதித்தியன், திருமலை.



# வாசக(ர்)சாலை

## நேர்த்தியான விமர்சனம்

முரசே! நீலனின் மறுபக்க உண்மைகள் பற்றிய இராஜதந்திரியாரின் அலசல் நேர்த்தியாக இருந்தது. ஒருவர் பாராட்டினால் அதே பாணியில் கண்ணை மூடிக்கொண்டு பாராட்டி எழுதிக் குவிப்பதே பல விமர்சகர்களது சலிப்பான வழக்கம். நீலனைப் போற்றி விட்டு, இறுதியில் புலிகளோடு அரசு பேச வேண்டும் என்றும் எழுதி, மீனுக்கு வால், பாம்புக்கு தலை காட்டாத நேர்மையான விமர்சனம் உங்களுடையது. நீலனின் தந்தை திருச்செல்வம் பற்றிய விளக்கமும் நன்று.

எம்.எம். நீலகண்டன், கொழும்பு-12.

எத்தனையோ மனித உயிர்கள் இங்கு புதைகுழிக்குள். ஆனால் மனித உரிமைவாதி என்று அமெரிக்காவால் பாராட்டப்படுகின்ற நீலன் புதைகுழிகளை மறந்துவிட்டு, பொதி பற்றி உலகுக்குப் பொய் கூறியிருந்தார். இதுதான் மனித உரிமைக்கு பாடுபட்ட இலட்சணமா?

கி. இராசரத்தினம், கனடா.

## வந்தேறு குடிகள்

'வந்தேறு குடிகள்' என்றபோதும் காதில் ஏறாததுபோல நடித்த தமிழ்க் கட்சிகளைத் திருத்த முடியுமா? முரசே! இவர்கள் போரிலும் பங்காளிகள். தமிழ் மக்களுக்கு எதிரான இராணுவத்தீர்வின் கூட்டாளிகள். தங்கள் உயிர்களைக் காப்பதற்காகவே ஜனநாயகம் பேசுகின்றனர்.

சி. குமாரலிங்கம், யாழ்ப்பாணம்.

## அட்டகாசம்

'மோனிக்கா என் மோனிக்கா' அட்டகாசம். முரசே உன் பாணியே தனிதான். மோனிக்காவின் கதையில் புவனாவின் கைவண்ணம் கலக்கல்தான். டயானாவைப் போலவே மோனிக்காவுக்கும் இளமைக்கால அனுபவங்கள் அமைந்துள்ளன.

சி. மகேஸ்வரி, அட்டன்.

புவனா வழங்கும் மோனிக்கா துள்ளும் தமிழில் நம்மை கவர்கிறாள். கிளின்ரனை மயக்கிய மோனிக்காவின் மறு பக்கத்தையும் சுவைபடத் தருகிறார் புவனா.

எம். இக்பால், புத்தளம்.

அன்பு முரசே!
'இடி அமீன்',
'சிந்தியா பதில்கள்',
'கண்ணீரில் கரைந்த இரவுகள்', 'இலக்கிய நயம்', 'கவிதை',
'சிறுகதை' அனைத்துமே சூப்பர். முரசிற்கு எனது பாராட்டுக்கள்.

செல்வி இ. சுதாமதி,
உடையார்கட்டு.

முரசுக்கு!
நீ மக்கள் மத்தியில் சுமந்து வரும் அனைத்து ஆக்கங்களும் அற்புதம். உன்னை வாழ்த்துவதற்கு எனக்கு வயது போதாது. ஆயினும் உன் சேவை இன்னும் இன்னும் ஓங்கி உயர வேண்டுமென வாழ வாழ்த்தும்-

மா. பரமேஸ்வரன்,
திருகோணமலை.

**மடல்கள் மற்றும் ஆக்கங்கள்– உட்பட சகல தொடர்புகளுக்கும்:**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ.இல:–1772, கொழும்பு.**
**தொலை நகல் (Fax):– 074-513266**

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

www.padippakam.com

# சிங்கள மக்கள் போரை விரும்பவில்லை!

# பேரினவாதிகளும், அரசுமே போரில் ஆர்வம்!

"சிங்கள மக்கள் போரை விரும்பவில்லை. ஆனால் சந்திரிக்கா அரசாங்கம் பேரினவாதிகளது அபிலாசைகளுக்கு ஏற்ப போரைத் தொடர்வதில் உறுதியாக இருக்கிறது. ரணகோஷ படை நகர்வை முறியடித்தே தீருவோம்" இவ்வாறு புலிகள் இயக்க உத்தியோக பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள், தனது ஆசிரியர் தலையங் கத்தில் தெரிவித்துள்ளது.

## வன்னியில் விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

தேர்தல்களை முன்னிட்டு அரசு புலிகளுடன் பேச விரும்புகிறது. போரை நடத்த விரும்பவில்லை என்று புரளிகள் கிளம்பியுள்ள நிலையில் அவற்றுக்கு ஆப்பு வைக்கும் விதமாக புலிகளது கருத்து வெளியாகியுள்ளது.

'விடுதலைப் புலிகள்' தனது ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"வன்னியில் மரபுப் போரை சிறீலங்கா படைகள் விரிவுபடுத்தி வருகின்றன. போர் மூலம் தமிழரின் இனப்பிரச்சனையைத் தீர்க்க முடியாது என்ற யதார்த்தத்தை களநிலமையும், உலக சமூகமும் அம்மையாரின் அரசாங்கத்திற்கு எடுத்துக் காட்டிய பின்பும் அவர்கள் போர்ப் பாதையைக் கைவிடத் தயாரில்லை.

தமிழரின் தேசிய எழுச்சியை ஒடுக்க முனையும் போரை சிங்கள மக்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டாலும்,போரின் விளைவுகளால் அவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

வெகு தொலைவில் போர் நடக்க-தமது ஊரும், நகரமும் அபிவிருத்திப் பாதையில் வீறுநடைபோடும் என்றும், தமது வாழ்க்கைத் தரம் உயரும் என்றும் கற்பனை செய்த சிங்கள மக்கள் ஏமாந்து போயினர்.

போரும் அதன் கொடூரவிளைவுகளும் சிங்கள மக்களது அன்றாட வாழ்க்கையிலும் பெரும் பாதிப்புக்களை உருவாக்கியுள்ளன.

இதனால் தமிழர் நிலங்களை போர் மூலம் கைப்பற்றி, அந்தச் செய்தியை தனது ஆட்சியின் வெற்றியாகக் காட்டும் சந்திரிக்கா அரசாங்கத்தின் அரசியல் பிரசாரம் சிங்கள மக்களிடம் அவ்வளவாக எடுபடவில்லை.

அண்மையில் நடந்து முடிந்துள்ள சிறீலங்காவின் ஐந்து மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் இதை துலாம்பரமாகக் காட்டியுள்ளன.

எனினும் பேரினவாத சக்திகளது இராணுவ அபிலாசைகளை நிறைவேற்றும் ஆக்கிரமிப்புக் கொள்கையை சந்திரிக்கா அம்மையார் தேர்வு செய்து அமுல்படுத்துகின்றார்.

முடிந்தால் வன்னி நிலப்பரப்பை முழுமையாக ஆக்கிரமித்து விடுவது. முடியாவிட்டால் குடாநாட்டுக்கு ஒரு இராணுவப் பாதையையாவது அமைத்துவிடுவது என்பது சந்திரிக்கா அரசாங்கத்தின் தற்போதைய இராணுவத் திட்டமாக உள்ளது.

ரணகோஷ பயணமும் சாத்தியமற்றது என்னும் இராணுவச் சூழல் உருவாகும் போது, வேறு ஒரு கவர்ச்சிப் பெயரில், வேறு ஒரு படையெடுப்பை ஆரம்பித்து தனது ஆக்கிரமிப்புக் கொள்கையை விடாது தொடர வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது.

வருகின்ற வருடத்தில் நடத்தியே ஆக வேண்டிய பாராளுமன்ற, ஜனாதிபதித் தேர்தல்களுக்கு இடையே இலக்குகளை எட்டியாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அரசுக்கு இருக்கிறது.

தமிழர் மீதான இராணுவ மேலாதிக்கத்தைக் காட்டி சிறீலங்காவில் அரசியல் நடத்தும் சந்திரிக்கா அரசு, தேர்தல் வெற்றிக்கான பாதைப் பிடிப்பு நடவடிக்கையை கைவிடப் போவதில்லை. இது வெளிப்படையான உண்மை.

கண்டி வீதி பிடிக்க (வவுனியா-யாழ் சாலை) புறப்பட்ட 'வெற்றி நிச்சயம்' நடவடிக்கையை நிச்சயிக்கப்பட்ட தோல்வியாக்கிய புலிகள், யுத்த முழக்கம் (ரணகோஷ) நடவடிக்கையை தம் வெற்றி முழக்கமாக மாற்றும் செயலில் இறங்கியுள்ளனர்." இவ்வாறு விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளது.

# யாழ் சாலையை திறக்க கோரிக்கை

## புலிகள் விடுத்துள்ள விளக்கம்!

'வவுனியா-யாழ் சாலையை போக்குவரத்துக்கு பயன்படுத்த புலிகள் அனுமதிக்க வேண்டும்' என்று வன்னிப்படைத் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்ல புலிகளுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

தற்போது மாங்குளம்வரை போக்குவரத்து நடந்து வருவதால் மேலும் உள்ள 30 கிலோமீட்டர் பாதையை புலிகள் போக்குவரத்துக்கு அனுமதிக்கவேண்டும். அவ்வாறு அனுமதித்தால் ஆனையிறவு ஊடாக யாழ் செல்ல படையினர் பாதையைத் திறப்பர், என்பது வன்னித் தளபதியின் யோசனை. குறிப்பிட்ட பாதையால் படையெடுப்பு நடக்காது என்றும் அவர் கூறியுள்ளார்.

எனினும் தற்போது மாங்குளம் வரை வவுனியா-யாழ் சாலை வழியாக நேராக பயணிகள் அழைத்துச் செல்லப்படுவதில்லை. ஓமந்தை, கனகராயன்குளம் போன்ற பகுதிகளை உள்பாதை வழியாகவே பயணிகள் கடந்து செல்ல வேண்டியுள்ளது.

பாரிய முகாம்கள் உள்ளதால் அவற்றுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை மக்கள் கண்டுவிடக்கூடாது என்பதற்காகவே உட்பாதையால் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

### ஒரு கண்

மாங்குளப் பாதைத் திறப்புக்கு படையினர் விரும்பும் காரணம் பற்றி புலிக்ள் பின்வருமாறு கூறியுள்ளனர்:

"மாங்குளத்திற்கு அப்பால் பிரதானவீதி வழியே ஒரு அங்குல நிலத்தையேனும் கைப்பற்ற முடியாத நிலையிலேயே 'ஜயசிக்குறுய்' கைவிடப்பட்டது. எனினும் வவுனியா-யாழ் சாலைமீது படைத்தலைமைக்கு ஒரு கண் இருந்தது.

மாங்குளம் ஊடாக ஒரு போக்குவரத்துப் பாதை திறப்பது என்ற நிலை எழுந்ததும், தனது நிறைவேறாத இராணுவ ஆசையை நிறைவேற்ற படைத்தரப்பு முயற்சிக்கிறது.

உடன்பாட்டை மீறி இராணுவ சூனியப் பகுதி ஊடாக வன்னியில் படை நகர்த்துவதற்கு படைத்தலைமைக்கு அதிக நேரம்பிடிக்காது.

முன்னைய போக்குவரத்து மையமான தாண்டிக்குளம் ஊடாக படைநகர்வை இராணுவம் செய்ததை நினைவூட்ட விரும்புகிறோம். அதுபோல அண்மையில் பள்ளமடுப் பகுதியில் போக்குவரத்துக்காக காத்திருந்த மக்கள்மீது எறிகணைத் தாக்குதல் நடத்திய படி முன்னேறிய ரணகோஷ 04 நடவடிக்கையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

தனது இராணுவ நலனை அடையும் களமாக மக்களின் போக்குவரத்து மார்க்கத்தைப் பயன்பீடுத்துவதே படைத்தரப்பின் நோக்கம்!" என்று புலிகள் கூறியுள்ளனர்.

வவுனியா யாழ் சாலையில் மாங்குளம் வரை முன்னேறி 35 கிலோ மீட்டர் பாதையை பிடிப்பதற்கு பெரும் இழப்பை படையினர் சந்தித்தனர்.

எனவே பயணிகளுக்கான பாதை என்ற பெயரில் தருணம் வரும்போது படைகளை நகர்த்தி பாதையைப் பிடிப்பதற்கே திட்டமிடப் படுகிறது என்றும் புலிகள் கூறியுள்ளனர்.

இத்தகைய நோக்கங்களுக்கு இடமளித்து, பாரிய இராணுவ வெற்றியை படைத்தரப்புக்கு வழங்க இயலாது எனவும் மேலும் தெரிவித்துள்ளனர்.

# முகாம்களில் ஆயுதத் திருட்டுக்கள்

## புலிகளுக்கு விற்கத் திட்டம்?

### படை அதிகாரிகள் குழப்பத்தில்

அரசப்படைப் பிரிவுகளில் பணிபுரிபவர்களின் வீடுகளில், போர்முனையில் பயன்படுத்தப்படும் குண்டுகள், துப்பாக்கிகள் மற்றும் வெடி பொருட்கள் மறைத்து வைக்கப் பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு வருவது பாதுகாப்புத் தரப்பினருக்கு பெரும் தலைவலியைத் தந்துள்ளது.

கண்டி நகரை அண்மித்த ஒரு கிராமத்தில் 64 விமான எதிர்ப்பு எறிகுண்டுகள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கண்டியில் பெரஹராவுக்காகப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. நகருக்குள் நுழையும் வாகனங்களும் தனி நபர்களும் நகர எல்லைகளில் அமைக்கப்பட்டுள்ள காவலரண்களில் பரிசோதனைக்குட்படுத் தப்பட்டனர்.

இக்கட்டத்தில் இடம்பெற்ற சோதனையின்போதே ஒரு இராணுவக் கோப்ரலிடம் சில வெடிகுண்டுகள் காணப்பட்டுள்ளன. அவர் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

அவருடைய வீட்டையும் பொலிசார் சோதனை செய்தனர். அப்போதுதான் அங்கு 64 விமான எதிர்ப்புக் குண்டுகளும் வேறுசில போர்க் கருவிகளும் கண்டெடுக்கப்பட்டன.

கடந்த சில வாரங்களில் கண்டி, களனி மற்றும் மஹாவெல ஆகிய இடங்களிலும் போர்த் தளபாடங்களும் குண்டுகளும் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வெடி பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டமைக்கும் படையில் பணிபுரியும் சிப்பாய்களே காரணம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

எறிகுண்டுகள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் போன்றவற்றைப் படை முகாம்களிலிருந்து களவாடி வரும் சிப்பாய்கள், அவற்றை நல்ல விலைக்கு பாதாள உலகக் குழுக்களுக்கு விற்கின்றனர் என்றுதான் கருதப்பட்டது.

ஆனால் தற்போது கண்டு பிடிக்கப் பட்டுள்ள விமான எதிர்ப்புக் குண்டுகள் நிச்சயமாகப் பாதாள உலகக் கோஷ்டியினருக்கு எவ்வகையிலும், பயன்படப்போவதில்லை. இவற்றை விடுதலைப் புலிகளுக்கு விற்பதற்காகவே கொண்டுவந்து மறைத்து வைக்கப்பட்டிருக்கலாமோ,என்று மேல்மட்ட அதிகாரிகள் பெரும் குழப்பமடைந்திருக்கிறார்கள் என்று அறியப்படுகிறது.

# மரங்கள் தொடர்ந்து அழிப்பு

## தென்னிலங்கை லொறிகளில் ஏற்றம்

மாங்குளம் பகுதிக்கு 23.08.99 அன்று பத்திரிகையாளர்கள் மீண்டும் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அப்போது பெருமளவான மரங்களை ஏற்றியபடி பல லொறிகள் வருவதை பத்திரிகையாளர்கள் கண்டுள்ளனர்.

தென்னிலங்கையைச் சேர்ந்த மர வியாபாரிகளே மரங்களைத் தமது லொறிகளில் ஏற்றி வருவதாகத் தெரிகிறது.

வன்னியில் பெரும் வளமான காடுகள் இவ்வாறு அழிக்கப்படுவது பற்றி யாரும் அக்கறைப்படவில்லை.

மரம் நடும் இயக்கம் பற்றி அரச செலவில் பெரும் பிரசாரங்கள் நடந்து வருகின்றன. ஆனால் வன்னியில் காட்டு வளம் நாசமாகி வருகிறது. இதனால் முழு நாட்டினதும் சுற்றுச் சூழல்கள், பருவ நிலைகள் பாதிக்கப்படப்போகின்றன.

மர வியாபாரம் மூலம் பலன் பெறும் சிலர்தான் பாதுகாப்பு என்ற போர்வையில் மரங்களை வெட்ட அனுமதிப்பதாகச் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

இதே நேரம் மரம் வெட்ட வன்னிப் பகுதிக்கு வருவோருக்கு தண்டனை கொடுக்க உள்ளதாகவும், 'லொறிகளைக் கொளுத்திவிடுவோம்' என்றும் புலிகள் எச்சரித்துள்ளனர்.

# புலிகள் மறித்து பிரசாரம்

## யாத்திரிகர் வியப்பு

மடுத் திருவிழாவுக்கு சென்ற யாத்திரிகர்களது வாகனங்கள் விடுதலைப்புலிகளால் பெரிய தம்பனையில் வைத்து மறிக்கப்பட்டன.

வாகனத்தில் இருந்த யாத்திரிகர்களுக்கு புலிகள் தமது கருத்துக்களைக் கூறி பிரசாரம் செய்துள்ளனர்.

புலிகள் வாகனங்களை மறித்த பெரிய தம்பனை, ரணகோஷ மூலம் படையினர் கைப்பற்றிய பகுதிகளில் ஒன்றாகும்.

புலிகளிடம் இருந்து மடுவை மீட்டு அங்கு தென்பகுதி யாத்திரிகர்கள் செல்வதற்கு தாம் வழிவகுத்துள்ளதாக அரசாங்கம் பெரும் பிரசாரம் செய்தது.

ஆனால் மடு சென்ற யாத்திரிகர்கள் புலிகளைச் சந்தித்துவிட்டே மடுவில் இருந்து திரும்பினார்கள்.

"மடுவை மீட்டுவிட்டதாக அரசாங்கம் கூறியது. ஆனால் புலிகள்தான் நம்மை சந்தித்து வழியனுப்பி வைத்துள்ளனர்!" என்று சிங்கள யாத்திரிகர்கள் ஆச்சரியம் தெரிவித்துள்ளனர்.

மடுவை புலிகளிடம் இருந்து கைப்பற்றியதால்தான் சிங்கள யாத்திரிகர்கள் அங்கு செல்ல முடிந்தது என்ற பிரசாரத்தை முறியடிப்பதற்காகவே புலிகள் யாத்திரிகர்களை மறித்து பிரசாரம் செய்ததாக நம்பப்படுகிறது.

# முன்னாள் புலி சுட்டுக் கொலை!

## காட்டிக் கொடுப்பு காரணமாம்!

திருமண வீடொன்றில் வீடியோ படம் பிடித்துக்கொண்டிருந்த நபர், அங்கு வந்த புலிகள் இயக்கத்தினரால் அழைக்கப்பட்டு அந்த இடத்திலேயே விசாரணை எதுவுமின்றிச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இது பற்றித் தெரியவருவதாவது: க.அறிவழகன் (31) என்பவர் மட்டக்களப்பு நகரில் வீடியோப்படப்பிடிப்பு தொழில் செய்து வந்தவர். சம்பவதினமான 18.08.1999 அன்று திருமண வீடொன்றில் வீடியோ படம்பிடிப்பதற்காக சித்தாண்டிக்குச் சென்றுள்ளார். காலையிலிருந்து படம் பிடித்துக் கொண்டிருந்தார். பகல் போசனம் முடிய மீண்டும் வீடியோப்படம் ஒளிப்பதிவு செய்து கொண்டிருந்தார்.

அங்கு விரைந்த புலிகள் எட்டத்தில் நின்றுகொண்டு அங்கு நின்றவர்களிடம் வீடியோப் படப்பிடிப்பாளரின் பெயரைச் சொல்லி அழைப்பித்து அந்த இடத்திலேயே சுட்டுக்கொன்றுவிட்டு, அவர் வைத்திருந்த வீடியோ ஒளிப்பதிவுக் கருவியையும் பறித்துக் கொண்டு சென்றுள்ளனர். இதன் பின்னர் திருமண வீடு மரணவீடாக மாறி அவஸ்தைப் பட்டது.

கொல்லப்பட்டவர் முன்னாள் புலி உறுப்பினர் என்றும், அவர் புலிகள் இயக்கத்தின் பெருந்தொகைப் பணத்தைக் கையாடிக் கொண்டு மட்டக்களப்புக்குத் தப்பிச் சென்றது மட்டுமல்லாது, புலிகளுக்கு எதிரான தரப்பினருடன் தொடர்புகளைக் கொண்டிருந்தார் என்றும் புலிகள் கூறியுள்ளனர்.

# அதிரடிப்படை சூடு

## விடுதலைப்புலி பலி

வவுனியா நகரில் விடுதலைப்புலி ஒருவர் அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். 20.08.99 அன்று நண்பகல் 12 மணியளவில் விசேஷ அதிரடிப்படையினர் தவசிக்குளம் பகுதியில் திடீர் வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது விடுதலைப் புலிகள் இருவர் சைக்கிள் ஒன்றில் அந்த வழியாக வந்தனர். சைக்கிளில் முன்னால் இருந்தவர் 'வோக்கி டோக்கி' சாதனமும் வைத்திருந்தார்.

எதிர்பாராது அதிரடிப்படையினரைக் கண்டதும் சைக்கிளை திருப்ப முற்பட்டனர். அதனைக் கவனித்த அதிரடிப்படையினர் துப்பாக்கிகளை உயர்த்தி குறிபார்க்க முற்பட்ட போது, சைக்கிளைப் போட்டுவிட்டு இருவரும் தப்பியோடினார்கள். அதிரடிப்படையினர் சுட்டதில் அதில் ஒருவர் சூடுபட்டு விழுந்தார். அப்போது தன்னிடமிருந்த கைக்குண்டை வெடிக்க வைத்து பலியானார். இன்னொரு விடுதலைப் புலி தப்பிச் சென்றுவிட்டார்.

பலியான விடுதலைப் புலியிடம் இருந்து பிஸ்டல் ஒன்றும், வோக்கி டோக்கியும் படையினரால் கைப்பற்றப்பட்டன.

பலியான விடுதலைப்புலி குருசாமி சிவலோகநாதன் (24) என்று இனம் காணப்பட்டுள்ளார். இவர் இரணை இலுப்பைக் குளத்தைச் சேர்ந்தவர். மூன்று மாதப் பாஸ் பெற்று வவுனியாவில் நடமாடியுள்ளாராம்.

இச்சம்பவத்தில் அதிரடிப்படையின் துப்பாக்கிச் சூட்டில் முத்தையா சிவக்குமார் (49) என்னும் குடிமகனும் பலியானார்.

பலியான விடுதலைப் புலியின் உடல் செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக புலிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

# பாலசிங்கம் தம்பதியின் பயணம்

## வெளிநாட்டு அரசே உதவியதாம்

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் எனக் கருதப்படும் அன்ரன் பாலசிங்கமும் அவர் மனைவி அடேலும் ஐரோப்பிய நாடுகளில் சுதந்திரமாக உலா வருகின்றனர்.

சிறீலங்கா அரசுக்குத் தெரியாமல் பாலசிங்கம் தம்பதியினர் இத்தகைய பயணங்களை மேற்கொள்வதற்கு ஒரு முக்கியமான வெளிநாட்டு அரசாங்கமும், அதன் நட்பு நாடு ஒன்றுமே உதவி செய்திருக்கின்றன, என்று சிறீலங்கா அரசாங்கம் இப்பொழுது நம்பகமான தகவல்களைப் பெற்றிருப்பதாகத் தெரிகிறது. இவ்வாறு கொழும்பு ஆங்கில தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. மேலும் அதன் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

தாய்லாந்துக் கரையோரப் பட்டணங்கள் விடுதலைப் புலிகளுக்கான ஆயுதங்களைக் கடத்துவதற்குப் பயன் படுத்தப்படுகின்றன என்று சிறீலங்கா அரசு தாய்லாந்து அரசாங்கத்திடம் சுட்டிக்காட்டியது.

அத்தகைய நடவடிக்கைகளுக்கு இடமளிக்கவேண்டாம் என்றும் கோரிக்கை விடுக்கப் பட்டது. தாய்லாந்தில் புலிகளுக்கான ஆயுதக் கடத்தலுக்கான எவ்வித ஆதாரமும் இல்லை என்று அந்நாட்டு அரசாங்கம் கூறிவிட்டது.

ஆனால் அண்மையில் புலிகளுக்கு ஆதரவான சர்வதேசக் கூட்டம் ஒன்று தலைநகரான பாங்கொக்கில் நடைபெற்றிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன என்றும் 'ஐலண்ட்' தெரிவித்துள்ளது.

# புலனாய்வுப் பொலிசார் பலி

## பிஸ்டல் குழு தாக்குதல்

மட்டக்களப்பு- ஓட்டமாவடி முஸ்லிம் நகருக்குள் வைத்து புலனாய்வுப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைப் புலிகளின் பிஸ்டல் குழுவினர் சுட்டுக் கொன்றுவிட்டு அவரது பிஸ்டலையும் பறித்துக்கொண்டு தலைமறைவாகினர்.

உபாலி ரணவீர எனும் புலனாய்வுப் பொலிஸ் உத்தியோகத்தர் கடந்த 10 வருடங்களாக இப்பகுதியில் கடமையாற்றியவர் என்று தெரியவருகிறது. இச் சம்பவ தினமான 21.08.99 அன்று சாயங்காலம் வாழைச் சேனைப் பொலிஸ் நிலையத்திலிருந்து அவர் சிவில் உடையில் வந்து கொண்டிருந்தார்.

ஓட்டமாவடி நகருக்குள் சைக்கிளில் வந்து அவரை வழிமறித்த புலிகள் இருவர் அவர்மீது சரமாரியாக பிஸ்டலால் சுட்டு விட்டு, அவரது பிஸ்டலையும் கைப்பற்றிக் கொண்டு மறைந்தனர்.

கொல்லப்பட்டவரின் தலையிலும் உடலிலும் 12 தடவைகள் துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்திருந்ததாகக் கூறப்படுகிறது. உபாலி ரணவீர அப்பகுதியில் மிகத் தீவிரமாகச் செயற்பட்டவர் என்று ஊர்மக்கள் கூறுகிறார்கள்.

சமீபத்தில் புலிகளுக்கு ரீ-சேர்ட்டுக்கள் வாங்கியதாக இரு பெண்களை இவர் கைது செய்திருந்தார்.

# படையினருக்கு ஆட்சேர்ப்பு

## அதிகாரி கூறிய காரணம்

தமிழ் இளைஞர்களையும் படையில் சேர்த்துக் கொள்வதற்கு அரசாங்கம் அக்கறைப்படுவதாக இராணுவ அதிகாரிகள் தமிழ்ப் பிரதேசச் செயலாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

இது விடயமாகப் பிரதேச செயலாளர்களை அழைப்பித்து மட்டக்களப்பு-வாழைச் சேனை காவல் நிலைய இராணுவத் தலைமையகத்தில் நடந்த கூட்டமொன்றில் அறிவிக்கப் பட்டது.

வாழைச்சேனை, ஓட்டமாவடி, வாகரை ஆகிய பிரிவு பிரதேச செயலாளர்களை அழைப்பித்து கூட்டமொன்றை நடாத்திய இராணுவ அதிகாரிகள், அவ்வப்பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து தமிழ் இளைஞர்களைப் படையில் சேர்த்துக் கொள்வதற்கான அறிவித்தலை கிராம சேவகர்கள் மூலமாக வெளிப்படுத்துமாறு கேட்டுக் கொண்டனர்.

இந்த அறிவித்தலை வெளியிட்டபோதும் தற்போதைய சூழ்நிலையில் தமிழ் இளைஞர்கள் இராணுவத்தில் சேர்ந்துகொள்ள முன்வரமாட்டார்கள் என்று அங்கு பிரதேச செயலாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்குப் பதிலளித்த சீருடை அதிகாரிகள், "அப்படியானதொரு சூழ்நிலை உண்டென்று நமக்கும் தெரியும். இருப்பினும் தமிழ் இளைஞர்களும் இராணுவத்தில் சேர்ந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது என்பதை அறிவிக்குமாறு மேலிடத்திலிருந்து அரசின் உத்தரவு. அதையே உங்களுக்குத் தெரியப் படுத்துகிறோம்." என்றனர்.

www.padippakam.com

## வசதிகள் மறுப்பு!

மட்டக்களப்பு-கல்லடியிலுள்ள பிராந்திய ஆங்கில உதவி நிலையத்தில் (REGIONAL ENGLISH SUPPORT CENTRE-RESC) ஆங்கில ஆசிரியர்களுக்கு கற்பித்தலுக்குரிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இந்த நிலையத்தில் கற்றலுக்குரிய ஊடக, உபகரண வசதிகள் போதியளவு இருந்தும் அங்கு பயிலும் ஆசிரியர்களுக்கு அந்த வசதிகள் பகிர்ந்தளிக்கப்படாமல் பிரயோசனமின்றி வீணே கிடக்கின்றன என்று புகார் தெரிவிக்கப்படுகிறது.

வீடியோ மற்றும் ஓடியோ ஆங்கிலப் பாட நெறிக் கெசற்றுகள், ஆங்கில இலக்கிய நூல்கள், மற்றும் பயிற்சி நூல்கள் போன்ற உபகரண வசதிகள் அங்கிருந்தும் அவற்றைத் தாம் உபயோகிக்கக் கேட்கும் போதெல்லாம், அங்குள்ள பொறுப்பதிகாரிகளால் தங்களது வேண்டுகோள் மறுக்கப்படுவதாக ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

கற்றலுக்குரிய இத்தகைய வசதிகளை அங்குள்ளோர் தர மறுப்பதால் இத்தகைய வீடியோ- ஓடியோ கெசட்டுகள், இலக்கிய இலக்கண நூல்கள், மற்றும் பயிற்சி நூல்கள் கிடைக்குமிடங்களைத் தேடி தாங்கள் அலைய வேண்டியிருப்பதாகவும், ஆனால் அவை எல்லோருக்கும் கிடைத்துவிடுவது கிடையாது என்றும் ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கிறார்கள். சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனமெடுப்பார்களா?

## மின்மானி இல்லாது கட்டணம் அறவீடு!

இலங்கை மின்சாரசபை மின் விநியோகம் செய்துள்ள வீடுகளில் மின்மானியைப் (METER) பொருத்தாது கட்டணங்களை அறவிட்டு வருகிறது.

கடந்த மூன்று வருடங்களாக மட்டக்களப்பில் இத்தகைய முறைகேடான மின் கட்டண அறவீடு இருந்து வருவதாக மின் பாவனையாளர்கள் குறை கூறுகிறார்கள். புதிதாக மின் விநியோகம் பெறும் எவருக்கும் மின்மானிகள் பொருத்தப்படுவதில்லை. கடந்த மூன்று வருடங்களாக மின் மானிகள் மட்டக்களப்புப் பகுதியில் பொருத்தப்படவில்லை என்று இலங்கை மின்சார சபையின் ஊழியர்கள் தெரிவிக்கிறார்கள்.

எனினும் ஒரு குத்து மதிப்பாக பாவித்த மின் அலகுகளையும் (UNITS) அதற்கேற்ப மின் கட்டணத்தையும், அதுபோதாக்குறைக்கு, பொருட்கள் சேவைகள் வரியையும் (GST) இ.மி.சபை அறவிடுகிறது.

மின்சாரம் பாவித்தாலும், பாவிக்காவிட்டாலும், மின் விநியோகம் தடைப்பட்டிருந்தாலும், வீட்டுக்காரர் குடி பெயர்ந்து வீடு மாதக்கணக்கில் பூட்டிக் கிடந்தாலும் மின் கட்டணம் ஒரு சதமேனும் குறையாமல் அதே தொகையில் வருகிறது.

மின்மானியுமின்றி, பாவித்த மின் கூறுகளின் அளவுமின்றி எவ்வாறு கட்டணத்தை மட்டும் துல்லியமாக அறவிடுகிறார்கள் என்பது வியப்பாக உள்ளது.

மின்மானி பொருத்துவதற்குரிய கட்டணத்தையும் மின் பாவனையாளர்களிடமிருந்து அறவிட்டுக் கொண்டு கடந்த பல வருடங்களாக மின் பாவனையாளர்களிடமிருந்து அநியாயமாக- சட்ட விரோதமான முறையில் மின் கட்டணத்தையும் அறவிட்டு வருகிறது இ.மி.சபை.

தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் மட்டும்தான் இந்த வித முறைகேடான மின் கட்டண விநியோகம் நடைபெறுவதாகவும் கூறப்படுகிறது.

## இலக்கத் தகடுகள் எங்கே?

கிழக்கு மாகாணத்திலுள்ள பொலிஸார் தங்களது கடமை நேரத்தில் தமக்குரிய இலக்கத் தகடுகளை அணிவதில்லை.

பல்வேறு சந்தர்ப்பங்களில் இழைக்கப்படும் துன்புறுத்தல்களையும் கெடுபிடி அச்சுறுத்தல்களையும் மூடி மறைப்பதற்கும் தப்பிக் கொள்வதற்காகவுமே, தந்திரமாக தமது இலக்கத் தகடுகளை அணிந்து கொள்ளாது நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு அடையாளம் காண முடியாதவாறு வெறுமனே சீருடையினர் நடந்து கொள்வதைப் பற்றி பொது மக்களும் சமூகநல அமைப்புக்களைச் சேர்ந்தோரும் கண்டனம் தெரிவிக்கிறார்கள்.

## குளிப்பதற்கு கட்டணம்

கன்னியா வெந்நீருற்றுக்கு நீங்கள் எவராவது உங்கள் சொந்த வாகனத்திலோ வாடகை வாகனத்திலோ குளிப்பதற்காகச் சென்றால் ஆளுக்கு இரண்டு ரூபா வீதமும் வாகனத்துக்குப் பத்து ரூபா வீதமும் கட்டணம் அறவிடப்படும்.

ஆனால் அரசாங்க வாகனங்களில் அரசாங்கச் செலவில் எரிபொருளையும் நிரப்பிக்கொண்டு குளிக்கச் சென்றால், உங்கள் திறமையைக் கருத்திற்கொண்டு எந்தக் கட்டணமும் அறவிடப்பட மாட்டாது. இந்த நடைமுறையை திருக்கோணமலை நகரமும் சூழலும் பிரதேச சபை அமுல் படுத்தி வருகிறது.

இந்து மக்களின் புண்ணிய தீர்த்தமாகவும் ஏனைய மக்களின் மனம் கவர்ந்த இடமாகவும் விளங்கும் வெந்நீருற்றுக்குத் தினமும் ஏராளமான மக்கள் வருகை தருகிறார்கள். கட்டணங்கள் அறவிடும் அளவுக்கு அங்கே வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்பது அங்கு சென்று திரும்புபவர்களது ஆதங்கமாக இருக்கிறது.

ஆகக் குறைந்த வசதியாகக் குளிக்க வருபவர்களுக்குப் போதிய வாளி வசதிகள் கூடச் செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.




கலை அலங்கார வகுப்புக்கள்
* சிகை அலங்காரம்
* அழகுக்கலை
* மணப்பெண் அலங்காரம்
* மலர் பொக்கை செய்தல்
* 4 மாத கற்கைநெறி

ஆரம்பம் விரைவில்

சான்றிதழ்கள் வழங்கப்படும்

FASNAZ BEAUTY SALON

142 டபிள்யு. ஏ.சில்வா மாவத்தை. கொழும்பு-06.

தொலைபேசி: 589457

மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு. மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

DR. A.P.S. KUTTY
50, THEATRE ROAD, NINTHAVUR-21, SRI LANKA.
067-50349

சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

SHAKTHY SARAVANA,
48/12, SRI WIMALASARA ROAD, KALUBOWILA, DEHIWALA.
T.P.: 723646. நேரில்–காலை 8மணி முதல் மாலை 2 மணிவரை

வியாழன் விடுமுறை

பெப்ரிக் பெயின்டிங்– வத்தளை

(Fabric Painting) 1800/= / Cake கேக் 4000/= / Thread point 2000/=

ஒவ்வொரு சனிக்கிழமையும் 2.00–4.30 மணி வரை 'தெனும' (Danuma-oki International) 43 பழைய நீர்கொழும்பு வீதி, வத்தளையில் வகுப்புக்கள் நடத்தப்படும்.

தமிழ் சிங்கள மொழிகளில் கற்பிக்கப்படும்.

பெயின்டிங், Threadpointக்கு தேவையான பொருட்கள் இலவசமாக கொடுக்கப்படும்.

தனிப்பட்ட வகுப்புக்களும் நடத்தப்படும்.

தொடர்புகளுக்கு:- ஷாமலா ஜெயரட்ணம், தொ.பே. 936196.


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் அனோயன் 22.08.99

பெரியவிளானைச் சேர்ந்த திவ்வியநாதன் இஜியவதனா தம்பதியினரின் செல்வப் புதல்வன் அனோயன் தனது முதலாவது பிறந்த தினத்தை ஃபிரான்சில் இருக்கும் தனது இல்லத்தில் (22.08.99) வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, முல்லைத்தீவில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, மாமாமார்களான கஜேந்திரன், கஜமுகன், காந்தராஜ், காந்தரூபன், மதி, அன்ரி (உதயா), ஜேர்மன் பெரிய மாமா கொழும்பிலுள்ள பெரியமாமி, திலீபன் அத்தான், துஷத்தினி மச்சாள், ஃபிரான்ஸ் அத்தான் துஷந்தன், யாழ்ப்பாணத்தில் சின்னமாமி, மாமா, ஃபிரான்ஸில் பெரியப்பா, பெரியம்மா, அக்கா நிருஷா, அண்ணா லொசீகன், ஃபிரான்ஸ் அம்மம்மா, மாமா, தமியன், பாட்டி தாத்தா மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் செல்வன் அனோயனை எல்லாம் வல்ல கதிர்காம கந்தன் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.


மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது. பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ஃபெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.

நவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

REAL ESTATE MANAGEMENT AND ALLIED SERVICES

வெளிநாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு யாழ்ப்பாணம்/ கொழும்பு/ வவுனியா மாவட்டங்களில் உள்ள அவர்களது சொத்துக்கள் தொடர்பில் பின்வரும் சேவைகளை எமது நிறுவனம் வழங்குகின்றது.

* சொத்துக்கள் பராமரிப்பு (Property Maintenance)
* சொத்துக்கள் குத்தகைக்கு விடல்/ விற்றல் (Property Leasing/ Selling)
* நில அளவையிடல் (Surveying)
* சொத்துக்கள் அபிவிருத்தி (Property Development)

மேலதிக விபரங்களுக்கு... Real Estate Management and Allied Services No.05, Wijeratne Avenue, Mount Laviniya. T.P. 074-201835, E Mail: jeya @ SRI LANKA. net No. 137, Chemmany Road, Nallur, Jaffna. or No. 54, Sinnaputhu Kulam, Vavuniya.

சுவிற்ஸர்லாந்தில் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் மற்றும் அனைத்து சஞ்சிகைகள், ஒரிஜினல் வீடியோ கொப்பிகள் வாடகைக்கும்–விற்பனைக்கும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்–

Tarmu Trading
Aarauer Strasse-76
4600-Olten- Swiss.
T.P.& Fax : 062-2971070 Natel :- 079-2771573


தொலைத்தொடர்பு நிறுவன உரிமையாளர்களுக்கும், அலுவலகங்களுக்கும் தொலைபேசி அழைப்பு கணிப்பீட்டு கருவி

COMPUTERIZED BILLING MACHINE

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்புகளை பதிவு செய்வதுடன் இலக்கம், கட்டணம், திகதி, நேரம், இடம் போன்ற தகவல்களுடன் உங்களால் நிர்ணயிக்கப்படுகின்ற கட்டணங்களை கணிப்பிட்டு மிகச் சிறந்த கணக்காளனாகவும் தொழிற்படுகின்றது.

- Approved by Foreign Sri Lankan Telecom Authorities.
- Operates on Ac/Dc Power
- Low Cost
- Easy Operation
- Best in the Market.
- Warranty and After- Sale Service.

TÜV CERT
DIN EN ISO 9002:1994
Certificate 09 100 89813



100 ACCOUNT CAN BE MAINTAINED

THE DETAILS OF THE LAST 250 DAYS RECORD CAN BE PRINTED & DISPLAYED

THAMPI HOLDINGS (PTE) LTD.,
"THAMPI BUILDING"
177, Old Moor Street, Colombo-12.
Tel : 343125 (Auto Lines)
Fax : 337465, E-Mail: thampi@sltnet.lk

METHOD OF COMPUTERISED BOOK - KEEPING & ACCOUNTANCY

கணனி மூலம் கணக்குப் பதிதலும் கணக்கீடும்

மூன்று மாத கால பாடநெறி

கடைக்கணக்கில் இருந்து கம்பனி கணக்கு வரை கணனியின் உதவியுடன் கணக்குப்பதியும் முறை. இப்பாடநெறி தபால் மூலமும் / நேரிலும் கற்கமுடியும். இந்நெறியை பயில்வது மூலம் DIPLOMA IN MCBA சான்றிதழை பெற்றுக் கொள்ளமுடியும்.

விபரங்களுக்கு தொடர்புகொள்க.

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S - 27 FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX.
P.O. BOX NO:162, COLOMBO - 11 TELE: 434770,

சகல விதமான வாத்தியக் கருவிகளையும் உதிரிப் பாகங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும் அவற்றை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள் –

ஒலிப்பதிவு நாடாக்களும் விற்பனைக்கு உண்டு.



SAI SANGEETHA
L.G. 123, Peoples Park, (நிலத்தளம்)
Gaswork St. Colombo-11. Tel : 445102


## 1வது பிறந்தநாள் வாழ்த்து 31.08.1999



மட்டக்களப்பு-பெரியகல்லாற்றை பிறப்பிடமாகவும் திருமலை சிவன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சத்தியகுமார்-சத்யராணி தம்பதியின் செல்வப் புதல்வன் **யக்சயன்** தனது 1வது பிறந்த தினத்தை 31.08.99 செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், அக்காமார், அண்ணன்மார், மச்சாள்மார், மச்சான் மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக பகவான் ஸ்ரீ சத்தியசாமி பாபாவின் அருள் பெற்று வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

செல்வன் யக்சயன்

*தகவல்: சத்யன், சத்தியா, இல, 10 சிவபுரி, திருகோணமலை, T.P 026-20298*

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# விசேஷ அதிரடிப்படை மீது புலிகளது விசேஷ கமாண்டோக்கள் நடத்திய தாக்குதல்

# போர் ஆண்டு முடிவதற்குள் பெரும் தாக்குதல்கள்

இந்த ஆண்டு புலிகளால் போர் ஆண்டாக பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் நான்கு மாதங்களுக்குள் அடுத்த நூற்றாண்டு ஆரம்பமாகப் போகிறது.

அதற்கிடையே படைத்தரப்புக்கு பாரிய இழப்புக்களை ஏற்படுத்துவதற்கு புலிகள் பல திட்டங்களை வகுத்துள்ளனர்.

தாம் பிரகடனம் செய்த போர் ஆண்டு முடிவதற்கிடையில் படையினருக்கு பேரிழப்புக்களை எற்படுத்த புலிகள் முடிவு செய்துள்ளனர்.

அதன் காரணமாகவே தாக்குதல்கள் தீவிரமாகியுள்ளன. புலியணிகளும் நாடெங்கும் பரவலாக அனுப்பப்பட்டுள்ளன.

மரபுப் போரிலும், கெரில்லா தாக்குதல்களிலும் தேர்ச்சி பெற்ற அணிகளும், திறமையான உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டு ஏனைய பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். அப்பகுதிகளில் இருந்த அணிகள் வன்னி களமுனைக்கு அழைக்கப்பட்டு போர்த் தேர்ச்சி பெறத் தொடங்கியுள்ளன.

மட்டக்களப்பு, அம்பாறை திருமலை



மாவட்டங்களில் புதிய தளபதிகளும் புதிய அணிகளும் களம் இறங்கியுள்ளனர்.

இந்த ஆண்டுக்குள் போரை தமக்கு சாதகமாக முடிப்பதற்கு அரசாங்கம் காலக்கெடு குறித்து, படைத் தரப்பை முடுக்கிவிட்டுள்ளது.

வன்னிச் சமரில் புலிகளை பலவீனமாக்கி முற்றுகைக்குள் வைத்துக் கொண்டு ஜனாதிபதித் தேர்தலையும், பாராளுமன்ற தேர்தலையும் நடத்தி முடிப்பதுதான் சந்திரிக்கா அம்மையாரின் திட்டம்.

இந்த திட்டத்தை செயற்படுத்த வன்னிச் சமரில் இரண்டு உத்திகளை படை தரப்பு பிரயோகிக்கும்.

1. மேலும் நிலப்பரப்புக்களை கைப்பற்றி புலிகளை சிறு நிலப்பரப்புக்குள் முடக்குவது.
2. மன்னார்-பூநகரி சாலையைக் கைப்பற்றி, அதனை புறப்படு தளமாக பயன்படுத்தி, புலிகளது தளப்பகுதி நோக்கி அடிக்கடி குறுக்குப் பக்கமாக படை நகர்வுகளை மேற்கொண்டு, புலிகளை தற்காப்பு நிலைக்குள் வைத்திருப்பது.

இந்த இரண்டு உத்திகளும் பயன் அளிக்குமானால் சந்திரிக்கா அரசாங்கத்திற்கு ஒரே கல்லில் இரு மாங்காய்கள்.

தேர்தல் களத்தில் புலிகளது நடவடிக்கைகளால் திருப்பங்கள் ஏற்படாது தடுக்கப்படுவதுடன், யாழ் குடாநாட்டுக்கான தரைப் பாதையை திறந்து நாட்டை ஒன்றாக்கிவிட்டதாகவும் ஆரவாரமாக தேர்தல் பிரசாரம் செய்யலாம்.

சந்திரிக்கா அரசாங்கத்தின் இந்த எண்ணம் ஈடேற புலிகள் இடமளிப்பார்களா? வன்னிச் சமரில் இதற்கு முன்னரும், கடந்த இரண்டு ஆண்டுகளில் பல காலக்கெடுக்களும், திட்டங்களும் அரசாங்கத்தினாலும், படையினராலும் வகுக்கப்பட்டன.

அத்தனை காலக்கெடுக்களும், திட்டங்களும் புலிகளது முறியடிப்புச் சமர் காரணமாக கைகூடாமல் போய்விட்டன.

வன்னிச் சமரில் சந்திரிக்கா அம்மையாரும், ஜெனரல் ரத்வத்தையும் நினைத்த இலக்குகள் எட்டப்பட்டிருந்தால் எப்போதோ பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தல் நடத்தப்பட்டிருக்கும். ஜனாதிபதித் தேர்தலும் நடந்து முடிந்திருக்கும்.

இறுதியாக இந்த ஆண்டு நவம்பருக்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்த நாள், நட்சத்திரம் பார்க்கப்பட்டது.

மன்னார்-பூநகரி பாதையை சுலபமாக கைப்பற்றிவிடலாம். அப்பாதையின் புவியியல் சூழலில் புலிகளால் தாக்குப்பிடித்து நிற்கமுடியாது என்று படைத்தரப்பு நினைத்தது.

பரந்த வெளிகளை கொண்ட புவியியற் சூழலில் புலிகள் பின்வாங்கிய கடந்தகால அனுபவங்களை வைத்தே படைத்தரப்பு மேற்கண்ட முடிவுக்கு வந்திருந்தது.

டாங்கிப் படையணியையும், விமானப் படையையும் பயன்படுத்தி பரந்த வெளிப் பகுதிகளால் படையினர் நகரும்போது புலிகள் எதிர்நிற்க முடியாது. எதிர்நின்றாலும் பலத்த இழப்பை அவர்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்பதுதான் படைத்தரப்பு போட்ட கணக்கு.

அந்தக் கணக்கின்படி நவம்பருக்குள் தரைப்பாதை திறந்துவிடலாம் என்று சந்திரிக்கா அம்மையாருக்கு நம்பகமாக தெரிவிக்கப்பட்டதாக தகவல்.

அதனையடுத்தே ஜனாதிபதித் தேர்தலை நடத்த வசதியாக, பிரசார பணிகளை முடுக்கி விடுவதற்கு அவசர அவசரமாக மந்திரிசபை விரிவாக்கப்பட்டது. அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகாரம் உள்ளவர்களாக தங்கள் பகுதிகளை கட்டியாள்வதற்காகவே பிரதி அமைச்சர்களாக மாற்றப்பட்டனர்.

ஆனால் களத்தில் கணக்குப் பிழைத்துப்போனது. மன்னார் பூநகரி சாலையில் முன்னேறும் படையினரும் புலிகளது பலத்த எதிர்ப்பை சந்தித்து, பாரிய இழப்புக்களை எதிர்கொண்டனர்.

வான், கடல் மார்க்கமாக படைகளை இறக்கி பூநகரியை பிடிக்கவும் முயற்சி நடந்தது. இந்த நடவடிக்கைக்கு சுழல்காற்று என்று படையினர் பெயர் சூட்டியிருந்தனர். 10.06.99 அன்று சுழல்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

எம்.ஐ.24 தாக்குதல் ஹெலிகள் பாதுகாப்பு வழங்க, எம்.ஐ.17 துருப்புக்காவி ஹெலிகள் பூநகரி கல்முனையில் படையினரை தரை இறக்க முயன்றன.

புலியணிகள் நடத்திய தாக்குதலில் எம்.ஐ.17 துருப்புக்காவி ஹெலி சேதமடைந்ததோடு, தரை இறக்க நகர்வு முயற்சியும் முடிவுக்கு வந்தது.

கடல்வழியாக தரை இறங்க மேற்கொண்ட முயற்சியும் தக்க பலன் கொடுக்கவில்லை. 'சுழல்காற்று' நடவடிக்கை நினைத்த பலனை நிறைவேற்றாது முடிந்து போனது.

பூநகரியை கைப்பற்றிவிட்டால், மன்னார்-பூநகரிப் பாதையை கைப்பற்றுவது எளிது என்பதே படையினரின் திட்டமாக இருந்தது.

இத் திட்டம் நிறைவேறாத நிலையில் 26.06.99 அன்று ரணகோஷ 04 கட்டம் 02 என்ற பெயரோடு மேற்கொள்ளப்பட்ட படை நகர்வும் இலக்கை எட்டாது முடிவுற்றது.

இதன்பின்னரே தாம் நினைத்தது போன்று மன்னார்-பூநகரி பாதையை கைப்பற்றுவது சுலபம் அல்ல என்பது படைத்தரப்புக்கு தெரிந்தது.

வவுனியா-யாழ் சாலையை கைப்பற்றி இராணுவ விநியோக பாதை திறக்கும் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையை ஆரம்பிக்காது, நேரடியாக மன்னார்-பூநகரி பாதையில் படைகள் இரண்டு வருடங்களுக்கு முன்பாக முன்னேறியிருந்தால் இலக்கை எட்டுவது சுலபமாக இருந்திருக்கலாம்.

அப்போது புலிகளிடம் ஆட்டிலெறிகள், மோட்டார்கள் போன்ற கனரக ஆயுதபலம் போதியளவு இருக்கவில்லை.

ஜயசிக்குறுய் சமரில் மரபுப்போர் தேர்ச்சியை புலிகள் பெற்றதோடு, படையினரிடம் இருந்தே கனரக ஆயுத பலத்தையும் பெற்றுக் கொண்டனர்.

ஜயசிக்குறுய் சமரின் இறுதிக் கட்டத்தில்



புலிகளின் போரிடும் ஆற்றல் மிக உயர்ந்திருந்தது.

மாங்குளம் சந்திக்கு முன்பாக சுமார் மூன்று கிலோமீட்டர் தூரத்தில் நிலைகொண்ட படையினர் மாங்குளத்தை சென்றடைய சுமார் ஒருவருடம் தேவைப்பட்டது என்பது கள ஆச்சரியம். அதுகூட கிளிநொச்சி தளம்மீது புலிகள் சமர் தொடுத்த சமயத்தில்தான் மாங்குளத்தை படையினர் கைப்பற்றினார்கள்.

புலிகளது மரபுச் சமர் பலத்தை மாங்குளம் சமர் நன்கு தெளிவாக்கியது. இந்நிலையில் மன்னார்-பூநகரி சாலை படை நகர்வும் பெரும் சவாலை எதிர்நோக்கி தடைப்பட்டு நிற்கிறது.

அரச படைகளுக்கு இருப்பது போன்று நவீன வான்படை, நவீன கப்பற்படை, டாங்கிப் படை, ஆட்பல எண்ணிக்கை போன்றவை புலிகளுக்கு இல்லாத நிலையிலும் இராணுவ சமபலத்தை பேண முடிந்துள்ளது என்பது போர்க்கள அதிசயமாகவே இருக்கிறது.

போரிடும் மண்ணோடு உள்ள பரிச்சயம், மன உறுதி, வழி நடத்தல் போன்றவையே இந்த அதிசயம் நிகழக் காரணம் என்பது மிகையான விளக்கமாக இருக்காது.

எனவே வன்னிச் சமரில் அரசாங்கமோ படையினரோ எதிர்பார்க்கும் இலக்குகள் சுலபமாக எட்டப்படமாட்டாது. இதனை ஓரளவு உணர்ந்தே ஜனாதிபதித் தேர்தலையும், பொதுத் தேர்தலையும் நடத்தும் திட்டத்தை அடுத்த ஆண்டுக்குத் தள்ளிவைக்க நினைத்துள்ளார் அம்மையார்.

அடுத்த ஆண்டை தேர்தல் ஆண்டாக மாற்றுவதற்கு அம்மையார் தீர்மானித்துள்ளதை அறிந்துதான், அந்த தீர்மானத்துக்கு சவால் விடத்தக்க நகர்வுகளை புலிகளும் ஆரம்பித்துள்ளனர்.

புலிகளை ஒரு நிலப்பகுதிக்குள் முடக்க அரசாங்கம் வகுத்துள்ள போர் உத்திக்கு பிரபாகரன் கொடுக்க தீர்மானித்துள்ள பதிலடிகள் பரவலாக ஆரம்பமாகிவிட்டன.

அரசாங்கம் தன் திட்டத்தை நிறைவேற்ற காலடி எடுத்து வைக்க முன்பாக, புலிகளது அணிகள் அதனை முறியடிக்க நாடெங்கும் பரவலாக அனுப்பப்பட்டுவிட்டன.

அதன் எதிரொலிகள் இப்போது கேட்டுக் கொண்டிருக்கின்றன.

புலிகளது தற்போதைய தாக்குதல் வலைப் பின்னல் இவைதான்:

1. படையினரது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அதிரடித் தாக்குதல்கள்.
2. தென்னிலங்கை மற்றும் மலையகப் பகுதிகளில் அரசுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகள்.
3. அரசை ஆதரிக்கும் தமிழ்க் கட்சிகளை முடக்கும் தாக்குதல்கள்.
4. வன்னியில் படையினர் நிலைகொண்ட பகுதிகளுக்குள் கெரில்லா தாக்குதல்கள்.

இந்த நடவடிக்கைகள் பரவலாக தீவிரம் பெறும்போது, படைகளை வன்னிச் சமரில் ஒன்று குவிக்கும் உத்தியும் பாதிக்கப்படும். அதனால் பாரிய படை நகர்வுகளுக்கு போதிய ஆட்பலம் இருக்காது.

இத்தாக்குதல்களுக்கு ஏற்ப பிஸ்டல் குழு உறுப்பினர்களும், கரும்புலிகளும் பல்வேறு பகுதிகளில் பல்வேறு ரூபங்களில் நிலைகொண்டுள்ளனர்.

இந்தப் போர் ஆண்டு முடிவதற்கு இடையே பெரும் தாக்குதல்களை படைத்தரப்பு எதிர்கொண்டே தீரவேண்டியிருக்கும்.

18.08.1999 அன்று வன்னியில் புலிகளது அணிகள் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புகுந்து நிலையெடுத்து தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளன.

ஓமந்தை இறம்பைக்குளத்திற்கு மேற்குப் புறமாக பாலமோட்டைக்கு அருகாக உள்ள பகுதிதான் நவ்வி.

'ஜயசிக்குறுய்' படையினரால் இப்பகுதி கைப்பற்றப்பட்டு இரண்டு வருடங்களாகின்றன. பின்னர் ரணகோஷ படையினர் மூன்று முறிப்புக்கு ஊடாக முன்னேறியதால் இந்தப் பகுதி மேலும் பாதுகாப்பான பகுதியாக கருதப்பட்டது.

அங்குதான் அதிரடித் தாக்குதலை புலியணிகள் நடத்தியுள்ளன. ரிமோட் கொன்ட்ரோல் மூலமான கண்ணிவெடித் தாக்குதல் நடந்ததாக சில செய்திகள் வெளியாகி இருந்தன.

ஆனால் நடைபெற்றது கண்ணிவெடித் தாக்குதல் மட்டுமல்ல, துப்பாக்கிப் பிரயோகமும் நடந்துள்ளது. எனவே அதிரடித் தாக்குதல் என்பதே சரியானது.

பகல் 1.15 மணியளவில் உழவு இயந்திரம் ஒன்றில் படையினர் நவ்விப் பகுதியில் சென்றுள்ளனர்.

கண்ணிவெடியை பொருத்தி வைத்துவிட்டு புலியணி ஒன்று பதுங்கியிருந்தது. உழவு இயந்திரத்தை கண்டதும் கண்ணிவெடி வெடிக்க வைக்கப்பட்டது. அதேசமயம் பதுங்கியிருந்த புலிகள் வெளிப்பட்டு உழவு இயந்திரம்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இத் தாக்குதலில் 11 படையினர் பலியானார்கள். ஏ.கே. ரக துப்பாக்கிகள் 02 புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டன.

வன்னியில் படையினர் அகலக்கால் வைத்து நிற்பதால், அதனை தமது கெரில்லா நடவடிக்கைகளுக்கு சாதகமாக மாற்றி தொடர் இழப்புக்களை உருவாக்க புலிகள் தயாராகியுள்ளனர்.

படையினர் வசமுள்ள நிலப்பரப்பு அதிகமாகும்போது அங்குலத்திற்கு அங்குலம் சிப்பாய்கள் நிற்க முடியாது. ஆட்பலம் போதாது. ஆகவே ரோந்துகளில்தான் ஈடுபடவேண்டும். அதனால் புலிகளது பொறிகளில் சிக்கக்கூடிய சந்தர்ப்பங்களும் அதிகமாகும்.

வன்னியில் தாக்குதல் நடைபெற்ற அதே தினத்தில் அம்பாறை மாவட்டத்திலும் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

18.08.99 அன்று காலை 7.30 மணியளவில் அம்பாறை சென்றல் காம் அதிரடிப் படையினர் வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

13ம் காலனிப் பகுதியில் புலிகளது விசேட கமாண்டோ அணியினர் இவர்களை எதிர்பார்த்து பதுங்கியிருந்தனர்.

அதிரடிப்படையினர் அப்பகுதிக்கு அணியாக வந்து சேர்ந்தபோது புலிகளின் விசேஷ கமாண்டோக்கள் தாக்குதலை தொடுத்தனர்.

எதிர்பாராத தாக்குதலால் நிலைகுலைந்த போதும், அதிரடிப்படையினரும் திருப்பித் தாக்குதல் தொடுத்தனர். கடும் மோதல் மூண்டது. எனினும் புலிகளது கொமாண்டோக்கள் நன்கு திட்டமிட்டு வியூகம் வகுத்திருந்தனர்.

சண்டையின் முடிவில் ஆறு அதிரடிப் படையினர் பலியாகினர். அதன்பின்னர் காயமடைந்த படையினரை தூக்கிக்கொண்டு அதிரடிப்படையினர் பின்வாங்கினர்.

அதிரடிப்படை அணியை முற்றாக அழித்தொழிக்கும் புலிகளது திட்டம் பயனளிக்கவில்லை. முற்றுகையை உடைத்துக் கொண்டு, அதிரடிப்படை அணியின் ஏனைய படையினர் முகாம் சென்றுவிட்டனர்.

இச் சண்டையில் புலிகள் தரப்பில் இரண்டு பேர் பலியானார்கள். புலிகளது விசேஷ கமாண்டோ அணியைச் சேர்ந்த மேஜர் சிவப்பிரகாசம் (ராசரத்தினம் கங்காதரன்-மட்டக்களப்பு), லெப்டினன்ட் யாதவன் (முருகுப்பிள்ளை வைரமுத்து-மூதூர்) ஆகியோரே பலியானார்கள்.

எம்.16 ரகத் துப்பாக்கிகள்-02, ரி. 56-02 ரக துப்பாக்கிகள்-02, ரி. 56-01 ரக துப்பாக்கி 01 ஆகியன தம்மால் கைப்பற்றப்பட்டதாக புலிகள் கூறியுள்ளனர். எனினும் இதனை படைத்தரப்பு உறுதி செய்யவில்லை.

புலிகளது விசேஷ கமாண்டோக்கள் வன்னிச் சமரில் பங்குகொண்ட அணியாகும்.

இந்த அணி சகல பிராந்தியங்களுக்கும் சென்று சண்டையிடக்கூடியதாக, சகல பிராந்திய உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.

அம்பாறையில் விசேஷ அதிரடிப்படையினரை தாக்கும் நடவடிக்கைகளுக்காகவே தமது விசேஷ கொமாண்டோக்களை அம்பாறைக்கு புலிகள் அனுப்பி வைத்ததாக கூறப்படுகிறது.

புலிகளது விசேஷ கமாண்டோ அணியினரும் கிழக்குக்கு அனுப்பப்பட்டுள்ளமை, அங்குமேலும் தீவிரம் பெறப்போகும் புலிகளது நடவடிக்கைகளுக்கு கட்டியம் கூறுவதுபோல் உள்ளது.

—★—

ஆனையிறவு பரந்தன் படைத் தளங்களில் இருந்து பாரிய படை நகர்வு ஒன்று திடீரென்று ஆரம்பமானது.

22.08.99 அன்று அதிகாலை 5.30 மணியளவில் ஆட்டிலெறித் தாக்குதலை நடாத்தி, அந்த சூட்டுக் காப்போடு புலிகளது நிலைகள் நோக்கி படையினர் முன்னேறத் தொடங்கினார்கள்.

ஏற்கனவே 10.06.99 அன்றும் சுட்டதீவை நோக்கி படையினர் நகர்வு ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

பூநகரியை கைப்பற்றும் 'சுழல்காற்று' நடவடிக்கைக்கு உதவியாக, புலிகளை திசை திருப்பும் நகர்வே அப்போது மேற்கொள்ளப்பட்டது. எனினும் அந்த நகர்வும் முறியடிக்கப்பட்டது.

அப்போது லெப்டினன்ட் கேணல் தர அதிகாரி உட்பட பத்தொன்பது படையினர் பலியானதாக படைத்தரப்பு அறிவித்தது. புலிகள் தரப்பில் 07 பேர் பலியானார்கள்.

இரண்டு மாதங்களின் பின்னர் மறுபடி பரந்தன் நிலைகளில் இருந்து சுட்டதீவை நோக்கி படையணிகள் இருமுனைகளால் முன்னேறின.

புலிகளின் மகளிர் படையணி உட்பட புலியணிகள் எதிர்த்தாக்குதல் நடத்தின.

சண்டையின் முடிவில் மறுபடி படையினர் முகாம் திரும்பினார்கள். இரண்டு படையினரது உடல்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டு செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

கிளிநொச்சி களத்தில் புலிகளது பலத்தை நாடிபிடித்தறிய இந்த நகர்வு மேற்கொள்ளப்பட்டதா என்பது தெரியவில்லை.

நாரதர்



**யாழில் 'உதயன்'** பத்திரிகைக்கு குண்டெறிந்தது ரெண்டு எழுத்தார் என்று கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்று செய்தி போட்டிருக்கிறது. ஆனால் குண்டெறிந்தது யார் என்பது யாவருக்கும் தெரியும். தென்னிலங்கை சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைக் காரியாலயங்களுக்கு இவ்வாறு நடந்திருந்தால் பத்திரிகையாளர்கள் பொங்கி எழுந்திருப்பார்கள். உதயனுக்கு நிகழ்ந்ததைக் கண்டு கொள்ளவில்லை. திரித்துக் கதை கூறுகினம்.

**கொழும்பில் சிங்கள** இரசிகர்கள் எம்.ஜி.ஆருக்கு ஏராளமாக இருந்தனர். அந்த இடத்தை ரஜினிகாந்த் பிடித்திருக்கிறார். ரஜினி படம் பார்க்க தமிழ் பேசும் இரசிகர்களைவிட முன்வரிசையில் நிற்கினம் சிங்கள இரசிகப் பெருமக்கள். அப்படியானால் பாருங்கோ, இனப்பிரச்சனைக்கு சமாதானம் பேச ரஜினிகாந்த்தை கூப்பிடலாமோ?

**கொழும்பில் நடந்த** பேரணிக்கு நாட்டின் சனத்தொகையில் எவ்வளவுபேர் கலந்துகொண்டனர் என்பது கிடக்கட்டும். அரச பஸ் தொகையில் பாதிக்கு மேல் கலந்து கொண்டன. ஒவ்வொரு ஆளும் தரப்பு எம்.பியும் தலா பத்து பஸ்கள் கேட்டு, ஆள் அம்பு சேனையுடன் தலைநகர் வந்தவையாம். அரச போக்குவரத்துச் சேவை அன்று மட்டும் பொதுஜன முன்னணி சேவையாக மாறிப் போட்டுது.

**தமிழ்க் கட்சிகளுக்கு** முன்னர் அதிகாரத் தரப்பார் தங்கள் கட்சி நிகழ்ச்சிகளுக்கு அழைப்பு விடுப்பது வழக்கம். மேதினக் கூட்டங்களில்கூட தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டவை. ஆனால் இம்முறை அழைக்காததுக்குப் பாதுகாப்பு

## அதிரடி அய்யாத்துரை

அச்சமே காரணமாம். தமிழ்க் கட்சிகளுக்குள் ரெண்டு எழுத்தார் ஊடுருவல் என்ற சந்தேகமும் முக்கிய காரணமாம். இதனை வெளியில் சொல்ல வெட்கப்பட்டு தம்மை அழைக்காததுக்கு தமிழ் கட்சிகள் கூறியுள்ள காரணங்கள் விழுந்தும் மீசையில் மண்படாத கதைதானுங்கோ!

**ஒரு பண்புக்காக** என்றாலும் தங்கள் வெற்றிக் கொண்டாட்ட அழைப்பிதழையாவது தமிழ்க் கட்சித் தலைவர்களுக்கு அதிகாரத் தரப்பு அனுப்பியிருக்கலாம். இப்படித்தான் குடாநாட்டை கைப்பற்றிக் கொடி ஏற்றியபோதும் தமிழ்க் கட்சிகளை ஓரம் கட்டினவை. இப்போது ஆட்சியைப் பிடித்த கொண்டாட்டத்துக்கும் கூப்பிடாமல் ஒதுக்கிப் போட்டினம். அதிகாரத் தரப்பு கொடுக்கும் மரியாதைக்கு அட்டகாசமான உதாரணம். அவை அழைத்து இவை போகாமல் இருந்திருந்தால் பெருமை பேசலாம். அவையே 'வரவேண்டாம்' என்று அழைக்காமல் இருக்கும்போது, 'நாங்கள் போகமாட்டோம்' என்று தமிழ்க் கட்சிகள் சொன்ன கதை இருக்குதே! சொல்லி வேலையில்லை!

**திருவான மலையில்** இருந்து சம்பந்தமானவர் வாபசாகிக் கொண்டிருக்கிறாராம். வீட்டில் இருந்து பெறுமதியான பொருட்கள் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் தகவல். ஆட்களைச் சந்திப்பதையும் வலுவாகக் குறைத்துள்ளாராம்.

**பக்கத்து நாட்டில்** தாமரைச் சின்னக்காரர் ஆட்சியைப் பிடிக்கக்கூடாது என்பது நம்நாட்டு மேலிட உள்மன விருப்பம் போலத் தெரியுது. ஆனால் தாமரைக்குத்தான் யோகம் என்பது தடாக நிலவரம்.

**பேரணிக்குச் சென்றால்** நிலத் தொப்பிகள்,ரீ சேர்ட்டுக்கள், சாப்பாடு என்று பற்பல சிறப்புச் சலுகைகளாம். சிவராத்திரி, ஹஜ் போன்ற விடுமுறைகளே விரயம் என்று முன்பு கூறினார்கள். ஆனால் கொண்டாட்டத்தால் கொழும்பே ஸ்தம்பித்து விட்டதல்லோ. அறிவிக்கப்படாத விடுமுறை நாள் மாதிரியாகிப் போச்சு!

**அரச தொலைக்காட்சிகளில்** பேரணி ஆக்கிரமிப்பு. அரச பத்திரிகைகள் பேரணி உரைக்காக நேரம் தாமதித்து ஞாயிறு வெளியாகின. பச்சை ஆட்சியில் எல்லாமே பச்சையாகிப் போச்சுது என்று கூறினார்கள். அது உண்மைதான். இப்போது நீலமாகிப் போச்சுதே. இது தப்பில்லையோ?!

**தமிழக 'குமுதம்'** சஞ்சிகையில் 'புத்தர் புலி புன்னகை' என்ற பெயரில் தப்புத்தப்பான தகவல்களுடன் கட்டுரை ஒன்று நான்கு வாரங்களாக வெளியாகியது. இன்று நேற்றல்ல நீண்ட காலமாகவே இப்படித்தான் சிலர் தப்புப் பண்ணுகிறார்கள். தமிழக நிலவரம் பற்றி நாம் அறிந்தளவுக்குக்கூட, தமிழகத்தில் உள்ள சில பத்திரிகையாளர்கள் நம் நிலவரத்தை அறியவில்லை.

**இந்தவாரப் பொன்மொழி:**

"ஒவ்வொருவரும்
தன்னைக் கெட்டிக்காரன்
என்று நினைப்பதால்
உலகில் நிறைய
முட்டாள்கள் உருவாகிவிடுகிறார்கள்!"



படிப்பகம்

www.padippakam.com



# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# பிரேமாவைக் கவிழ்க்க நடந்த இரகசியச் சதி

**1991** ஆகஸ்ட் மாதத்தில் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணை கொண்டு வரப்பட்டது.

அத்துலத்முதலி, காமினி திசாநாயக்கா ஆகியோரே குற்றவியல் பிரேரணையை தயாரிப்பதிலும், பாராளுமன்ற உறுப்பினர்களது கையொப்பங்களைப் பெறுவதிலும் தீவிரமாகச் செயற்பட்டனர்.

ஐ.தே.கட்சிக்குள் இருந்தபடியே இவர்கள் இருவரும் பிரேமதாசாவுக்கு எதிராக சதி செய்தனர். பிரேமதாசா அதி புத்திசாலி. கட்சிக்குள் தனது பிடியை இறுக்கமாக வைத்திருந்தவர். அவ்வாறான ஒருவருக்கே தெரியாமல் குற்றவியல் பிரேரணைக்கு ஆதரவாகக் கையெழுத்து வேட்டை நடந்ததுதான் ஆச்சரியம்.

ஐ.தே.கட்சிக்குள் மட்டுமன்றி எதிர்க்கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருந்தும் ஆதரவைத் திரட்டினார்கள்.

சுமார் நூற்றிப் பதினாறு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கையொப்பம் பெறப்பட்டது. சபாநாயகர் முஹமட்டும் ஆரம்பத்தில் அத்துலத்முதலி அணிக்கு ஆதரவாகவே இருந்தார்.

சபாநாயகரின் ஆதரவு இருந்ததால்தான் குற்றவியல் பிரேரணையைக் கொண்டு வந்து, ஜனாதிபதியைக் கவிழ்க்கலாம் என்று திடமாக நம்பி, அதற்கான முயற்சியில் இறங்கியிருந்தனர்.

சபாநாயகரின் ஆதரவு தமக்கிருப்பதை கூறித்தான் பலரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

எனினும்சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் மூலமே இறுதியாக பிரேமதாசாவுக்கு தகவல் எட்டியது.

குறித்த பிரேரணைக்கு ஆதரவாக கையொப்பம் போட அவர் மறுத்ததுடன், அப்பிரேரணை பற்றி உடனடியாக பிரேமதாசாவுக்குத் தெரியப்படுத்தினார்.

பிரேமதாசா இப்படியொரு திருப்பம் வரும் என்பதையோ, தனக்கெதிராக கட்சிக்குள் கையொப்ப வேட்டை நடக்கும் என்பதையோ எதிர்பார்க்கவில்லை.

தகவல் அறிந்து பிரேமதாசா உஷார் அடையமுன்பே அத்துலத் முதலி அணி பல படிகள் முன்னேறிவிட்டது.

பிரேமதாசாவுக்கு எதிரான குற்றப் பிரேரணை முன்மொழிவு சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. சபாநாயகர் அதனைப் பெற்றுக் கொண்டார்.

அடுத்த கட்டமாக பாராளுமன்ற விவாதம் நடத்துவதா? வாக்கெடுப்புக்கு விடுவதா? என்பதைத் தீர்மானிக்கும் நாயகர் சபாநாயகர் தான்.

சபாநாயகரின் நிலை என்ன? என்பதே நாடெங்கும் பரபரப்பான எதிர்பார்ப்பாக இருந்தது.

இலங்கை அரசியல் வரலாற்றில் அதற்கு முன் காணாத நெருக்கடி என்று இதனை நிச்சயமாக விவரிக்கலாம்.

பிரேமதாசா கவிழ்வது நிச்சயம் என்றே பொதுவாக நம்பப்பட்டது.

அரசியல் விற்பன்னர்கள் என்று கருதப்பட்ட பலரும் பிரேமதாசா பதவி இழப்பார் என்றே கூறினார்கள்.

பிரேமதாசாவை ஆதரித்த பலரும் மதில் மேல் பூனைகளாக மாறினார்கள். அவர்களில் பலர் பிரேமதாசாவிடம் பலன் பெற்றவர்கள்.

குற்றவியல் பிரேரணையில் கையொப்பம் போட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர, மேலும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரேமதாசாவுக்கு எதிரான பிரேரணைமீது வாக்கெடுப்பு நடைபெற்றால் அவருக்கு எதிராக வாக்களிக்கத் தயாராக இருந்தனர்.

சபாநாயகரின் முடிவில்தான் எல்லாமே தங்கியிருந்தது. சபாநாயகருக்கு பிரேமதாசாமீது தனிப்பட்ட விரோதம். அவரது மகனுக்கு பதவி கொடுக்கவில்லை என்று மனக்கிலேசம் இருக்கிறது. அதனால் கண்டிப்பாக பிரேமதாசாவைக் கவிழ்க்க கைகொடுப்பார் என்று அத்துலத் முதலி அணியினர் நம்பிக்கையாக பிரசாரம் செய்தனர்.



பிரேமதாசாவை அப்போது தீவிரமாக ஆதரித்த தமிழ்க் கட்சிகள் ஈ.பி.டி.பி, புளொட், ரெலோ ஆகியன. இவற்றில் புளொட் அத்துலத் முதலியுடனும் நெருக்கம் என்பதால் குற்றவியல் பிரேரணை குறித்து மௌனம் சாதித்தது. ரெலோவும் மௌனமாக இருந்து அவதானித்தது.

ஈ.பி.டி.பி. மட்டுமே குற்றவியல் பிரேரணை கொண்டுவரப்பட்ட நாளில் இருந்து பிரேமதாசாவை ஆதரித்து பகிரங்கமாகவே அறிக்கைகள் வெளியிட்டது.

கொழும்பில் திடீரென்று பிரமாண்டமான சுவரொட்டிகள் காணப்பட்டன. பிரேமதாசா குற்றவாளிதான் என்று தலைப்பிடப்பட்டிருந்தன.

உடனடியாக பார்த்ததும் பிரேமதாசாவுக்கு எதிரான சுவரொட்டிகள் போன்று தெரியும். தொடர்ந்து வாசகங்களை படித்தால்தான் அது பிரேமதாசாவுக்கு ஆதரவானது என்பது தெரியும்.

இச் சுவரொட்டியும் அதன் வாசகங்களும் பெரும் பரபரப்பாகப் பேசப்பட்டன. இதனை ஈ.பி.டி.பியே வெளியிட்டிருந்தது. சுவரொட்டி வாசகங்கள் ஈ.பி.டி.பியின் அன்றைய அரசியல் செயலாளர் ரமேசினால் தயாரிக்கப்பட்டிருந்தன.

இச் சுவரொட்டிகளை கொழும்பில் ஒட்டும் போது பிரேமதாசாவின் ஆதரவாளர்கள் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களை நோக்கி தாக்கச் சென்றுவிட்டனர். பின்னர் முழுவதும் படித்துவிட்டுத்தான் சமாதானமாயினர்.

'ஈ.பி.டி.பியின் இந்த ஆதரவுச் செயற்பாடு பலராலும் விமர்சிக்கப்பட்டது. பிரேமதாசா கவிழ்வது உறுதி. ஈ.பி.டி.பியின் கதையும் முடியப் போகிறது. பேசாமல் இருப்பதுதான் புத்திசாலித்தனம்' என்று ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தாவிடம் பலரும் கூறினார்கள்.

இக் கட்டத்தில் தமது பாராளுமன்றப் பதவிகளை துறந்துவிட்டு இருந்த யாழ் மாவட்ட ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்களை மறுபடி அழைக்க விரும்பினார் பிரேமதாசா.

விடுதலைப் புலிகளும் ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மறுபடி பாராளுமன்றம் செல்வதற்கு தடையை தளர்த்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அத்துலத்முதலி அணியினர் உட்பட எதிர்க்கட்சிகள் பெரும்புரளிகளைக் கிளப்பினார்கள்.

பிரேமதாசாவும், பிரபாகரனும் தினமும் காலையில் தொலைத் தொடர்பு சாதனம் மூலம் பேசிக் கொள்வதாக கூறினோமே. அது உண்மைதான் என்று தெரிகிறதல்லவா?

'பிரேமதாசாவுக்கு ஆபத்து என்றதும் பிரபாகரன் உதவத் துடிக்கிறார் பாருங்கள். ஈரோஸ் எம்.பிகள் கொழும்பு வரப்போகிறார்கள். அதற்கு கைமாறாக பிரேமதாசா புலிகளுக்கு ஆயுதம் கொடுக்கப்போகிறார்.'

இவ்வாறெல்லாம் துளியும் உண்மையில்லாத பிரசாரங்களில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டன. பீதியைக் கிளப்பின.

## சமாளிப்பு

இதற்கிடையே சபாநாயகரை பிரேமதாசா ஒருவாறு சமாளித்து முடித்துவிட்டார். கையொப்பம் போட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் தாம் கையொப்பமே போடவில்லை என்று கரணமடித்தனர்.

"கையொப்பங்கள் நம்பகமாக இல்லையென்பதால் குற்றவியல் பிரேரணையை ஏற்பதற்கில்லை!" என்று சபாநாயகர் அறிவித்ததோடு மிகப்பெரும் நெருக்கடி முடிவுக்கு வந்தது.

தனது நெருக்கடியான நிலையிலும் ஈ.பி.டி.பி. ஆதரவு அளித்ததுக்கு பிரேமதாசா நன்றி கூறினார்.

பிரேமதாசா அரசுடன் ஈ.பி.டி.பி கட்சிக்கு உறவு மேலும் வலுவடைய அதுவும் ஒரு காரணம் என்று கூறலாம். அப்போது ஈ.பி.டி.பிக்கு எதிராக சிறீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட அத்துலத் முதலி அணியினரும் கடும் எதிர் பிரசாரங்களில் ஈடுபட்டனர்.

பிரேமதாசாவின் உத்தரவுப்படி ஈ.பி.டி.பி தென்னிலங்கை அரசியல் தலைவர்களை தீர்த்துக்கட்ட உள்ளதாக பொதுஜன முன்னணியின் பத்திரிகை மாநாடுகளில் கூறப்பட்டது.

பொதுஜன முன்னணிக்கு அப்போது பகிரங்கமாக ஆதரவு கொடுத்த ஒரேயொரு கட்சி ஈ.பி. ஆர்.எல்.எஃப் மட்டுமே.

## கிழக்கில் தாக்குதல்

1991 இறுதிப் பகுதியில் கிழக்கு மாகாணத்தில் பல தாக்குதல்கள் புலிகளால் தொடுக்கப்பட்டன.

125 நாட்களாக புலிகள் கிழக்கில் நடத்திய பரவலான தாக்குதல்களில் 435 படையினர் பலியானார்கள். இம்மோதல்களில் 86 புலிகள் பலியானார்கள்.

மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை ஆகிய மாவட்டங்களிலேயே புலிகளது தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

புலிகளது தாக்குதல்கள் தீவிரமானதால் கிழக்கில் கைது நடவடிக்கைகளும் தீவிரமாகின. பொது மக்கள் மீதான பதிலடிகளும் நடைபெற்றன.

முகாம் அருகிலேயே தாக்குதல்கள் நடைபெற்றதால் படையினரின் நடமாட்டமும் கிழக்கில் மட்டுப்படுத்தப்பட்டது.



பிரபாவுடன் கருணா

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட புலிகளின் தளபதியாக கருணா அப்போது பொறுப்பு வகித்தார்.

"கிழக்கில் புலிகளது நடவடிக்கைகள் தீவிரமானதால், எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் துள்ளிக்குதித்தன!

கிழக்கு மாகாணத்தை புலிகளிடம் அரசு இழந்து வருகிறது. இதுதான் நீங்கள் போர் செய்யும் இலட்சணமா? உங்களால் புலிகளை வெல்ல முடியுமா? முடியாது." என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசத் தொடங்கினார்கள்.

எதிர்க்கட்சிகளது வாயை அடக்குவதற்காக மட்டக்களப்பு தொப்பிகலை காட்டுப் பகுதியை நோக்கி படை நடவடிக்கை ஆரம்பமானது.

புலிகளது முக்கிய தளம் அழிக்கப்பட்டதாகச் செய்தி கூறப்பட்டது. புலிகள் பாரிய இழப்புடன் பின்வாங்கினர் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஆனால் புலிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. தென்னிலங்கையில் பிரசார நடவடிக்கைகளுக்கு ஏற்பவே செய்திகள் கூறப்பட்டு வந்தன.

இதற்கிடையே மணலாற்றை கைப்பற்ற 'ஒப்பரேசன் சிக்ஸர்' என்ற பெயரில் மற்றொரு பாரிய படை நகர்வை படையினர் ஆரம்பித்தனர்.

(தொடர்ந்து வரும்)

## மூன்று திருத்தங்கள்



ஆனையிறவுச் சமரில் பலியான புலிகளது தாக்குதல் அணித் தளபதிகளில் ஒருவரது பெயர் லெப்டினன்ட் கேணல் சூட்டி. அச்சுத்தவறு காரணமாக குட்டி என்று இடம் பெற்றுவிட்டது. சூட்டி மாத்தையாவின் மெய்ப்பாதுகாவலர் பிரிவிலும் இருந்தவர். சாவகச்சேரி கெருடாவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பது மேலதிகமான தகவல்.

ஆனையிறவில் பலியான இன்னொரு புலிகள் இயக்க உறுப்பினர் பெயர் குகதாஸ். அதுவும் தவறுதலாக சுகதாச என்று இடம்பெற்றுவிட்டது. குகதாஸ் இந்தியப் படை காலத்தில் பல்வேறு தாக்குதல்களில் பங்கெடுத்தவர். இந்தியப் படையினரால் கைதாகி இருந்தபோது தப்பிச் சென்றவர் என்பது அவர் பற்றிய மேலதிகத் தகவல்.

மூன்றாவது என்னுடைய தவறு. புலிகளின் காவல்துறை அணிவகுப்பு நடைபெற்றது யாழ் பல்கலைக்கழக மைதானம் என்று குறிப்பிட்டிருந்தேன். அது தவறு. யாழ் பழைய பூங்காவிலேயே அணிவகுப்பை பிரபாகரன் ஏற்றிருந்தார். தவறுக்கு மன்னிக்கவும்.

# மறுபிறவி 02

## சுபா சுந்தரம்

*ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்று, மேன் முறையீட்டில் விடுதலையானவர் புகைப்படப் பிடிப்பாளர் சுபா சுந்தரம். ராஜீவ் கொலை வழக்கு தொடர்பான புதிய தகவல்கள், விசாரணை நடந்த முறைகள் பற்றி அவர் கூறும் தகவல்கள் புதியவை. கண்டிப்பாக நாம் அறிந்து கொள்ள வேண்டியவை.*

பறவைகள் கூடுகளுக்கு திரும்பிக் கொண்டிருந்தன. சாயங்கால சூரியனின் நிறம், எங்களைப் பார்த்து 'மீண்டும் ஒரு பொற்காலம் உங்களுக்கு உண்டு' என்று சொல்வது போல் இருந்தது.

98-ம் ஆண்டு ஜனவரி 27-ந் தேதியின் மாலைநேரம் எங்களுக்குள் எதிர்பார்ப்பு, பதட்டம், நம்பிக்கை, பயம் எல்லாவற்றையும் கலந்து விதைத்துக் கொண்டிருந்தது.

ராஜீவ் கொலை வழக்கை விசாரித்த சிறப்பு நீதிமன்ற நீதிபதி நவநீதம், நாளைய தினம் தீர்ப்பை வெளியிடப்போகிறார் என்பதை நினைக்கின்ற ஒவ்வொரு நொடியிலும் பூந்தமல்லி சிறையில் இருந்த எங்கள் 26 பேருக்குள்ளும் பலவிதமான உணர்ச்சி அலைகள்! சில அலைகள், புயல் வேகத்தில் சீறுவதுபோல் இருந்தன. சில அலைகள் [illegible]க்கு தலையசைப்பது போல் இருந்தன.

[illegible]ழகத்திலேயே சிறைச்சாலையும், சிறைச்சாலையை ஒட்டியே நீதிமன்றமும் இருப்பது பூந்தமல்லியில்தான். உள்ளே நான்கு கட்டடங்கள் (Blocks) அவற்றில் தனித்தனி செல்கள். நாங்கள் 26 பேரும் தனித்தனி செல்களில் அடைக்கப்பட்டிருந்தோம்.

பெண்களுக்கென்று தனிக்கட்டடம். எனது கட்டடத்தில் நான் (சுபாசுந்தரம்), சிவரூபன், சாந்தன், பாஸ்கர், விஜயானந்தம், சண்முகவடிவேல் என தனித்தனி செல்களில் இருந்தோம். மாலை 6 மணிக்குமேல், கூண்டுக்குள் அடைக்கப்படும் சர்க்கஸ் விலங்குகளாக நாங்கள் செல்களுக்குள் சென்று விடவேண்டும். அதற்கு முன்பாகத்தான் எங்கள் உணர்வுகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ள முடியும்.

மறுநாள் தீர்ப்பு என்பதால் அந்த மாலை நேரத்தில் பரிமாறிக்கொண்ட கருத்துக்களில் ஒவ்வொருவரின் மன ஓட்டமும் பதிவு செய்யப்பட்டிருந்தது. எங்களில் எல்லோருக்குமே ஒரு நம்பிக்கை இருந்தது. 'விடுதலையாகி விடுவோம்' என்பதுதான் அந்த நம்பிக்கை!

இதயத்தின் ஒரு ஓரத்தில் எச்சரிக்கை உணர்வும் இருந்தது. 'ஒருவேளை தண்டனை வழங்கப்பட்டால்?' என்பதே அந்த உணர்வு. அதுபற்றி விவாதிக்கப் பயன்பட்டது அந்த மாலைப்பொழுது.

"தண்டனை கொடுத்தாலும் குறைந்தபட்ச தண்டனையாகத்தான் இருக்கும். ஏற்கனவே, நாம் ஆண்டுக்கணக்கில் சிறையில் இருந்துவிட்டதால் தண்டனைக் காலம் அதில் கழிந்திருக்கும்.

ஒருவேளை பெரிய தண்டனை கொடுத்தால், மேல்முறையீட்டில் பார்த்துக் கொள்ளலாம்!" என்றே எல்லோரும் பேசினோம்.

பேரறிவாளனிடமிருந்து (அறிவு) வெளிப்பட்ட குரல் மட்டும் வித்தியாசமாயிருந்தது. அவரை சந்திக்க அவரது நண்பர்கள் பலர் அடிக்கடி மனுப் போடுவது வழக்கம்.

வந்திருப்பவர்களை சந்திப்பதற்காக உள்ள இடத்திலிருந்து பார்த்தால், சிறை அதிகாரிகளின் அலுவலகம், நீதி மன்றம், வெளிவாசல் ஆகியவை தெளிவாகத் தெரியும். தீர்ப்பு தினத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன், தன் நண்பர்களை அறிவு சந்தித்தபோதுதான் அந்தக் காட்சியைப் பார்த்திருக்கிறார்.

5 டெம்போ (சிறிய லொறி போன்ற வாகனம்) வாகனத்தில் கட்டுக்கட்டாக பேப்பர்கள் இறக்கப்படுவதை திகிலுடன் பார்த்த அறிவு, அந்த பேப்பர்கள் நீதிமன்றத்திற்குள் எடுத்துச் செல்லப்படுவதைக் கண்டவுடன் 'கனமான' தீர்ப்புத்தான் என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறார்.



அந்தக் கட்டுக் கட்டான காகிதங்களில்தான் எங்கள் தலையெழுத்தை தீர்மானித்து கையெழுத்திட்டிருக்கிறார் நீதிபதி.

இதைத்தான் அந்த மாலை நேரத்தில் என்னிடம் தெரிவித்தார் அறிவு. "அண்ணே.. நீங்க ஏதோ ஒரு நம்பிக்கையிலே இருக்காதீங்க. 5 டெம்போவிலே பேப்பர் வந்து இறங்கியிருக்கு. எல்லோருக்கும் தண்டனை நிச்சயம் போலிருக்கு!" என்றார்.

அப்போதும்கூட எங்களின் நம்பிக்கை தளரவில்லை. எவ்வளவு பெரிய தண்டனையாக இருந்தாலும், அது தூக்குத்தண்டனையாக இருந்தாலும் மேல்முறையீட்டில் நொறுக்கித் தள்ளிவிடலாம் என்பதே எங்களின் அழுத்தமான நம்பிக்கை.

'தூக்குத் தண்டனை' என்ற சொல்லை யார் பிரயோகித்தாலும் எங்களுக்கு நகைச்சுவையாகத்தான் இருந்ததே தவிர, அச்சுறுத்தலாக இல்லை.

"எல்லோருக்கும் தூக்குப் போட்டால், உங்களுக்கு கிரேன் வச்சுதாண்ணே தூக்கு போடணும்" என்று என்னைப் பார்த்து சுசீந்திரன் சொன்னபோது நான் உட்பட எல்லோருமே கவலை மறந்து சிரித்தோம்.

எங்களுடன் இருந்த இன்னொருவர் கனகசபாபதி- ஈழத்துக்காரர். அவர் பேசும்போது எதற்கெடுத்தாலும் "எங்கட நாட்டுல.. எங்கட.. நாட்டுல' என்று மூச்சுக்கு முன்னூறு தரம் சொல்வார்.

அவர் அப்படிச் சொல்லும்போது எங்களுக்கு சிரிப்பாக இருக்கும். அவரைக் கிண்டல் செய்து பேசுவதென்றால் எல்லோருக்குமே உற்சாகம்.

அவரைப் பார்த்து அறிவு, சுசீந்திரன் எல்லோரும் "தூக்கு போடும்போதுகூட இவர் அந்த கயிறை பார்த்துவிட்டு எங்கட நாட்டுல இதவிட நல்ல கயிறு இருக்கும்னு சொல்லப்போறாரு" என்றதும் மறுபடியும் சிரிப்பால் அதிர்ந்தது அந்த மாலைநேர சிறைச்சாலை- மறுநாள் வெளியாகப் போகும் தீர்ப்பின் வழக்கும் தீவிரம் அறியாமல்!

தீர்ப்பு தினமும் வந்தது.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# தடுக்கப்பட்ட ஊர்வலம் நடத்தப்பட்ட பேரணி

கொழும்பு மாநகரில் மாபெரும் ஊர்வலம் ஒன்றை பொதுஜன முன்னணியினர் நடத்தி முடித்துள்ளனர்.

தமது ஆட்சியின் ஐந்தாண்டு காலத்தை குறிக்கும் முகமாகவே இப் பேரணியும், பொதுக்கூட்டமும் பிரமாண்ட முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இப் பேரணியை முன்னிட்டு கொழும்பு நகரின் முக்கிய வீதிகள் 21.08.99 அன்று முற்பகல் பத்துமணி முதல் இரவு 8 மணிவரை போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டிருந்தன.

இந்த பேரணியும், பொதுக்கூட்டமும் பொது ஜன முன்னணி ஆட்சியின் சாதனைகளை குறிப்பதற்கான கொண்டாட்டமாக இருந்தபோதும், பொது ஜன முன்னணி ஆட்சியின் முன்னுக்குப் பின் முரணான போக்கையும் துல்லியமாக எடுத்துக்காட்டியுள்ளது.

இதற்கு சில வாரங்களுக்கு முன்னர்தான் ஐ.தே.கட்சியினர் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று அவசரகால சட்ட விதிகளின்கீழ் தடுத்து நிறுத்தப்பட்டு பொலிசாரின் தாக்குதலுக்கு உள்ளானது.

இந்த ஊர்வலத்தில் செய்தி சேகரிக்க சென்ற பத்திரிகையாளர்களும் பொலிசாரினாலும் சிவில் உடை தரித்த குண்டர்களாலும் தாக்கப்பட்டிருந்தனர்.

இதனைக் கண்டித்து செய்தி ஊடகவியலாளர்கள் கண்டன ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள்.



அந்த ஊர்வலமும் பொலிசாரின் தாக்குதலுக்கு உள்ளானது. அவசரகால சட்டத்தின் இரும்புக்கரம் செய்தி ஊடகவியலாளரின்மீதும் பாய்ந்தது.

தலைநகரில் கரும்புலிகள் ஊடுருவி இருப்பதால், இந்த ஊர்வலங்களுக்குள் புகுந்து விபரீதங்களை உருவாக்கிவிடலாம் என்று கருதியே மேற்படி இரு ஊர்வலங்களும் தடுத்து நிறுத்தப்பட்டதாக பொலிஸ் தரப்பு மூலமாக ஆட்சியாளர்கள் விளக்கம் கூறியிருந்தனர்.

செய்தி ஊடகவியலாளர்கள் ஆயிரக்கணக்காக அணிவகுத்து செல்லவில்லை. நூற்றுக்கணக்கானோர்தான் ஊர்வலத்தில் பங்கு கொண்டிருந்தனர்.

இத்தகைய ஊர்வலம் ஒன்றுக்குள் கரும்புலிகளோ வேறு சக்திகளோ ஊடுருவியிருந்தால் கண்டுபிடிப்பது கடினமானதும் அல்ல.

பொலிசார் மூலமாக ஆட்சியாளர்கள் கூறிய விளக்கம், பொ.ஐ.முன்னணி நடத்திய பேரணியின் பின்னர் வேடிக்கையான விளக்கமாகியுள்ளது.

நூற்றுக்கணக்கான செய்தி ஊடகவியலாளர்களுக்குள் கரும்புலிகள் ஊடுருவிவிடுவர் என்று அஞ்சிய பொலிஸார், பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்ட பேரணியை எவ்வாறு அனுமதித்தனர்? இவ்வாறான பெரும் கூட்டத்துக்குள் கரும்புலிகள் அணி அணியாக ஊடுருவினால்கூட கண்டுபிடித்திருக்க முடியாது.

எனவே, ஐ.தே.கட்சியின் ஆர்ப்பாட்ட ஊர்வலம், செய்தி ஊடகவியலாளரின் கண்டன ஊர்வலம் ஆகியவற்றை தடுத்து நிறுத்தி தாக்கியதற்கு கூறப்பட்ட விளக்கங்களில் உண்மையில்லை என்பது நன்கு தெளிவாகியுள்ளது.

தமக்கு எதிரான சக்திகளை ஒடுக்குவதில் பொது ஜன முன்னணி ஆட்சியாளரும் சளைத்தவர்களல்ல என்பதையே ஊர்வலங்கள்மீது பொலிஸாரை ஏவிவிட்ட சம்பவங்கள் நிரூபித்துள்ளன.

அதுமட்டுமன்றி விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை கூறியே தேர்தல்களை சந்தித்து வரும் ஆட்சியாளர், தமக்கு எதிரான அபிப்பிராயங்களை ஒடுக்குவதற்கும் புலிகளது பெயரை இழுத்தே தப்பிக்கப் பார்க்கின்றனர்.

செய்தி ஊடகவியலாளர்களின் ஊர்வலத்தில் கரும்புலிகள் ஊடுருவ வேண்டிய தேவையே இல்லை.

தென்னிலங்கையில் ஆட்சியாளருக்கு எதிரான போராட்டங்கள் வெடிப்பதையும், தீவிரமாவதையும் புலிகள் விரும்புவார்களேதவிர, அவற்றை சீர்குலைக்கும் விதமாக செயற்படமாட்டார்கள் என்பது சாதாரணமாக தெரியக்கூடிய உண்மையாகும்.

எனவே, இன்றைய யுத்தமும், புலிகளுக்கு எதிரான ஆட்சியாளரின் பிரசாரங்களும் ஆட்சியாளரின் சொந்த நலன்களையே முதன்மையாகக் கொண்டுள்ளன என்பது சற்றும் ஐயத்துக்கிடமின்றி புலனாகியுள்ளது.

# உலகை ஏமாற்றும் இணக்கப்பாட்டு முயற்சி

## அலசுவது - இராஜதந்திரி

எதிர்க்கட்சிகளையும் அவற்றின் குரல்வளைகளையும் நெரிக்கும் விதமாக செயற்பட்டுக் கொண்டே, இனப்பிரச்சனைத் தீர்வுக்கு எதிர்க்கட்சி ஒத்துழைக்க வேண்டும் என்று கோருவது அப்பட்டமான அரசியல் மோசடிக் கோஷமாகவே அமைந்துள்ளது.

இதற்கு முன்னர் ஐ.தே.கட்சியும் இவ்வாறுதான் எதிர்க்கட்சிகளை ஒழித்துக்கட்ட குழி வெட்டியபடி, இனப்பிரச்சனை தீர்வுக்கு ஒத்துழைக்க முன்வருமாறு அழைப்பு விடுத்து, தனது சுயரூபத்தை மறைத்து நாடகமாடியிருந்தது.

இலங்கைத்தீவின் வரலாற்றில் ஆளும் தரப்பும், எதிர்க்கட்சிகளும் இனப்பிரச்சனை தீர்வுக்கு மட்டுமன்றி வேறு எந்த பொதுப் பிரச்சனையிலும் பொது இணக்கத்தோடு செயற்பட்டது கிடையாது.

தற்போதும் முன்பைவிட நிலமை சீர்கேடு அடைந்துள்ளது. குறிப்பாக பொ.ஐ.முன்னணிக்கும் ஐ.தே.கட்சிக்கும் இணக்கப்பாடு என்ற பேச்சுக்கே இடமின்றி முரண்பாடுகள் கூர்மையடைந்துள்ளன.

தேர்தல்களும் நெருங்கி வருவதால் அம் முரண்பாடுகள் மோதல்களாக வெடித்துள்ளன. பொ.ஐ.முன்னணியும் தனது அதிகாரத்தை பயன்படுத்தி ஐ.தே.கட்சியை ஒடுக்கவும் முடிந்தால் ஒழித்துக்கட்டவும் முனைப்போடு நிற்கிறது.

ஐ.தே.கட்சியின் ஊர்வலத்தை தடுத்து நிறுத்திவிட்டு, அதே கொழும்பு மாநகரில் பொ.ஐ.முன்னணி மாபெரும் பேரணியை நடத்தியதிலும் அந்த முனைப்பே மேலோங்கியிருந்தது.

> “ஆளும் அணி-எதிரணி முரண்பாடு என்பது ஆட்சியதிகாரத்தை தக்கவைக்கவும் கைப்பற்றவும் நடக்கும் போராட்டமாகும். இதனைத் தீர்க்கவும் முடியாது. இனப்பிரச்சனை தீர்வுக்கு இணக்கப்பாடு காண்பதும் முடியவே முடியாது”

இந்நிலையில் தாம் கண்ணை முடிக்கொண்டு உலகமே இருண்டுவிட்டதாக கூறும் பூனைகள்போலவே தமிழ்க் கட்சிகளும், தமது நலனின் பொருட்டு சமாதான வேடம் போடும் வர்த்தகர்கள் சங்கமும் 'இணக்கப்பாடு' பற்றி பேசிக் கொண்டிருக்கின்றன.

ஆட்சியாளரும், ஐ.தே.கட்சியும் இணக்கம் காண்பது என்பது ஏதோ சில நல்லெண்ணம் கொண்டோரின் முயற்சியில் தங்கியிருக்கும் விடயமல்ல.

இரு தரப்பின் இணக்கமின்மைக்கு சந்திரிக்கா அம்மையாருக்கும், ரணிலுக்கும் இடையிலான தனிப்பட்ட விரோதங்களும் காரணமல்ல. அவ்வாறு இருப்பின் நல்லெண்ணம் கொண்டவர்கள் இருவருக்கும் இடையே தூது சென்று கசப்புக்களை களைய முயற்சிக்கலாம்.

ஆனால், பொ.ஐ.முன்னணிக்கும், ஐ.தே.கட்சிக்கும் இடையே நிலவுவது அதிகாரத்தை தக்கவைப்பதற்கும், அதனை கைப்பற்றுவதற்குமான போட்டியாகும்.

இந்தப் போட்டியில் இரு தரப்புமே நேர்மை, உண்மை, வெளிப்படையான போக்கு போன்றவற்றை காற்றில் பறக்கவிட்டுள்ளன.

இனப்பிரச்சனை தீவிரமானதுகூட மேற்படி போட்டியின் விளைவுகளில் ஒன்றேயாகும். பேரினவாத பூதத்தை யார் திருப்தி செய்வது என்ற போட்டியில் மேற்படி இரு பிரதான கட்சிகளும் குதித்த காரணத்தில்தான், ஏட்டிக்குப் போட்டியான இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளும், சட்டங்களும் கொண்டு வரப்பட்டன.

இனப்பிரச்சனை தீருமானால் இரு அணிகளுமே தற்போதுள்ளதுபோல குளிர்காய முடியாது போய்விடும் என்பதும் முக்கியமான உண்மையாகும்.

புலிகளை ஒடுக்குவது மூலம் சிங்கள பேரினவாதத்தின் மத்தியில் வீரபுருஷியாக புகழ்பெறுவதுடன், சிங்கள மக்களை திருப்தி செய்யக்கூடிய அரைகுறைத் தீர்வுப் பொதியை தமிழ் மக்களின் தலையில் கட்டியடிக்கவே ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் விரும்புகிறார்.

அவ்வாறு நடைபெறுமானால் மேலும் குறைந்தது பத்து வருடங்களுக்கு அம்மையாரை ஆட்சிக் கட்டிலில் இருந்து அகற்றவே முடியாது போகும் என்பதால்தான் ஐ.தே.கட்சி அரை குறையைப் பொதியை எதிர்க்கிறது.

இந்த அரசியல் நிலையை புரிந்து கொள்ளாத அரசியல் கற்றுக் குட்டிகளான தமிழ்க் கட்சிகளும், சில விமர்சகர்களும் தவறான வியாக்கியானங்களை கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

பொ.ஐ.முன்னணி தமிழ் மக்களுக்கு சிறந்த தீர்வொன்றை முன்வைத்திருப்பது போன்றும், அதனால்தான் ஐ.தே.கட்சி அதனை எதிர்ப்பது போன்றும் சித்தரிக்க முற்படுகின்றனர். அல்லது ஐ.தே.கட்சி ஒத்துழைத்தால் அருமையான தீர்வொன்றை பொ.ஐ.மு. ஆட்சியாளர்கள் முன்வைத்துவிடுவர் போன்று, நடக்கவே முடியாத நிகழ்வுகளை கற்பனை செய்து கூறிவருகின்றனர்.

தீர்வுப் பொதி அரைகுறைப்பொதி என்பது ஐ.தே.கட்சிக்கும் நன்கு தெரிந்தே உள்ளது.

அதேபோல ஐ.தே.கட்சி ஆட்சியில் இந்திய-இலங்கை ஒப்பந்தம் நாட்டைப் பிரிக்க வழிவகுக்காது என்பது சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் நன்கு தெரிந்தே இருந்தது. அவ்வாறிருந்தும் நாட்டைப் பிரிக்க வழிகோலும் ஒப்பந்தமாக அதனை சிங்கள மக்களிடம் பிரசாரம் செய்திருந்தனர்.

எனவே, எதிர்க்கட்சியாக இருக்கும் ஒரு கட்சி இனப்பிரச்சனைக்கு தீர்வாக எலும்புத் துண்டுகளை ஆளும் கட்சி வீசினாலும்கூட அதனையும் ஆதரிக்கமாட்டாது.

இதன் காரணம் சிங்கள மக்கள்மீது கொண்ட பாசம் மட்டுமே என்று கருதிவிடலாகாது. ஆட்சியதிகாரத்தின்மீது கொண்ட காதலே அடிப்படைக் காரணமாகும்.

பொது ஜன முன்னணியும், ஐ.தே.கட்சியும் அடிப்படையிலேயே சுயநல மோகம் கொண்ட கட்சிகளாகும் தமது அரசியல் வெற்றிகளுக்கு கீழ்ப்பட்ட ஒன்றாகவே பொது நலத்தை இவை அணுகிவந்துள்ளன.

எனவேதான் எதிர்க்கட்சியாக இருந்தபோது முன்வைக்கும் கருத்துக்களை ஆளும் கட்சிகளாக மாறும்போது இவற்றால் கடைப்பிடிக்க முடிவதில்லை. காற்றில் பறக்க விடப்படுகின்றன.

ஆட்சியதிகாரத்தை பிடிக்க வேண்டும் என்பதற்காகவும், ஆட்சியில் உள்ள அணியை மட்டம் தட்டி மக்களிடம் அனுதாபம் பெறவேண்டும் என்பதற்காகவுமே, மக்களிடம் விலை போகக்கூடிய கோஷங்களையும், கருத்துக்களையும் எதிர்க்கட்சியாக உள்ளபோது முன்வைக்கிறார்களே தவிர, உளப்பூர்வமாக அவற்றை ஏற்றுக்கொள்வதில்லை.

உள்ளத்துக்கும், உதட்டுக்கும் இடையிலான இந்த முரண்பாடுகள் ஆட்சிபீடம் ஏறிய பின்னரே அம்பலமாகின்றன.

இனப்பிரச்சனை தீர்வு விடயத்தில் மட்டுமல்ல, ஏனைய ஜனநாயக உரிமைகள் தொடர்பாக எதிர்க்கட்சியாக இருந்தபோது கூறிய நிலைப்பாடுகளையும் பொ.ஐ.முன்னணி ஆட்சியாளர்கள் காற்றில் பறக்கவிட்டுள்ளனர்.

போருக்கும் அவசரகால சட்டம் அவசியமில்லை. அவசரகால சட்டம் இன்றியும் போரை நடத்த முடியும். ஆனால் போரில் மனித உரிமை மீறல்களை சட்டப் போர்வை போர்த்தி மறைப்பதற்கு அவசரகால சட்டம் உதவி வருகிறது.

அதே சமயம், தென்னிலங்கையில் தமது அரசியல் எதிரிகளை நசுக்கவும் அந்த அவசரகாலச் சட்டத்தை ஆட்சியாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

பத்திரிகை சுதந்திரம் பற்றிப் பேசியும், பத்திரிகையாளர்களது அமோக ஆதரவுடனுமே பொ.ஐ.மு. பதவிக்கு வந்தது.

தற்போது வருடக்கணக்காக பத்திரிகை தணிக்கை தொடர்வதோடு, செய்தி ஊடகவியலாளரும் கரும்புலிகளை சாக்காக வைத்து தாக்கப்பட்டுள்ளனர்.

ஜனநாயகம், மனித உரிமைகள் என்பவற்றை ஆட்சியில் உள்ளோர் தமது நலனுக்கு பாதகம் ஏற்படும்போது கட்டுப்படுத்த தயங்கமாட்டார்கள்.

போர்ச் செய்திகள் சுதந்திரமாக வெளிவருவது, தமது யுத்த வெற்றிப் பிரசாரத்தை பாதிக்கும் என்பதாலேயே பத்திரிகை தணிக்கையை ஆட்சியாளர்கள் கொண்டு வந்தனர். இரகசியம் காப்பது என்று அதற்கு அழகான முலாம் பூசப்பட்டது.

அதேபோல எதிர்க்கட்சிகளும், செய்தி ஊடகவியலாளரும் போராட்டங்கள் நடத்துவது பரந்தளவில் போராட்டங்கள் நடப்பதற்கு உந்துதலாகிவிடும் என்று கருதியே ஊர்வலம் நடத்தும் ஜனநாயக உரிமை அவசரகால சட்டத்தின்கீழ் மறுக்கப்பட்டது.

தமது நலனுக்கு பாதகமில்லாத விதமான ஜனநாயக உரிமைகளையே ஆட்சியாளர்கள் தற்போதுவிட்டுவைத்துள்ளனர். இவைகூட சர்வதேச அபிப்பிராயங்கள் போன்றவற்றை கருத்தில் கொண்டே விட்டுவைக்கப்பட்டுள்ளன.

இதிலும் சிங்கள மக்களுக்கு விட்டுவைக்கப்பட்டுள்ள அரசியல், ஜனநாயக உரிமைகளிலும், மனித உரிமைகளிலும் பலவற்றை தமிழ் மக்களிடம் விட்டுவைக்கவில்லை.

நாட்டின் ஒரு பகுதியில் இருந்து இன்னொரு பகுதிக்கு செல்வதற்குக்கூட பாஸ் பெறுவது, அனுமதிக்காக காத்துக்கிடப்பது என்று நடமாட்ட சுதந்திரம் தமிழ்மக்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறலான இந்த நடவடிக்கை சிங்கள மக்களை பாதிக்கவில்லை. இவ்வாறு பல உதாரணங்களைக் காணமுடியும்.

தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை பறிப்பதற்கும், மனித உரிமைகளை மீறுவதற்கும் இன ஒடுக்குமுறை எண்ணமே முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

ஆனால் சிங்கள மக்கள் மத்தியில் ஜனநாயக உரிமைகளை ஆட்சியாளர்கள் கட்டுப்படுத்த முற்படுவதற்கு ஆட்சியதிகாரத்தை பாதுகாக்கும் நோக்கமே பிரதான காரணமாக விளங்குகின்றது.

வேலை நிறுத்தம் செய்வது என்பது தொழிலாளர்கள் நீண்டகாலமாகப் போராடிப் பெற்றுள்ள உரிமையாகும்.

அதனை ஐ.தே.கட்சி ஆட்சியாளர்கள் மறுத்தபோது பொ.ஐ.முன்னணி எதிர்த்துக் குரல் கொடுத்திருந்தது. வேலை நிறுத்தங்களை முன்னின்று நடத்தியுமிருந்தது.

ஆனால் தற்போது வேலை நிறுத்தங்கள் நடைபெறும்போது அவற்றை ஒடுக்க அவசரகால சட்ட விதிகளை பயன்படுத்துவது மட்டுமன்றி புலிகளோடும் தொடர்புபடுத்துகின்றனர்.

மின்சார சபையினர் நடத்திய வேலை நிறுத்தத்தை புலிகளோடு இணைந்து ஐ.தே.கட்சி தூண்டிவிட்டதாகவே பொ.ஐ.மு. ஆட்சியாளர்கள் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியிருந்தனர். யானைக்குப் பின்னால் புலிகள் மறைந்து நிற்பது போலவும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

எனவே, ஆளும் கட்சியின் பணி எதிர்கட்சிகளை தலையெடுக்காமல் தடுப்பதே, எதிர்க்கட்சியின் பணி ஆளும் கட்சியை விரைவாக வீட்டுக்கு அனுப்புவதே. இதுதான் இங்குள்ள அரசியல் கோட்பாடாகும். இந்த கோட்பாட்டின் அடிப்படையில்தான் இனப்பிரச்சனை தீர்வு முதற்கொண்டு, ஜனநாயக உரிமைகள் வரை கையாளப்படுகின்றன.



மேலும் 25 ஆண்டுகளுக்காவது இந்தப் போக்கு மறைவதற்கான அடிப்படை மாற்றங்கள் இங்கு நிகழும் சாத்தியங்கள் காணப்படவில்லை.

இதனைப் புரியாது இரு கட்சிகளும் இணக்கம் காணத் தயாராக உள்ளதாக சித்தரிப்பதை தமிழ் பேசும் தரப்பு கடுமையாக எதிர்த்தாக வேண்டும்.

இச் சித்தரிப்புக்கள் இனப்பிரச்சனை தீர்வை இழுத்தடித்து இராணுவ தீர்வை முன்னெடுப்பதை முடிமறைத்து வெளியுலகுக்கு வெற்று ஆரவாரங்களையே காண்பிக்கின்றன.

எதிர்க்கட்சியுடன் பெரும் பலப்பரீட்சைக்கு பொ.ஐ.மு. ஆட்சியாளர்கள் தயாராகிவிட்டதையே கொழும்புப் பேரணி துல்லியமாக எடுத்துக் காட்டியுள்ளது.

ஏற்கனவே ஐந்தாண்டுகளுக்கு முன்பாக கொடுத்த வாக்குறுதிகளையே நிறைவேற்ற முடியாத பொ.ஐ.மு. ஆட்சியாளர்கள் அடுத்த பத்தாண்டுக்கான திட்டங்களை அறிவித்துள்ளனர். மேலும் பத்தாண்டுகாலத்திற்கு ஆட்சியை தக்கவைக்க அம்மையார் அதிக ஆர்வம் கொண்டுள்ளதையே இது வெளிப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் எதிர்க்கட்சியை ஓரம்கட்டுவதிலேயே இனிவரும் காலங்களை கழிக்கவுள்ளது பொ.ஜ.மு. அரசாங்கம் என்பது தெளிவு. எதிர்க்கட்சியை எதிரிக்கட்சியாக கருதி அரசியல் போர்க் களத்தில் புறமுதுகிட வைப்பதே பொ.ஜ.முன்னணியின் இலட்சியமாகவிருக்கும்.

எனவே 'இனப்பிரச்சனைக்கு இணக்கப்பாடு' என்ற பல்லவி தமிழ் பேசும் தரப்பு ஏமாளிகளாகுவதற்கே வழிவகுக்கும். ●

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

யாழ் குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும் செய்திகள் பெரிதாக கூறப்பட்டு வருகின்றன.

குடாநாட்டை படையினர் கைப்பற்றி நான்கு வருடங்கள் ஆகிவிட்டன. கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டிய அவசியத்தை உணர்ந்து கொள்ளவும் நான்கு வருடங்கள் தேவைப்பட்டிருக்கின்றன.

அரசாங்கம் தமக்கு போதிய ஒத்துழைப்பு வழங்காததுதான் கண்ணிவெடிகளை அகற்றும் பணி தாமதமாவதற்கு காரணம் என்று கண்ணிவெடி அகற்றும் குழுவினர் பலமாதங்களுக்கு முன்னரே கூறியிருந்தனர்.

இதுவே தென்னிலங்கையில் ஒரு பகுதியாக இருந்திருந்தால் என்ன நிகழ்ந்திருக்கும்?

ஜனாதிபதியே நேரில் நின்று பார்வையிட்டு உடனடியாக கண்ணிவெடி அகற்றும் பணிகள் நடந்திருக்கும்.

கண்ணிவெடி அகற்றும் குழு தயாராக இருந்தும் அரசாங்கம் ஒத்துழைக்க மறுத்தது என்றால் என்ன காரணம்?

தமிழர்களது கால்கள்தானே போகப்போகின்றன என்று அலட்சியம் அன்றி வேறென்ன?

தாமதத்தால் யாழ் குடாநாட்டில் ஆயிரத்து ஐநூறுக்கு மேற்பட்டோர் அங்கங்களை இழந்துள்ளனர். ஆண்கள், பெண்கள், முதியவர்கள், சிறுவர்கள் என பலதரப்பட்டோரும் கால்களை இழந்து செயற்கைக் கால்களுடன் நடமாடுகின்றனர்.

இந்த கண்ணிவெடி தொடர்பாக மாண்புமிகு தமிழ்க் கட்சிகள் கவலையேபடாமல் இருந்துவிட்டன. இப்போது கவலைப்படுவார்கள்.

ஏன் தெரியுமா? ஒரு நாலு வருடத்தின் முன்னர் இதற்காகவும் ஒரு முறையீட்டை ஜனாதிபதிக்கு கூறியுள்ளதாக அறிக்கை விட்டிருக்கலாம். அப்படி விட்டிருந்தால் தாம் அன்று முறையிட்டதால்தான் இன்று கண்ணிவெடிகள் அகற்றப்படுகின்றன என்று உரிமை கோரியிருக்கலாமே.

★★★

### மலசலகூடம் கட்டும் அதிகாரம் வழங்க உடன்பாடு!

பொ.ஐ.முன்னணிக்கும், ஐ.தே.கட்சிக்கும் இடையே உலக மகா ஒற்றுமையை கட்டியெழுப்பப்போவதாக புறப்பட்டுள்ளனர் வர்த்தக சங்கத்தினர்.

ஏன் இந்த திடீர் கரிசனை? சோழியன் குடுமி சும்மா ஆடுமா?

ஆளும் அணி முக்கியஸ்தர்கள் சிலர்தான் குறிப்பிட்ட வர்த்தகர்கள் சிலரை பின்னணியில் நின்று தூண்டிவிட்டுள்ளனர்.

ஐ.தே.கட்சிதான் தீர்வுக்குத் தடை என்று நம்ப வைப்பது ஒரு நோக்கம்.

ஆகஸ்ட் மாதம் பாராளுமன்றில் பொதியைக் கொண்டு வரப்போவதாக புரளி கிளப்பிவிடப்பட்டதல்லவா.

ஏதோ இணக்கப்பாட்டு முயற்சிகள் நடப்பதால்தான் பொதியை கொண்டு வரவில்லையாக்கும் என்று உலகை நம்பவைப்பது இரண்டாவது நோக்கம்.

மூன்றாவது நோக்கம் மிக புத்திசாலித்தனமானது. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை வலியுறுத்தி புலிகள் வெளியுலகில் பிரசாரம் செய்து வருகின்றனர்.

அன்ரன் பாலசிங்கமும், அடேலும் இராஜதந்திரிகள் பலரை சந்தித்தும் உள்ளனர்.

ஏற்கனவே பிரிட்டன், நோர்வே போன்ற நாடுகள் மத்தியஸ்தம் செய்ய நாம் தயார் என்று பகிரங்கமாகவே கூறிவிட்டன. தென்னாபிரிக்காவும் இசைவு தெரிவிக்க தயாராக உள்ளது.

இவ்வாறாக வெண்ணெய் திரளும்போது தாழியை உடைக்காது இருக்கலாமோ?

அதனால்தான் இந்த நாட்டிற்குள்ளேயே தீர்வு காணும் சந்தர்ப்பம் உருவாக்கப்படுவது போல, சல சலப்புக் காட்டப்படுகிறது.

நீதியமைச்சர் பீரிஸ் அவர்களும் பொதியில் சில விடயங்களில் ஐ.தே.கட்சியுடன் உடன்பாடு காணப்பட்டுள்ளதாக கூறியதும் அதனால்தான்.

ஆனால் 'அப்படி உடன்பாடு எதுவும் கிடையாது. பொதிக்கு எப்போதுமே இனி ஆதரவு கிடையவே கிடையாது' என்று ரணில் நெத்தியடியாகக் கூறிவிட்டார்.

உண்மையில் நடந்தது யாதெனில், பாராளுமன்ற தெரிவுக்குழு விவாதங்கள் நடந்தபோது, அடிப்படை பிரச்சனைகள் சாராத சில விடயங்களில் ஐ.தே.கட்சி உடன்பாடு தெரிவித்தது.

கக்கூஸ் கட்டுவது, நுளம்புக்கு மருந்து அடிப்பது, குப்பை அள்ளுவது போன்ற அதிகாரங்களை தமிழர்களுக்கு வழங்க மனப்பூர்வமாக உடன்பட்டது. மற்றப்படி தமிழ் பேசும் மக்களது அடிப்படை அரசியல் ஜனநாயக உரிமைகள் விடயத்தில் எவ்வித உடன்பாடும் காணப்படவில்லை.

இன்னமும் சொல்லப்போனால் இந்த உடன்பாடு கண்ட அதிகாரங்களைவிட பல மடங்கு அதிகாரங்களை இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் ஐ.தே.க. அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருந்தது. எனவே புதிதாக எந்த உடன்பாடும் ஏற்படவில்லை.

ஆனால் பொதியில் சில விஷயங்களில் ஐ.தே.க. உடன்படுவதாகக் கூறி,பொதியை நியாயப்படுத்த அரசாங்கம் முயன்றதால், உடன்பாடு என்பதே கிடையவே கிடையாது என்று நெத்தியடியாகக் கூறிவிட்டார் ரணில். பொதிக்கு அரோகரா!

www.padippakam.com

உண்மைத் தொடர்

அதிர் இடி 76

**கடந்தவாரம்**

**தனது இரண்டாவது மனைவியான கேயை கொலை செய்து அப் பழியை அவளது காதலன் டாக்டர் முக்காசாமீது போடுகிறான் அமீன். முக்காசா குடும்பத்தோடு தற்கொலை செய்ய முயற்சிக்கிறார். டாக்டர்கள் அவரைக் காப்பாற்ற அமீன் டாக்டர்களை மிரட்டி முக்காசாவை தீர்த்துக் கட்டுகிறான். இனி....**

# இடி அமீன்

டாக்டர் முக்காசாவின் மரணத்தைக் கொண்டாட தன் நாலாவது மனைவியான மெடினாவை ஜனாதிபதி மாளிகைக்கு அமீன் அழைத்தான்.

தற்போது முன்புபோல அமீன் வெளியே சென்று தன் மனைவியரைச் சந்திப்பதில்லை.

தன் உயிருக்கு ஆபத்து நெருங்கி வருகிறது என்று பயந்துபோனதால், ஜனாதிபதி மாளிகைக்குள்ளேயே இருந்து கொண்டான். முன்பைவிட தனது பாதுகாப்பையும் இரண்டு மடங்காக மாற்றிக் கொண்டான்.

மாளிகையிலேயே தன் மனைவியரை குடியமர்த்தக் கூடியதாக புதிய கட்டடங்களை நிர்மாணிக்க ஏற்பாடுகளைச் செய்திருந்தான்.

இது தவிர அவ்வப்போது அழகான பெண்களை அனுபவிக்க தனது பிரத்தியேக படுக்கை அறையையே பயன்படுத்தி வந்தான்.

மெடினாவையும் தன் பிரத்தியேகப் படுக்கை அறைக்குத்தான் அழைத்திருந்தான்.

அந்த அறையைப் பார்த்ததும் மெடினா பிரமித்துப் போனாள். அதுமாதிரியொரு பிரமாண்டமான படுக்கை அறையை அவள் இதற்கு முன்னர் பார்த்ததில்லை.

சுவர்கள் முழுக்க கண்ணாடிகள் பதிக்கப்பட்டிருந்தன. மிகப் பெரியளவான கட்டில், அறையின் நடுவே காணப்பட்டது.

மெடினா கட்டிலைப் பார்க்கும்போது அதனைக் கவனித்த அமீன், "விளையாட்டு மைதானம் பெரிதாக இருந்தால்தானே நன்றாக இருக்கும்!" என்று கூறியபடியே அவளின் பின்புறமாக நின்று கட்டியணைத்தான். அவன் கைகள் அவளது முன்புறங்களில் தாவிக்கொண்டிருந்தன.

தனது மனைவியரில் மெடினா மீதும் அமீன் அதிக பாசம் வைத்திருந்தான். வருடம் தவறாது மெடினா கர்ப்பமானாள். அமீனின் மனைவியரில் அதிக பிள்ளைகளை விரைவாகப் பெற்றுக் குவித்தவள் மெடினாதான்.

அப்படியிருந்தும் உடம்பைக் கட்டுக்குலையாது வைத்திருந்தாள். அமீனின் வேகத்துக்கும், வக்கிரத்துக்கும் சளையாது ஈடு கொடுக்கும் கலையிலும் தேர்ந்திருந்தாள்.

"எல்லோரையும் நான்தான் கதிகலங்க வைப்பேன். நீ என்னையே பொறி கலங்க வைத்துவிடுகிறாயே!" என்று அமீனே கட்டிலில் வைத்து சான்றிதழ் கொடுத்திருக்கிறான்.


மெடினா

அதனாலெல்லாம் மெடினாவுக்கும் சந்தோசம்தான். நாட்டையே கலக்கும் இடி அமீன் கட்டிலில் தன் முன்னால் பெட்டிப் பாம்பாக அடங்குவதை நினைக்க அவளுக்குச் சிரிப்பாகவும் இருக்கும்.

அதேசமயம் அமீனுக்குக் கோபம் வந்தால் அடிக்கடி உதை வாங்குவதும் மெடினாதான். கட்டிலில் தன்னை வெற்றி கொள்ளும் மெடினாவை சாதாரண சமயங்களில் அடித்தும், உதைத்தும் தன் கட்டுப்பாட்டுக்குள் அடக்கி வைத்திருப்பதில் அமீனுக்கு ஒரு தனி இன்பம்.

மெடினாவை கட்டியணைக்க அவள் கழுத்தை தன் உதடுகளால் ஒற்றியபடி, கைகளால் அவளது வயிற்றை அழுத்தியபடி கேட்டான், "மறுபடியும் வயிற்றை நிரப்பி விட்டாயா?" அவள் சிரித்து, "இன்னும் இல்லை. இனிமேல் தடுப்பு முறை ஏதாவது செய்யலாமா?" என்று கேட்டாள்.

"அவசியமில்லை மெடினா. எத்தனை குட்டிகள் வேண்டுமானாலும் போட்டுக் கொடு. நமக்கு என்ன வசதியா இல்லை? வளர்க்கலாம். எனக்கு இன்னொரு ஆசை இருக்கிறது. என்ன தெரியுமா?"

அவன் கைகள் சென்ற இடம் அறிந்து தடுத்து நிறுத்திக்கொண்டு, "என்ன ஆசை?" என்று கேட்டாள் மெடினா.

அமீன் சொன்ன பதிலைக் கேட்டு அவள் உண்மையாகவே பதறித்தான் போனாள்.

"நாளை உகண்டா இராணுவத்தை எனக்குப் பிறந்த பிள்ளைகளை வைத்தே உருவாக்க வேண்டும். அப்படிச் செய்தால் ஆபத்தே இல்லை. நிம்மதியாகத் தூங்கலாம்!" என்றான்.

அமீன் தமாஷ் பண்ணுகிறானா, உண்மையாகக் கூறுகிறானா என்று மெடினாவால் இனம் காண முடியவில்லை.

"ஐயைய்யோ அதற்காக எத்தனை பிள்ளைகளை நான் பெற்றுத் தர வேண்டும்?" என்று கலக்கமுடன் கேட்க, அமீன் அவள் காது அதிரும் விதமாக காதருகே சிரித்தான்.

"பயப்படாதே. உன்னால் முடிந்ததை நீ பெற்றுத் தா. மிகுதியை பெற்றுத் தர எத்தனையோ அழகிகள் நான் நீ என்று போட்டி போட்டுக் கொண்டு நிற்கிறார்கள்!" என்று கூறியவனை சற்றே விரோதமாகப் பார்த்தாள் மெடினா.

**"என்ன முறைப்பு? உன் வீரத்தைக் கட்டிலில் காட்டு"** என்று அவளைத் தள்ளிச் சென்று, கட்டிலில் கவிழ்த்தான். அவள் அணிந்திருந்தவற்றை ஒவ்வொன்றாய் அவிழ்த்தான்.

அவள் அமீனின் உடைகளைத் தானே அகற்றி, அவன் நெஞ்சை நீவிவிட்டு, தன்மேல் இழுத்துப் போட்டுக் கொண்டாள்.

சர்வாதிகாரி அமீன் சர்வமும் அடங்கி கட்டிலில் சக்கையாகக் கிடந்தபோது மெடினா கேட்டாள், "கேயை ஏன் கொலை செய்தீர்கள்?"

அவளுக்கு எப்படித் தெரியும் என்று அமீன் ஆச்சரியப்படவில்லை. தன் காலால் அவளை உதைத்து கட்டிலில் இருந்து கீழே வீழ்த்தினான்.

அவளுக்கு வலித்தது. கட்டிலில் அவன் தோற்றதற்கு பரிசு இது என்று அவளுக்குத் தெரியும்.

எப்போதும் இப்படித்தான். கட்டிலில் யுத்தம் முடிந்ததும், ஏதாவது ஒரு சாக்கை வைத்து அவளை உதைப்பான். அல்லது அடிப்பான். அவளுக்கு அடிவாங்கி உடம்பும் உள்ளமும் மரத்துப் போய்விட்டது.

அவளுக்கும் அமீனைவிட வேறு சில காதலர்கள் இருந்தனர். அமீனுக்குச் சந்தேகம் வராமல் அவர்களுடன் காதல் லீலைகளில் ஈடுபட்டாள்.

அமீனிடம் அனுபவிக்கும் நரக வாழ்க்கையில் அவள் சந்தோசமாக இருப்பது தானாகத் தேடிக்கொண்ட காதலர்களுடன் மட்டும்தான்.

அமீனது மெய்க்காவலர் அணியில் உள்ள ஒருவனும் மெடினாவின் காதலர்களில் ஒருத்தனாக இருந்தான்.

மெடினா தனது தாபங்களுக்கும், கோபங்களுக்கும் வடிகாலாக இருந்ததால் அவள்மீது அமீன் சந்தேகப்படவில்லை. அமீனது இரகசியப் புலனாய்வுப் பிரிவாலும் மெடினாவின் லீலைகளை மட்டும் கண்டுபிடிக்க முடியவில்லை.

அமீன் தன் மனைவியரை கண்காணிக்க புலனாய்வுப்பிரிவு ஆட்களை நியமித்த செய்தி, மெய்காவலன் ஊடாக மெடினாவுக்கு எட்டியிருந்தது.

அதனால் புலனாய்வுப் பிரிவுக்கே அவளால் தண்ணி காட்ட முடிந்தது.

மெடினா பற்றி மிகவும் நல்ல விதமாகவே புலனாய்வுக்குழு அமீனிடம் அறிக்கை சமர்ப்பித்தது.

மெடினாவை தனது மாளிகைக்கு அழைத்துவர மெடினாவின் காதலனான மெய்காவலனைத்தான் அமீன் அனுப்பி வைத்திருந்தான்.

அந்தளவுக்கு மெடினா விஷயத்தில் அமீன் ஏமாந்து போனான். அமீனை ஏமாற்றுவதில் மெடினாவும் தனி இன்பம் அனுபவித்தாள்.

மெடினாவை உதைத்து வீழ்த்திய அமீன் கட்டிலில் எழுந்து அமர்ந்துகொண்டான்.

**"கே என்ற பெயரைக் கேட்டாலே எனக்குப் பிடிக்காது. அதுதான் உன்னை உதைத்தேன். அவள் எனக்குத் துரோகம் செய்தாள்.**

## தருவது ரசிகன்

**அதற்கான பரிசை அவளுக்கும், அவளது காதலனுக்கும் கொடுத்துவிட்டேன். அவ்வளவுதான்!"** என்று சர்வ சாதாரணமாகக் கூறினான்.

மெடினாவையும் அச்சுறுத்துவது போன்றே அமீனது விளக்கம் இருந்தது. மெடினா அதனால் பயந்துவிடவில்லை. அமீனின் குரூரக் குணம் அவள் அறியாதது அல்ல. அதனால்தான் கேயின் உடல் துண்டு துண்டாக வெட்டப்பட்டு கிடப்பதாக அறிந்தபோதும் அவள் அதிர்ச்சியடையவில்லை.

தன்னைப் பற்றி அறிந்தால்கூட இப்படியான தண்டனைதான் தரப்படும் என்பதும் அவள் அறிந்ததுதான்.

நரகத்தில் கிடப்பதைவிட, வாழ்க்கையை அனுபவித்துவிட்டு சாகலாம் என்ற முடிவுக்கு எப்போதோ அவள் வந்துவிட்டாள்.

ஆனாலும் அமீன் கேயைப் பற்றிக் கூறியபோது, தான் பயந்ததுபோல விழிகளை அகட்டி பாசாங்கு செய்தாள். அவள் பயந்து போனாள் என்று நம்பிய அமீனுக்கு திருப்தியாக இருந்தது.

கேயின் உடல் மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்தது. அதனைப் பார்வையிட்ட சுகாதார அமைச்சர் சியம்பாவுக்கு மயக்கமே வந்துவிட்டது.

உடல் கண்டதுண்டமாக வெட்டப்பட்டு கிடந்தபோது இது அமீனின் கைவரிசைதான் என்பதில் சியம்பாவுக்கு சந் தேகம் இருக்கவில்லை.


இடி அமீனிடம் இருநது விலகிய பின்னர் ஒரு நாள் இந்த அனுபவம்பற்றி சியம்பா குறிப்பிடத் தவறவில்லை:

"இத்தகைய கோரக் காட்சியை நான் என்றுமே கண்டதில்லை. மருத்துவமனை உதவியாளர்கள் பிரேதம் வைக்கப்பட்டிருந்த லாச்சியை இழுத்துத் திறந்தனர்.

உடலை அடையாளம் காண்பதற்காக உடலை வைத்திருந்த சாக்கு மேற்புறமாக கிழிக்கப்பட்டிருந்தது.

தலையைப் பார்த்ததும் அதிபர் அமீனின் மனைவி கேயினுடையது என்று உடனடியாகக் கண்டுகொண்டேன். என்னை அதிர்ச்சி கௌவிக்கொண்டது. அங்கிருந்த எவரிடமும் என்னால் பேச முடியவில்லை. லாச்சியை மூடிவிடும்படி சைகை செய்தேன்.

அன்றிரவு அமீன் தொலைபேசியில் தொடர்புகொண்டு விசாரித்தார். கண்டவற்றைக் கூறினேன்." என்று விபரித்துள்ளார் சியம்பா.

மறுநாள் காலையில் கேயின் பிள்ளைகளை அழைத்துவரப் போவதாக அமீன் சியம்பாவிடம் கூறினார். கேயின் உடலை சவப்பெட்டி ஒன்றுக்குள் போட்டு மூடிவைக்குமாறும் கூறினான்.

மறுநாள் காலையில் பகல் 11 மணியளவில் கேயின் தகப்பனார் மருத்துவமனைக்கு வந்தார். மருத்துவமனையின் ஒரு மண்டபத்தில் கேயின் சவப்பெட்டி வைக்கப்பட்டிருந்தது.

கேயின் மூன்று பிள்ளைகளோடு அமீன் வந்து சேர்ந்தான். பிள்ளைகளுக்கு 4 முதல் 8 வயதுவரைதான் இருக்கும்.

அமீன் அங்கு வருவதை முன்னிட்டு மருத்துவமனை முழுவதும் பலத்த சோதனைக்கு உள்ளானது.

அமீனின் மெய்காப்பாளர்கள் சிலர் பெண் தாதிகளை சோதனையிடப்போவதாக அவர்களது உடல்களைத் தடவினார்கள். இதனால் தாதிகள் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக எதிர்ப்புக் காட்டினார்கள்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருப்பவர்களும் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டனர்.

அமீன் மருத்துவமனைக்குள் சென்றது முதல் வெளியே வரும்வரை மருத்துவமனைக்குள் நோயாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. மருத்துவமனையின் வாயில் கதவுகள் இழுத்து மூடப்பட்டன.

அமீன் தன் மனைவி பற்றி அனுதாப வார்த்தைகளை அள்ளிப்போட்டு நடிக்கப்போகிறான் என்றுதான் சியம்பா எதிர்பார்த்தார்.

ஆனால் அமீனுக்கு அப்படி நடிக்கும் அவசியம் இருக்கவில்லை. டாக்டர் முக்காசா மீதே கேயின் கொலைப் பழி விழுந்துவிட்டது. மக்களும் நம்பிவிட்டனர்.

அதனால் அமீன் நேரடியாகவே கேயைத் திட்டினான். கேயின் தகப்பனாரை நோக்கி, **"பார்த்தீர்களா? தீயவர்களுக்கு தெய்வம் தரும் தண்டனை இதுதான். அதனைத் தடுக்க யாராலும் முடியாது!"** என்று பலத்த சத்தமாகக் கூறினான்.

அமீனுடன் கூடவே வந்திருந்த தொலைக் காட்சிப் படப்பிடிப்பாளர்களது கமராக்கள் அமீனை பல கோணங்களில் படம் பிடித்துக் கொண்டிருந்தன.

கேயின் தகப்பனார் சவப் பெட்டியருகே நின்று விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தார்.

அமீன் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு வெளியேறினான். பிள்ளைகளுக்கு ஒன்றுமே புரியவில்லை. மலங்க மலங்க விழித்தனர்.

இரண்டு நாட்களின் பின்னர் கேயின் உடல் ஒரு ஹெலிகொப்டரில் அவளுடைய பிறந்த ஊரான அருவாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கேயே அடக்கம் செய்யப்பட்டது.

(இடி தொடரும்)

# தேவயாணியின் நாயகன்



'காதல் கோட்டை' படம் மூலம் பிரபலமானவர் தேவயாணி. தற்போது இவருக்கும் நடிகர் சரத்குமாருக்கும் இடையே காதல் மலர்ந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

நடிகை ஹீரா, நக்மா ஆகியோரை காதலித்தவர் சரத்குமார். ஹீராவைக் கல்யாணம் செய்ய சரத்குமார் முன்வந்தபோது ஹீரா நழுவிவிட்டார்.

அதன் பின்னர் நக்மாவை காதலித்தார். நக்மாவுக்கு பங்களாவும் வாங்கிக் கொடுத்தார். இதனால் சரத்குமாரின் மனைவி தனியாகச் சென்று வழக்குத் தொடுத்தார்.

இறுதியில் நக்மாவும் சரத்குமாருடன் தன் உறவைத் தானாகவே முறித்துக் கொண்டார். நக்மாவை மிரட்டி பணியவைக்க சரத்குமார் முயன்றும், பலன் கிட்டவில்லை.

தற்போது சரத்குமாரின் பார்வை தேவயாணிமீது திரும்பியுள்ளது. இருவரும் இணைந்து பல வெற்றிப் படங்களில் நடித்தும் உள்ளனர்.

இயக்குநர் களஞ்சியம் என்பவரையே தேவயாணி காதலித்து வந்தார். சரத்குமாருடன் தேவயாணி நெருக்கமானதால் களஞ்சியம் ஒதுங்கிக் கொண்டு விட்டாராம்.

சரத்குமார்-தேவயாணி காதலும் கல்யாணத்தில் முடியுமா அல்லது கரை சேர முன்னர் கப்பல் கவிழுமா என்பது உறுதியாகத் தெரியவில்லை.

இதற்கிடையே தமிழக தேர்தலில் இம்முறை சரத்குமாருக்கு தி.மு.க. ஆசனம் கொடுக்கவில்லை. சென்றமுறை போட்டியிட்டு சரத்குமார் குறைந்த வாக்குகள் வித்தியாசத்திலேயே தோல்வி கண்டிருந்தார். அதனால் இம்முறை போட்டியிட வாய்ப்பு வரும் என்று நம்பியிருந்தார்.

சரத்குமாரிடம் கலைஞர் கருணாநிதிக்கு ஏற்பட்ட சில கசப்புக்களே ஆசனம் கொடுக்காது விட்டதற்கு காரணம் என்று தெரிகிறது.

ஆனாலும் தி.மு.க. கூட்டணிக்காக தீவிரப் பிரசாரம் செய்யப்போவதாக சரத்குமார் கூறியுள்ளார்.

# கிளின்ரனின் மலரும் நினைவுகள்

அமெரிக்க ஜனாதிபதியாக வருவதற்கு ஆசைப்பட்டவர் கில்லாரி கிளின்ரன். தனது கணவர் கிளின்ரனின் ஆதரவுடன் அடுத்த ஜனாதிபதியாக போட்டியிட விரும்பியிருந்தார்.

ஆனால் அவரது கனவில் மோனிக்கா-கிளின்ரன் காதல்லீலை இடியாக விழுந்து விட்டது. இனிமேல் ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிட்டால் வெற்றி கிட்டாது என்பதை தெரிந்து கொண்டார்.

அதனால் அமெரிக்க செனட்சபைத் தேர்தலில் நிற்பதற்கு முடிவு செய்துள்ளார். நியூயோர்க் தொகுதியில் கில்லாரி போட்டியிடப் போகிறார்.

கில்லாரிக்கு நிதி சேகரித்துக் கொடுக்கும் நிகழ்ச்சி ஒன்றில் கிளின்ரன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது கில்லாரியுடன் காதல் மலர்ந்த கதையை கிளின்ரன் கூறினார்.

'கில்லாரியை நான் முதன் முதலில் சட்டக் கல்லூரியில்தான் சந்தித்தேன். கில்லாரி என்றாலே தொல்லைதான் என்ற கருத்து சக மாணவர்களிடம் இருந்தது. அப்படியிருந்தும் தைரியமாக கிலாரியுடன் பழக ஆரம்பித்தேன்.

பல முறை கில்லாரியை பின் தொடர்ந்திருக்கிறேன். கில்லாரிமீது காதல் வசப்பட்டதாக கருதினேன்.

கடைசியாக யேல் சட்டக் கல்லூரியின் நூலகத்தில் கில்லாரி தானாக முன்வந்து என்னிடம் தன்னைப் பற்றி அறிமுகம் செய்து கொண்டாள்.



அதன் பின்னர் எங்கள் இருவருக்கும் இடையே பழக்கம் வளர்ந்தது. இதுவரை நான் சந்தித்த பெண்களில் அற்புதமான ஒரு பெண் என் மனைவிதான். 25 ஆண்டுகால வரலாற்றில் என் மனைவியைப் போன்று பேறு பெற்றவர் யாரையும் நான் சந்திக்கவில்லை" என்று கூறியிருக்கிறார் கிளின்ரன்.

மோனிக்கா விவகாரத்தால் கில்லாரிக்கு கிளின்ரன்மீது உள்ளூரக் கோபம் உண்டு.

அந்தக் கோபத்தைத் தணிக்கவே கில்லாரிக்கு ஐஸ் வைக்கிறார் கிளின்ரன். அதுமட்டுமன்றி செனட் உறுப்பினராகவும் வெற்றி பெற வைப்பதாக உறுதி கூறி ஒற்றைக் காலில் நிற்கிறார்.

# பெரும் செயல்

இத்தாலியைச் சேர்ந்தவர் ஆலிஸ் பொஜ்ஜாலி என்னும் பெண்மணி. இவர் கழிவறையை சுத்தம் செய்யும் தொழிலாளியாக பணியாற்றி வருகிறார்.

உலகமே வியக்கும் காரியம் ஒன்றை இவர் செய்துள்ளார். இவர் பணிபுரியும் இடத்தில் இத்தாலியப் பணமான 50 மில்லியன் லிராவை (சுமார் 25 இலட்சம்) கண்டெடுத்தார்.

இவ்வளவு தொகையான பணத்தைக் கண்டும் அந்த வறுமையான தொழிலாளி சபலப்படவில்லை.

அந்தப் பணத்தை அதற்கு உரியவரிடம் பத்திரமாகச் சேர்ப்பித்தார். பணத்தை பெற்றுக் கொண்டவர் மகிழ்ச்சியில் கூத்தாடினார். பெண்ணுக்கு அன்பளிப்பு கொடுக்க முன்வந்தார்.

'வேண்டவே வேண்டாம்' என்று மறுத்துவிட்டார் அந்தப் பெண். கைமாறு கருதாத உதவி என்பது இதுதான்.

# நடிகைகள் பிரசாரம்

இந்தியாவில் தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது. பாரதிய ஜனதா அணிக்கே பிரகாசமான வாய்ப்புக்கள் உள்ளன. மறுபடி



இந்தியாவில் பாரதிய ஜனதா ஆட்சி அமைவதற்கான சாத்தியம் தென்படுவதாக நம்பகமான தகவல்கள் கூறுகின்றன.

சோனியா அந்நிய நாட்டவர் என்று தாக்கிவரும் பாரதிய ஜனதா, தாம் பதவிக்கு வந்தால் அந்நிய நாட்டவர் உயர் பதவிகளுக்கு வருவதைத் தடுக்கப் போவதாக கூறியுள்ளது.

வந்தே மாதரம் என்பது வந்தே மா 'ரோம்' என்று மாறுவதற்கு அனுமதியோம் என்கிறது பாரதிய ஜனதா. இத்தாலியின் தலைநகரம் ரோம் என்பது தெரிந்ததே.

இதற்கிடையே இம்முறை பல நடிகைகள் வாக்கு வேட்டையாட ஒப்பனைகளோடு புறப்பட்டுள்ளனர்.

தமிழ் நாட்டில் ரேவதி, கௌதமி போன்ற நடிகைகள் பாரதிய ஜனதா கூட்டணிக்காக ஒப்பனை கலையக் கலைய அலைந்து பிரசாரம் செய்கிறார்கள்.

சோனியா காந்தி போட்டியிடும் தொகுதி கர்நாடக மாநிலத்தில் உள்ளது. பெல்லாரி தொகுதியில் அவர் போட்டியிடுகிறார்.

சோனியாவுக்கு ஆதரவாக முன்னாள் கனவுக் கன்னியான கன்னடத்து பைங்கிளி சரோஜாதேவி பிரசாரம் செய்து வருகிறார். தமிழ்ப் படங்களில் நடித்து பெயர் பெற்றபோதும் சரோஜாதேவி கன்னடப் பெண்மணியாவார்.

ஆந்திர மாநிலத்தில் தெலுங்கு சூப்பர் ஸ்டார் விஜயசாந்தி பாரதிய ஜனதாவுக்காகப் புயல் வேகப் பிரசாரம் செய்ய உள்ளார்.

www.padippakam.com

# முப்பரிமாணம்

திரைப்படத் துறையில் 1952ம் ஆண்டு முதன் முதலில் முப்பரிமாணப் படம் (3-D) தயாரிக்கப்பட்டு உலகெங்கும் திரையிடப்பட்டது. பெரும்பாலும் திகிலூட்டும் கதை அம்சங்களைக் கொண்டவையாக இப்படங்கள் இருந்தன. இவற்றைப் பார்ப்பதானால், இதற்கான விசேடமான கண்ணாடி அணிந்தே பார்க்கவேண்டும்.

அவ்வாறு பார்க்கும் போது திரையில் நடைபெறும் ஒவ்வொரு சம்பவத்திலும் பார்ப்பவர்கள், தாங்களும் ஈடுபட்டிருப்பதாகவே அனுபவம் உண்டாகும். இருப்பினும் விசேட கண்ணாடி அணிந்து தான் இப்படங்களைப் பார்க்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருந்தமையினால், இத்தகைய படங்களுக்கு செல்வாக்குக் குறைந்துவிட்டது.

'மைடியர் குட்டிச் சாத்தான்' படம்தான் தமிழில் முதன் முதல் வெளியான முப்பரிமாணப் படம். கண்ணாடி அணிந்து முப்பரிமாணப் படத்தைப் பார்த்து இரசிக்கும் பார்வையாளர்களையே இப் படம் காட்டுகிறது.

முப்பரிமாணப் படம் வெளியாகும் திரையரங்கில் இப்படித்தான் எல்லோருமே கண்ணாடியுடன் அமர்ந்திருப்பார்கள். பார்க்க ரொம்ப வேடிக்கையாக இருக்கிறதல்லவா?



தகவல் பெட்டி





# தாவல் மன்னன்

அமெரிக்காவில் கிராண்ட் கென்யன் என்ற குன்றுகள் நிறைந்த பிரதேசம் வித்தியாசமான அமைப்பைக் கொண்டது.

ரோபி நீவல் என்ற சாகசக்காரர், ஒரு கென்யன் குன்றின் மேலிருந்து மற்றொரு குன்றின் சிகரத்தை மோட்டார் சைக்கிளில் தாண்டிப் பாய்ந்து சாதனையை நிலை நாட்டியிருக்கிறார்.

228 அடி - ஏறத்தாழ 68 மீட்டர் உயரத்தில் அந்தரத்தில் ரோபி நீவல் மோட்டார் சைக்கிளில் பறந்து செல்லும் மயிர்க் கூச்செறியும் காட்சிதான் படத்தில் உள்ளது. இது ஒரு உலக சாதனையாகும்.

உயிரைப் பணயமாக வைத்து செய்த சாதனை. மயிரிழை தவறினாலும் மரணம் நிச்சயம்.

இத்தனை தூரம் பாய்ந்து விழுந்தபோது மலைக்குன்றில் இவருடைய மோட்டார் சைக்கிள் தரையில் மோதவே செய்தது. இவருக்கு வெளிக் காயங்கள் எதுவும் உடனடியாகத் தென்படவில்லை.

உடனடியாக லாவேஜசிலுள்ள பல்கலைக்கழக மருத்துவமையத்துக்கு ஹெலிக்கொப்டரில் எடுத்துச் செல்லப்பட்டார். ஹெலியில் ஏறுவதற்கு முன்னர் தனது சாகசச் செயலைக் காணவந்திருந்த மக்களிடம் தாராளமாகக் கதைத்துக்கொண்டே சென்றுள்ளார்.

நீவல் தரை இறங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்ட சாதனத்தில் அமர்ந்திருப்பதைக் கீழே உள்ள படம் காட்டுகிறது. அவரின் இடப்பக்கம் தொலைக்காட்சிகளில் சாகசங்கள் புரியும் நடிகர் டான் ஹக்கேட்டியும், வலது புறம் முன்னாள் நெவேடா மாநில கவர்னரும் நரம்பியல் மருத்துவ நிபுணருமான லொன்னி ஹம்மாகி ரென்னும் காணப்படுகின்றனர்.

# இதுதான்(டா) காது!



பைபிளில் சாம்சன் என்றொரு மிகப்பெரும பலசாலி பற்றிய கதை வருகிறது. ஈராக்கைச் சேர்ந்த ஃபாஹ்மி அல்-ஹுசைன் என்பவர் தன்னைத்தானே சாம்சனின் மறு அவதாரம் என்று கூறிக்கொள்கிறார். அதனை நிருபிக்கவும் தோள்தட்டி, தொடை தட்டி களத்தில் குதித்திருக்கிறார்.

இங்கு பாருங்கள் அதிக வலுக்கொண்ட மோட்டார் காரை தன்னுடைய காது ஒன்றில் கயிற்றால் கட்டி இழுத்துச் சாதனை புரிகிறார். பார்க்கும்போது நம் காது கூசுகிறதல்லவா.

இவர் ஆரம்ப காலத்தில் கனவேகத்தில் செல்லும் கார்களை கைகளால் கயிறு கட்டி இழுத்து நிறுத்திப் பயிற்சி பெற்றுள்ளார். பின்னர் தனது மூக்கிலும காதிலும் கயிறுகளைப் பிணைத்து கார்களை இழுத்திருக்கிறார். அப்படியே பயிற்சி செய்து இப்போது காதுகளால் கலக்குகிறார்.

ஜோர்டானின் அம்மன் நகரில் அண்மையில் அல்-ஹுசைன் தனது ஒரு காதில் மட்டும் கயிற்றைப் பிணைத்துக் காரை இழுத்து சாதனை படைத்த போது இப்படம் எடுக்கப்பட்டது. காது கேட்க மட்டுமல்ல, இழுக்கவும் பயன்படுகிறது.

# கண் சிமிட்டும் சீல்



டொல்ஃபின் மீனினத்தைப்போன்று மனிதருடன் நட்பாகப் பழகக் கூடிய நீர்வாழ் பிராணி 'சீல்' எனப்படும் கடல் நாய். இவை முகபாவங்கள் மூலம் தமது உளப்பாங்கினை வெளிப்படுத்தும் ஆற்றல் கொண்டவை என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

தன்னைப் படம்பிடிக்கிறார்கள் என்பதனை உணர்ந்து சிரித்து கண்சிமிட்டி போஸ் கொடுக்கிறார் பாருங்கள்! கொப்பேன் ஹேகன் உயிரியல் பூங்காவில் இந்த அருமையான காட்சி படம் பிடிக்கப்பட்டது.

# நட்பு சவாரி

மனிதர்களுக்குள் தொலைந்து போய்க்கொண்டிருக்கும் புரிந்துணர்வு விலங்குகளுக்கும், பிராணிகளுக்கும் மத்தியில் வளர்ந்துகொண்டிருக்கின்றன.

இனப்பிரச்சனை காரணமாக யுத்தம் மூண்டுள்ள நம்நாட்டில் பின்னவல யானைகள் சரணாலயப் பகுதியில் இக்காட்சி கிளிக் செய்யப்பட்டது.

நாயாரின் முதுகில் குரங்காரும், கிளியும் ஜாலியாகச் சவாரி செய்கின்றன. ஐந்தறிவே இருப்பினும் மனதில் கருணை இருப்பதால் ஆறறிவினருக்கே புத்தி புகட்டுகின்றன

(பட உதவி எஸ். விஜித்)



# திறக்க முடியாது



கில்லாடித் திருடர்களுக்கு சவால் விடுவதுபோல ஜப்பான் நிறுவனம் ஒன்று இப் பெட்டிகளை தயாரித்துள்ளது.

இப்பெட்டியில் பட்டன்களை தட்டி எண்களை வைத்து மூடுவதுடன், வலப்பக்கத்தில் கட்டைவிரலை பதித்துவிடவேண்டும்.

மீண்டும் அதே கட்டை விரலை பதித்தால் மட்டுமே இப்பெட்டி திறக்கும். பெட்டியை உடைத்து திறக்க முயன்றால் பெட்டியில் உள்ள ஒரு திரவம் கசிந்து பெட்டிக்குள் இருப்பவற்றை தீக்கிரையாக்கிவிடும். மணியான பெட்டிதானே!


படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் (117)

# தனயன் சிபாரிசு-தந்தை தடை

தமிழ்நாட்டிலிருந்து மயன்

ஐந்தெழுத்து கதாநாயகனும், நான்கெழுத்து புதுமுக நடிகையும் இரண்டெழுத்து படம் ஒன்றில் நடித்து வருகின்றனர்.

நான்கெழுத்து நாயகி புதுமுகம் என்பதால் காதல் காட்சிகளில் நாயகன் தொடும் போதெல்லாம் சிலிர்த்துப் போகிறார். நாயகனும் சில்மிஷங்கள் செய்து நடிகையின் நாடித்துடிப்பை அறிந்து கொண்டார்.

இளம் நடிகை, புதுமுகம் அதனால் கதாநாயகனை அனுசரித்து நடந்து கொண்டால்தான் முன்னேறமுடியும். அந்த நெளிவு சுழிவை கற்று வைத்திருந்தார் நடிகை. அதனால் கதாநாயகனின் சில்மிஷங்களுக்கு தாராளமாக இடம் கொடுத்தார்.

மதிய உணவின்போது நடிகையுடன் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தார் நடிகர். படப்பிடிப்புக் குழுவினருக்கு இவர்களது நெருக்கம் தெரியும். வெளிப்படையாக பேசாதுவிட்டாலும் கிசுகிசுத்தனர்.

நடிகைக்கு ஐந்தெழுத்து நடிகரின் வீட்டில் தெரிந்தால் பிரச்சனை ஏற்பட்டு விடுமோ என்று பயம்.

'பயப்படவேண்டாம். இரகசியமாக நடந்து கொள்ளுவோம். யாரும் அறியாமல்தானே சந்திக்கப் போகிறோம்' என்று தைரியம் கொடுத்தார் நடிகர்.

அதன்படியே தனது நண்பன் ஒருவரது வீட்டிலேயே நடிகையை தனிமையில் அழைத்து இனிமை கண்டு விட்டார்.

நடிகைக்கும் அவர் தன்மீது கொண்டுள்ளது காதல் அல்ல என்பது தெரிந்ததால் படப்பிடிப்பு முடியும்வரை இசைந்து போய்க்கொண்டிருக்கிறார்.

ஆனால் தனது அடுத்த படத்திலும் அவரையே போட நினைத்த நடிகர், புதிய படம் ஒன்றில் ஒப்பந்தம் செய்ய வந்த இயக்குநரிடம் சிபாரிசு செய்தாராம்.

அந்த இயக்குநர் அதனை நடிகரின் தந்தையிடம் கூற, அவர் அந்த நடிகையைப் போடவேண்டாம் என்று உத்தரவு போட்டுவிட்டாராம்.

## மனைவிக்கு அல்வா

ரசிப்போடு தொடர்புடைய பெயர் கொண்ட மூன்றெழுத்து நடிகைக்கு பெண்கள் மீதுதான் ஆர்வம் என்பது கோடம்பாக்கம் வட்டாரம் அறிந்த சமாச்சாரம்.

சக நடிகைகள் சிலரோடு இவர் உயிர்த்தோழியாக இருப்பதும் பழைய செய்திதான். அப்படி இருந்தாலும் நடிகர்கள் சிலரையும் கைக்குள் போட்டு வைத்திருக்கிறார்.

தந்தையை குறிக்கும் இன்னொரு பெயர் கொண்ட இளம் நடிகருடன் படம் ஒன்றில் நடித்து வருகிறார் இந்த நடிகை.

அந்த நடிகரின்மீது நீண்டகாலமாக கண்வைத்திருந்தாராம். இணைந்து நடிக்க கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி நடிகரை தன் இஷ்டப்படி இழுத்துவிட்டார்.

நடிகரின் மனைவிக்கு இது எப்படியோ தெரிந்ததால், படப்பிடிப்புக்கு தானும் வரப்போவதாக அடம்பிடித்தாராம். நடிகருக்கு அடிக்கடி போன் செய்து அவர் எங்கிருக்கிறார் என்று அறிந்து கொண்டிருக்கிறாராம்.

ஆனால் மனைவிக்கு அல்வா கொடுத்துவிட்டு, நடிகையின் இழுப்புக்கு உடன்பட்டுக் கொண்டிருக்கிறார் நடிகர்.

## நடிகை கிண்டல்

சங்கம் கண்ட கவி நடிகைக்கு தெலுங்கில்தான் இப்போது மவுசு. அதனால் அங்குள்ள பத்திரிகையாளர்கள் சிலரிடம் தமிழ்ப் பட நடிகர்கள் ஜொள்ளுப் பார்ட்டிகள்' என்று கிண்டல் பண்ணியிருக்கிறார்.

மூன்றெழுத்து இளம் நாயகன் தனக்குப் பின்னால் ஜொள்ளுவிட்டுக் கொண்டு அலைந்த கதையையும் ஜாடை மாடையாகக் கூறியுள்ளாராம்.

தெலுங்கில் ஜொள்ளு விடுபவர்கள் பற்றி எங்கு போய் கூறப்போகிறாரோ? என்று அப்பத்திரிகையாளர்கள் நடிகையின் முதுகுக்குப் பின்னால் குத்தலாகப் பேசுகிறார்கள்.

# முத்த மன்னர்

கமலுக்கு முத்த மன்னர் என்றும் ஒரு பட்டம் இருக்கிறது. தனக்குப் பிடித்த கதாநாயகியை சிபாரிசு செய்வார் கமல். அந்த நடிகையும் கமல் முத்தம் கொடுப்பதை தடுக்கமாட்டார். அதனால் முத்தக் காட்சிகள் கமல் படத்தில் சிறப்பாக இருக்கும்.

உதட்டோடு உதடு சேர்த்து முத்தமிடுவதில் பல விதங்கள் உள்ளன. கமல் அதில் கை தேர்ந்தவர். மன்னிக்கவும்... உதடு தேய்ந்தவர்.

கமல் போலவே இந்தியில் முத்த மன்னர் என்று பட்டம் பெற்றிருப்பவர்கள் அமீர்கான்.

'சர்ஃபரோஷ்' என்னும் படத்தில் சோனாலியும் அமீர்கானும் முத்தக் காட்சியில் முழு ஈடுபாட்டோடு நடித்து ரசிகர்களையும் சூடேற்றினார்கள். பல படங்களில் வகைவகையாக முத்தம் கொடுத்திருக்கிறார் அமீர்கான்.



சங்கவி

# மினி சி

❋ கமல் இயக்கி நடித்து தமிழிலும் இந்தியிலும் வெளிவர இருக்கும் 'ஹேராம்' படத்தில் கமல் இரண்டு பாடல்களை சொந்தக் குரலில் பாடியுள்ளார்.

❋ 'பூமணி', 'பூந்தோட்டம்' போன்ற படங்களில் ஜோடியாக நடித்த முரளியும் தேவயாணியும், 'கண்ணுக்குக் கண்ணாக' என்ற படத்தில் அண்ணன் தங்கையாக நடிக்கின்றனர்.

❋ மம்முட்டி கன்னடத்தில் முதன்முதலாக நடிக்கும் 'நா ஹேராகி பருவே' என்ற படத்தில் அவருக்கு ஜோடியாக ரோஜா நடிக்கிறார்.

❋ 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' தெலுங்கில் வெங்கடேஷ் நடிக்க 'ராஜா' என்ற பெயரில் தயாரானது. இப்போது 'சொல்லாமலே' தெலுங்கில் 'சீனு' என்ற பெயரில் தயாராகவுள்ளது. இதிலும் வெங்கடேஷ்தான் ஹீரோ.

❋ தமிழில் எட்டுப் படங்களில் நடித்து வருகிறார் கௌசல்யா. இவற்றில் 'வானத்தைப் போல', 'கற்பகச் சோலை', 'ஏழையின் சிரிப்பில்' ஆகிய மூன்று படங்களில் பிரபுதேவாவுக்கு ஜோடியாக நடிக்கிறார்.

❋ பிரபுவை வைத்து 'தாலாட்டுக் கேக்குதம்மா', 'உத்தம ராசா' போன்ற வெற்றிப்படங்களை இயக்கிய ராஜ்கபூர் மீண்டும் பிரபுவை வைத்து புதிய படமொன்றை இயக்கப்போகிறார்.



அப்பாஸ்-மும்தாஜ்
படம்: மலபார் போலீஸ்

# என்றும் குஷ்பு

தற்போதைய நடிகைகள் குறிப்பிட்ட காலம் உச்சத்தில் இருப்பார்கள் பின்னர் மறைந்து விடுவார்கள்.

கௌதமி, ரூபினி, பானுப்பிரியா, வினிதா, ரஞ்சிதா போன்றோர் குஷ்பு கதாநாயகியாக உச்சத்தில் இருந்தபோது போட்டியாக இருந்தனர்.

தற்போது அவர்கள் மட்டுமல்ல, அவர்களுக்கு பின்னால் வந்த கதாநாயகிகளும் காணாமல் போய்விட்டனர். சிலர் சின்னத்திரையில் தோன்றுகி[...]

ஆனால் குஷ்பு மட்டும் தற்[...] முன்னணியில் நிற்கிறார். இ[...] கதாநாயகியாகவும் நடிக்கிற[...] போது வெற்றிகரமாக ஓடிக்கொ[...]ருக்கும் 'மலபார் போலிஸ்', '[...]கேத்த விக்கம்' போன்ற படங்[...] குஷ்புதான் கதாநாயகி.

அடுத்த நூற்றாண்டிலும் பிஸியாக நடிப்பதற்கு கைவசம் படங்கள் வைத்திருக்கிறார்.

# 36 கோடி

'படையப்பா' தற்போது வரை தமிழ்நாட்டில் 86 திரையரங்குகளில் 150 நாளை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

சுமார் 36 கோடி ரூபாய் இந்திய மதிப்பில் மட்டும் இதுவரை வசூலாகியுள்ளது. 40 கோடி வரை வசூலாகும் என்று நம்பப்படுகிறது. தமிழ்ப்பட உலகில் பத்தாண்டுகாலத்தில் இது ஒரு சாதனையாக இருக்கப்போகிறது.

தனது அடுத்த படம் பற்றியும் சிந்திக்க ஆரம்பித்துவிட்டார் ரஜினி. வெளிநாடு சென்று திரும்பி வந்த பின்னர்தான் கதை விவாதம் ஆரம்பமாகுமாம்.

தேர்தல் பிரசாரம் முடியும்வரை வெளிநாட்டில்தான் ரஜினி தங்கியிருப்பார் என்று தெரிகிறது.

# அரசியல் படுத்தும் பாடு

'பாரதி கண்ணம்மா', 'பொற்காலம்' ஆகிய வெற்றிப் படங்களை உருவாக்கியவர் சேரன். அவரது கெட்ட நேரம் 'தேசிய கீதம்' என்றொரு படம் எடுத்தார். படமும் படு தோல்வி. அரசியல்வாதிகளது பகையையும் சம்பாதித்துக் கொண்டார். குறிப்பாக தமிழக ஆளும் கட்சியின் பகை.

இதனால் சேரனது அடுத்த படம் தள்ளாடுகிறது. பிரசாந்த்தை வைத்து 'என் இனிய காதலர்களே' என்று தொடங்கிய படத்தின் தயாரிப்பாளர் பிரமிட் நடராஜன். அரசியல்வாதிகளது மிரட்டலால் பிரமிட் நடராஜன் ஒதுங்கினார்.

பின்னர் தரம்சந்த் லுங்கட் (இவர்தான் ரோஜாவை சிறைக்கு அனுப்பியவர்) தயாரித்தார். 'விண்ணோடும் முகிலோடும்' என்று பெயர் மாற்றப்பட்டது. அவருக்கும் மிரட்டல்.

இப்போது புதுத் தயாரிப்பாளர் தேடிக் கொண்டிருக்கிறார் சேரன். அரசியல்வாதிகள் ஒரு சிறந்த இயக்குநரை என்ன பாடு படுத்துகிறார்கள் பார்த்தீர்களா?!

# நரசிம்மனாக மாறினேன்

'அந்தப்புரம்' படத்தில் நரசிம்மன் பாத்திரத்திற்காக தான்பட்ட பாட்டைக் கூறுகிறார் பிரகாஷ்ராஜ்.

"அந்த பாத்திரமாகவே கிட்டத்தட்ட ஒரு மாதத்துக்கு வாழ்ந்தேன். அதற்காக என் தலைமுடியை ஜெர்மன் ப்ளீச் பண்ணி ப்ரவுன் நிறத்தில் ஆக்கினேன். நடையை மாத்தினேன். பார்வையை மாத்தினேன்.

உதாரணத்துக்கு ஒரு காட்சி சொல்கிறேன்: சொந்தப் பையன் எதிரிகளால் வெட்டப்பட்டு பிணமாகக் கிடக்கிறான். அப்போது நரசிம்மன் தன் உணர்ச்சிகளை வெளிப்படுத்த வேண்டும்.

'நாயகன்' படத்தில் கமல் மாதிரியோ, 'கோட் ஃபாதர்' படத்தில் அல்பசினா போலவோ பண்ணாது புதுமாதிரியாகப் பண்ணனும்.

மூன்றுநாள் யோசித்தேன். கடைசியில் அமைதியாக இருந்து பொட்டு அழுகைகூட இல்லாமல் அந்தப் பிணத்தையே வெறித்துப் பார்ப்பதுபோல நடித்தேன். பலத்த வரவேற்பு கிடைத்துவிட்டது!"



சத்யராஜ்-குஷ்பு
படம்: மலபார் போலிஸ்


படிப்பகம்

www.padippakam.com

...தமிழில் பிஸியாக நடித்து வரும் தேவயாணி முதன் முதலாக கன்னடப் படமொன்றில் நடிக்கவுள்ளார். இப்படத்திற்கு 'பிரேமோத்சவா' என்று பெயரிடப்பட்டுள்ளது.

...மகள் ஊர்வலம்' என்ற வெற்றிப் படத்தை இயக்கிய மதுரவன் அடுத்து முன்னணி நடிகர் ஒருவர் நடிக்க 'உன்னைப் பார்த்த நாள் முதல்' என்ற படத்தை இயக்கப்போகிறார்.

...பாரதிராஜாவின் 'தாஜ்மஹால்' படத்தில் நாயகியாக அறிமுகமாகும் ரியாசென் அந்தப்படம் வெளிவதற்குள் 'லவ் யூ ஹமேஷா' என்ற இந்திப் படத்தில் அக்ஷய் கன்னாவுடன் ஜோடியாக நடித்து வருகிறார்.

...சத்யராஜ் நடிக்கும் 'அடிமைகள்' படத்தைத் தயாரித்து வரும் ஆபாவாணன், இன்னொரு படத்தையும் தயாரிக்கவுள்ளார். இப்படத்தையும் புதிய இயக்குநர் ஒருவரே இயக்கவுள்ளார்.

## ஜப்பான் ரசிகர்கள்

ஜப்பானில் ரஜினியின் படங்கள் சக்கையோடு போடுவது தெரிந்த செய்திதான். இதனால் ஜப்பானிலும் ரஜினிக்கு ரசிகர்கள் உருவாகி விட்டனர்.

இவர்கள் ஜப்பானில் இருந்து ரஜினியைக் காண்பதற்காக சென்னைக்கு பறந்து வருகிறார்கள். அப்படியே சென்னையில் நடக்கும் படப்பிடிப்புக்களையும் கண்டுகளித்துச் செல்கிறார்கள்.

இந்த ரசிகர்களது ஆர்வத்தைக் கண்டு ரஜினியே பிரமித்துப் போனார். அவர்களோடு நின்று புகைப்படம் எடுத்து சந்தோசம் கொடுகிறார். சமீபத்தில் 50 ஜப்பான் ரசிகர்கள் ஒரே குழுவாக வந்து ரஜினியைச் சந்தித்தனர்.

## புகைக்கு தடை

அஜித்குமார் பயங்கரமான சிகரெட் பிரியர். 13 ஆண்டுகளாக புகைத்து தள்ளியிருக்கிறார். தற்போது புகைப்பிடித்தலுக்கு விடை கொடுத்திருக்கிறார். காரணம் யார்? காதலி ஷாலினிதான். புகைத்தலை பகைத்தல் செய்யுமாறு கண்டிப்பான உத்தரவாம்.

புகைத்தலை கைவிட்ட அஜித்குமார் இப்போது உற்சாகமாக காணப்படுகிறார். ஷாலினியால் பல மாற்றங்கள் கண்டுள்ளாராம்.

## விஜய்-சிம்ரான்

'துள்ளாத மனமும் துள்ளும்' விஜய்-சிம்ரான் ஜோடியாக நடித்து மாபெரும் வெற்றி கண்ட படம்.

அந்த வெற்றிப்பட ஜோடி மறுபடி ஒன்றுசேரும் படம். 'பெண்ணின் மனதைத் தொட்டு'

'துள்ளாத மனமும் துள்ளும்' படத்தை இயக்கிய எழில் இதனையும் இயக்குகிறார். இசை, எஸ்.ஏ. ராஜ்குமார். ரகுவரன், மவுலி, வையாபுரி, தாமு, பாலாஜி, சாப்ளின் பாலு, சுமித்ரா ஆகியோர் நடிக்கின்றனர்.

## படுதோல்வி

'கும்மிப்பாட்டு' படம் வெளிவந்த சூட்டோடு சூடாக பெட்டிக்குள் சுருண்டுவிட்டது. பயங்கரமான தோல்விப் படம்.

இதனால் படத்தில் நடித்தவர்களுக்கு சம்பளமும் கொடுக்கவில்லை. இயக்குநர் கஸ்தூரி ராஜா சொந்தமாக தயாரித்த படம் அது.

'கும்மிப்பாட்டு' நஷ்டத்தை நேர் செய்ய புதிய பட வேலைகளில் மாய்ந்து மாய்ந்து இறங்கியுள்ளார் கஸ்தூரி ராஜா.

## சினிமா விமர்சனம்

நமது விமர்சனக்குழு 45/100

### கலக்கலான கூட்டணி

படம் : மலபார் பொலிஸ்
நடிப்பு : சத்யராஜ், கவுண்டமணி, குஷ்பு, அப்பாஸ், மும்தாஜ், சிவகுமார், ஆனந்தராஜ்,விஜயகுமார்,ஜெய்கணேஷ்.
இயக்கம் : பி.வாசு.
இசை : எஸ்.ஏ. ராஜ்குமார்.

'வால்டர் வெற்றிவேல்' படத்தின் பின்னர் இயக்குநர் வாசுவும், சத்யராஜும் இணைந்து தந்துள்ள மற்றொரு பொலிஸ் கதை.

கேரள மாநிலத்தில் அமைச்சர் ஒருவர் கொலை செய்யப்படுகிறார். அதனைக் கண்ணால் காணும் காதல் ஜோடி அப்பாஸ், மும்தாஜ்.

கொலையாளி ஆனந்தராஜ் சென்னை வருகிறார். காதல் ஜோடியும் ஊர் எதிர்ப்புக்கு பயந்து சென்னை வருகிறது. அங்கு ஆனந்தராஜினால் துரத்தப்படும்போது இருவரும் பிரிகிறார்கள்.

கேரளத்தில் இருந்து தமிழ்நாட்டுக்கு துப்பறிய வருகிறார் இரகசியப் பொலிஸ் அதிகாரி சத்யராஜ். கொலையாளியை பிடிப்பதோடு, காதலர்களையும் ஒன்று சேர்க்கிறார். நன்றி வணக்கம். கதை இதுதான்.

இக் கதையை விறு விறுப்பாகவும், வயிறு குலுங்கிப் புண்ணாகும் விதமான நகைச்சுவையோடும் அசத்தலாக இயக்கியுள்ளார் பி.வாசு.

மலையாளம் கலந்த தமிழில் பிய்த்து உதறுகிறார் சத்யராஜ். அவருடன் கூட்டணி வைத்து ஜாடிக்கேத்த மூடியாக சிரிப்பூட்டுகிறார் கவுண்டமணி.

சண்டைக் காட்சிகளில் ஆவேசம், நகைச்சுவையில் அபாரம், குஷ்புவுடன் நடிப்பில் கச்சிதம் என்று சத்யராஜின் திறமைகளை பட்டை தீட்டிக் காட்டியிருக்கிறார் வாசு. சத்யராஜ் சத்தானராஜ்.

அதிலும் மலபார் பொலிஸாக தாத்தா சத்யராஜ் சில காட்சிகளே வந்தாலும் அட்டகாசமப்பா! இன்னமும் சில காட்சிகள் காண்பித்திருக்கலாமே என்று தோன்றுகிறது.

அப்பாஸ், மும்தாஜ் பாடல்களுக்காகவே வந்து போகிறார்கள். அசோக்குமாரின் கமரா வீடியோவில் பார்க்கும்போதே கண்களை கவர்கிறது.

சிவகுமார் வில்லன்போல் கலக்கினாலும் பின்னர் நல்லவர் என்று தெரிகிறது. நிஜ வில்லனாக ஜெய்கணேஷ் மாறும் இடம் திருப்பம். ஆனந்தராஜ் மிரட்டுகிறார்.

மொத்தத்தில் நல்ல படம் நம்பிப் பார்க்கலாம். சத்யராஜ், கவுண்டமணி, வாசு கூட்டணிக்கு மற்றொரு வெற்றிப்படம்.




## வல்லரசு

விஜயகாந்த் நடிக்கும் புதிய படம் 'வல்லரசு.' இப்படத்தில் இரண்டு கதாநாயகிகள் நடிக்கவுள்ளனர்.

சாதாரண ஒரு நாடு வல்லரசு நாடாக மாறும்போது அந்நாட்டிற்கு ஏற்படும் பிரச்சனைகள், எல்லைப் பகுதியில் இராணுவவீரர்களும், பொலிசாரும் சந்திக்கும் பிரச்சனைகள் என்பவைதான் கதை.

உயர் பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார் விஜயகாந்த். இசை: தேவா. இயக்கம் என். மகாராஜன். இவர் புதியவர்.

கார்க்கில் பிரச்சனையை தழுவியதாக கதை இருக்கும் போலத் தெரிகிறது. இது விஜயகாந்த்தின் சொந்தப் படம்.

## சரத்மீது புகார்

கார்க்கில் நிதி திரட்டும் விஷயத்தில் சரத்குமார்மீது பல நடிகர்கள் கடுப்பாக இருக்கிறார்கள்.

கமல், விஜயகாந்த், பிரபு என்று ஒரு பட்டியலே இருக்கிறது. விஜயகாந்த் தனியாக நிதி கொடுத்ததும் அதனால்தான்.

கார்க்கில் தொடர்பான நட்சத்திர நிகழ்ச்சிகளில் கமலுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. இதனை கமலின் ரசிகர்கள் சுட்டிக்காட்டி கொதித்துப் போயிருக்கிறார்கள்.

சரத்குமார் தமிழக முதல்வரிடம் நல்ல பெயர் எடுக்க இப்படி வித்தை காட்டுகிறார். விஜயகாந்த் தனது புலன் விசாரணை படத்தில் பிரதான வில்லனாக நடிக்க வாய்ப்புக் கொடுத்தார். அதனால்தான் சரத் பெரிய நடிகரானார். இப்போது அதனை மறந்து இப்படி ஆடலாமா? என்று விஜயகாந்த் ரசிகர்கள் எகிறுகிறார்கள்.

இது தேசபக்தி சம்பந்தப்பட்ட விஷயம். இவர்கள் யாரும் அக்கறைப் படவில்லை. அதனால் சரத்குமார் ராதிகாவோடு சேர்ந்து முன் முயற்சி எடுத்தார். இது ஒரு குற்றமா? என்று கேட்கிறது சரத் வட்டாரம்.



அப்பாஸ்-ரசிகா
படம்: நினைத்தாலே



குஷ்பு




## ரம்பா நானாக முடியாது தேவயாணி கூறுகிறார்

'காதல் கோட்டை', 'தொடரும்' படங்களில் ஹீராவுடன் நடித்தேன். 'நினைத்தேன் வந்தாய்' படத்தில் ரம்பாவோடு நடித்தேன். என் பாத்திரம் சிறப்பாகத்தான் இருந்தது.

கவர்ச்சி நாயகிகளோடு நடித்திருந்தாலும் நான் நானாகத்தான் இருந்தேன். என் இமேஜை விட்டு இறங்கிவரவில்லை.

நான் ரம்பாவாக முடியாது. ஆனால் ரம்பா என்னைப் போல முயற்சிக்கலாம். இன்னும் எத்தனை கவர்ச்சி நாயகிகளுடன் நடித்தாலும் சரி மனதில் நிற்கும்படியான பாத்திரத்தில் மட்டுமே நடிப்பேன்" இவ்வாறு தன்னம்பிக்கையுடன் கூறியுள்ளார் தேவயாணி.

## காதோடு சொல்லுகிறோம்

ரம்யமான நடிகையை சுற்றி இரண்டு பெரிய புள்ளிகள் ஒரே நேரத்தில் வலை விரித்துள்ளார்கள். இருவரையும் மனம் கோணாமல் சமாளிக்கிறாராம். சமீபத்தில் கார்க்கில் நிதிக்கான நட்சத்திர விழாவுக்கு இறுக்கமான உடையில் வந்து அங்கிருந்த வி.ஐ.பிக்களை கிறங்க வைத்துவிட்டாராம். அதனால்மேலும் சில வி.ஐ.பிகள் நடிகைக்கு நண்பர்களாக மாறக்கூடுமாம்.

ரஞ்சித நடிகை மறுபடி நடிக்க வந்ததால், அவரது புதுக்கணவருக்கு மனவருத்தமாம். ஆனால் நடித்தே தீருவேன் என்று ஒற்றைக் காலில் நின்றாராம் நடிகை.

ரம்யமான நடிகை பற்றி மற்றொரு செய்தி. குமார இயக்குநர்மீது ரம்ய நடிகைக்கு எக்கச்சக்கமான அன்பாம். சூப்பரின் படத்தில் தூக்கலான பாத்திரம் கொடுத்தவர் அல்லவா. அவரது நன்றியுணர்ச்சியை பார்த்து புல்லரித்துப்போன இயக்குநர், தனது புதிய படம் ஒன்றிலும் வாய்ப்புக் கொடுத்திருக்கிறார். நாயகன் 'சர' நடிகர். 'சர' நடிகருக்கும் சூப்பருடன் நடித்த ரம்யமான நடிகையை நெருக்கமாக காண்பதற்கு ஆசையாம். அதனால் அவரும் சம்மதம் கொடுத்துவிட்டாராம்.

தமிழ்நாட்டில் தொலைக்காட்சியில் செய்தி வாசித்துவிட்டு பின்னர் நடிக்கவும் வந்தவர் பாத்திமா பாபு. இவர் பற்றி அப்போதே பல கிசுகிசுக்கள். தற்போது இவருக்கு வாய்ப்புக்கள் இல்லாததால் நட்சத்திர குடும்பத்தின் நட்பை நாடி, அவர்கள் வாராவாரம் நடத்தும் கேளிக்கைகளில் பங்குகொள்கிறாராம். நல்ல முன்னேற்றம்தான்!

www.padippakam.com

## வேண்டும்!

ஓராட்சி வேண்டும், அஃதும்
ஒரு கட்சி ஆட்சி வேண்டும்!
நேராட்சி வேண்டும், அஃதும்
நிலையாக நிற்க வேண்டும்!
சீராட்சி வேண்டும், அஃதும்
சிறப்பான தாக வேண்டும்!
பேராட்சி வேண்டும், அஃதும்
பேசாத செயலே வேண்டும்!

நாயகம் தேவையில்லை,
நடுநிலை ஒன்றே போதும்!
பேயகம் ஆக்கி டாத
பேரன்பின் ஆட்சி வேண்டும்!
தீயகம் போதும், மாந்தர்
செத்ததும் போதும், நாட்டில்
தூயகம் தோற்று விக்கும்
சுதந்திர ஆட்சி வேண்டும்!

அடக்காட்சி தேவை யில்லை!
ஆயுத முனையினாலே
ஒடுக்காட்சி தேவையில்லை!
உலகையே வியக்கவைக்கும்
மிடுக்காட்சி யதுவே வேண்டும்!
மேன்மை கொள் உரிமையாவும்
அடுக்காட்சி யமைதல்
வேண்டும்!
அழகாட்சியாதல் வேண்டும்!

புள்ளடியதுவும் வேண்டாம்!
புட்டிலும் பணமும் வேண்டாம்!
கள்ள வாக் கதுவும் வேண்டாம்!
கருவியின் காப்பும் வேண்டாம்!
தள்ளியே யாவும் நீக்கித்
தமிழ்த் திருக்குறளை மன்றில்
அள்ளிவைத் தாள வல்ல
ஆட்சியொன்றின்றே வேண்டும்!

"அலைஞ்சான் புலவர்"

## மு(செ)ம்மணி

தர்மம்
மறந்து போயிற்று
தர்மம்!
***
குதறினார்கள்
கிளறினார்கள்
புதைத்தார்கள்.
***
புதைத்தவர்கள்
கிளறப்பட
புதைக்கப் பார்த்தார்கள்!
***
முடியாது போக
கிளறப் போவதாக
சொல்லிச் சொல்லி
கிளறிப் புதைத்தனர்.
***
புதைத்தவற்றை
கிளறப் போவதாக
கூட்டம் போட்டனர்
" "
" "
போட்டனர் போட்டனர்.
***
எல்லாம் அகற்றப்பட (?)
மண் கிளறி
வந்தனர்.
***
கிளறினார்கள்
புதைத்தவை
வெளிவர
மீண்டும்
புதைக்கப் பார்த்தனர்!
***
பரவாயில்லை
"உங்கள் விருப்பம்!"
உங்களை
புதைத்த இடம் தேடி
கிளறி
கேட்போம்!

சுபா வரன்- லண்டன்



## யார் இவர்?

இந்தச் சிறுமி இன்று பெரும் நடிகை. பூவின் பெயர் கொண்டவர். யார் என்று தெரிகிறதா? கண்டுபிடிப்பது சுலபம். விடையைச் சரிபார்க்க (18ம் பக்கம் செல்க.)

## தேன் கிண்ணம்

## மரணத்தின் விளிம்பில்





**1975** ஜூலை 22ம் திகதி அமெரிக்காவில் பொஸ்டன் நகரத்தின் குடியிருப்புப் பகுதி ஒன்றில் தீப்பிடித்தது. ஐந்தாவது மாடியில் ஒரு தாயும் மகளும் சிக்கிக் கொண்டனர். அவர்களைக் காப்பாற்ற துரித நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாடியில் சன்னலுக்கு வெளியே பாதுகாப்புத் தடுப்பு ஒன்று உயர்த்திப்பிடிக்கப்பட்டது. தாயும் மகளும் பாதுகாப்புத் தடுப்புக்கு கொண்டுவரப்பட்டனர். மறு நிமிடமே இராட்சத ஏணியொன்றும் அவர்களை நோக்கி செலுத்தப்பட்டது. ஆனால் நிகழ்ந்ததோ எதிர்பாராத பரிதாபம்.


உயிர்த் தப்பிக்க சில விநாடிகளே இருக்கையில் பாதுகாப்புத் தடுப்பின் கீழ்ப்பகுதி உடைந்தது. கூட இருந்த தீயணைப்பு வீரர் ஏணியைப் பிடித்துக் கொண்டார். குழந்தையின் உடல் தற்செயலாக கயிறு ஒன்றில் மாட்டியதால் கீழே விழாது தப்பித்தது.

ஆனால் தாய்...?

அவர் தரையை நோக்கி விழுந்து கொண்டிருக்கும் பரிதாபமான காட்சியைப் பார்த்தீர்களா? தரையில் விழுந்து இறந்துபோனார்.

இதயத்துடிப்பை இழுத்து நிறுத்தும் இக் காட்சியை போர்மன் என்னும் படப்பிடிப்பாளர் பதிவு செய்தார்.





## வாக்குமூலம்

அன்பே
எதிர்க் கட்சியைப்போல
என்மேல் நீ
குற்றச்சாட்டுக்களை
அடுக்கிக்கொண்டே
போகின்றாய்!
-o-
ஆளும் கட்சியைப்போல
அவற்றை நான்
ஏற்கவும் முடியாமல்
மறுக்கவும் முடியாமல்
மௌனம்
காத்துக் கொள்கிறேன்!
-o-
நீ
நினைத்து இருந்தால்
எப்போதோ
ஆளும் கட்சியை
ஆட்டம் காண
வைத்திருக்க முடியும்!
-o-
ஆனாலும் உனக்கு
தெரியாது
ஆட்சி எப்போதோ
கவிழ்ந்து போய்
விட்டதென்று!
-o-

இணுவை உத்திரன்.

## பிரிவுத் துயர்

இலையுதிரும்
காலம் போய்
இளவேனில் காலம்
வந்தும் இன்னுமேன்
நீ வரவில்லை?
**
தாடி வைத்து
சோகம் கொள்ள
தாடிகூட
முளைக்குதில்லை
**
வட்ட வட்டமாய்
புகைவிட்டு
இருமித்திரிய
துணிச்சலும் வரவில்லை!
**
சோகப்பாட்டுப் படித்து
சோகமாய் நான் திரிய
குரல்கூட சரியில்லை...!
**
கடிதமெழுதி
உனக்கு அனுப்ப
நாலெழுத்து
நான் படிக்கவில்லை!
**
நலமாவென்று
நானுன்னை
வந்து பார்க்க
காசுகூட கையிலில்லை!
**
இதற்கு மேலும்
ஏதும் சொல்ல
வெண் புறாவே...!
இத்தமிழனுக்கு
எதுவும் தெரியவில்லை!

பி.சி. அன்ரன்- மட்டுநகர்.

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கர்னிர'

29.08.99 முதல் 04.09.99வரை

**மேடம்:**
மனதில் நம்பிக்கை வெளிப்படும். எடுத்த விடயங்கள் கைகூடும். பயண வசதிகள் மாற்றமடையும். நோய் துன்பங்கள் குறைவடையும். உறவினர்களது உதவிகள் கிட்டும். அச்சுவினி நட்சத்திரப் பெண்களுக்கு யோகபலன் உண்டு.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 9.
அதிஷ்ட திகதிகள் : 29, 03.

**இடபம்:**
செவ்வாய் ஆட்சி பலம் கொள்வதால் திருமணத்தடைகள் விலகும். காரிய சித்தியும் பண வசதிகளும் ஏற்படும். செய்தொழிலில் சிறு சிக்கல்கள் தோன்றும். குழந்தைகளுக்கு நோய் துன்பங்கள் ஏற்படும். ரோகிணி, மிருகசீரிடப் பெண்களுக்கு மகிழ்ச்சியான வாரம்.
அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு, செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 8.
அதிஷ்ட திகதிகள் : 31, 01.

**மிதுனம்:**
2ம் இடத்தில் சுக்கிரன் வக்கிரம் அடைவதால் திடீரென திருமண விடயங்கள் கைகூடும். தூர இடத்து பயணங்கள் ஏற்படும். மனதில் அமைதி கிடைக்கும். கல்வி, தொழில் சீர் சிறப்பாக அமையும். திருவாதிரை, புனர்பூச நட்சத்திரம் கொண்டோர் பண வசதிகள் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: இளமஞ்சள்; எண்: 5.
அதிஷ்ட திகதிகள்: 30, 02.

**கடகம்:**
நோய் துன்பங்கள் குறைவடையும்; பணச்சிக்கல்கள் முடிவிற்கு வரும். பலநாள் நீடித்த பல்வேறுபட்ட பிரச்சனைகள் நிவர்த்திபெறும். இடமாற்றமும் ஆலய தரிசனமும் ஏற்படும். புதிய திட்டங்கள் வகுக்கவரும். ஆயிலிய, பூச, நட்சத்திர, குடும்பத்தவர்களுக்கு பிரச்சனைகள் குறைவடையும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 7.
அதிஷ்ட திகதிகள் : 29, 02.

**சிம்மம்:**
உறவினர்களது மகிழ்ச்சி. புதிய திட்டங்கள் கைகூடுதல், தொழில் பண வசதிகள் பெருகுதல், எதிர்பாராத மாற்றம் என்பன ஏற்படும். மனதில் அமைதியும் திருமண, காதல் விடயங்களில் வெற்றியும் கிட்டும். பூர, நட்சத்திரருக்கு சிறப்பான வாரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண் : 1.
அதிஷ்ட திகதிகள் : 01, 30.

**கன்னி:**
சிக்கல் நிலை விடுபட்டதுபோன்ற நிலை உருவாகும். நண்பர்கள் உறவினர்களது உதவிகள் வந்துசேரும். எதிலும் ஜாக்கிரதையாக செயற்பட வேண்டும். அத்த நட்சத்திரப் பெண்களுக்கு விவாக யோகம் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண்: 5.
அதிஷ்ட திகதிகள்: 30, 03.

**துலாம்:**
ஏழில் கிரக பலம் கொள்வதால் பல முன்னேற்றமான விடயங்கள் கைகூடும். சகோதரர்களது உதவிகள் கிடைக்கப்பெறும். இவ்வாரம் பெரிய திருப்பு முனை வாரமாக அமையும். பலரின் நட்புக் கிடைக்கும். காதல், திருமண விடயங்கள் கைகூடிவரும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: சாம்பல்; எண்: 3.
அதிஷ்ட திகதிகள்: 01, 03.

**விருட்சிகம்:**
நோய் துன்பங்கள் ஏற்படும். ஏமாற்றங்கள் தொடரும், கோப குணங்கள் வரப்பார்க்கும். குடும்பத்தில் பிரச்சனைகள் உருவாகும். எதிலும் அவதானத்துடன் செயல்படவும். கேட்டை, அனுஷ நட்சத்திரம் கொண்டவர்கள் கவனமாக இருக்க வேண்டும். உறவினர்களைச் சந்திப்பார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண் : 4.
அதிஷ்ட திகதிகள் : 31, 04.

**தனுசு:**
முயற்சிகள் வெற்றி அளிக்கும். எதிலும் திருப்தி கிடைக்கும். கல்வி, தொழில் வசதிகள் பெருகும். ஆலயதரிசனமும் பலரின் உதவிகளும் கிட்டும். சிம்ம, விருட்சிகக்காரர்களின் ஒத்துழைப்புக்கள் இவர்களுக்குக் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண் : 6.
அதிஷ்ட திகதிகள் : 30, 02.

**மகரம்:**
தூர இடத்துச் செய்திகள் வந்து சேரும். குடும்பப் பிரச்சனைகள் குறைவடையும். எதிர்பார்த்த விடயங்கள் முன்னேற்றத்தைக் கொடுக்கும். அவிட்ட நட்சத்திரப் பெண்கள் பல நன்மைகளைப் பெறுகிறார்கள்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண் : 5.
அதிஷ்ட திகதிகள் : 29, 30.

**கும்பம்:**
மனதில் வெறுப்பும், காரியங்களில் சுணக்கமும் காணப்படும். எதிர்பார்த்த முடிவுகள் நன்றாக இருக்க மாட்டாது. எதிலும் பொறுமையுடனும், கவனமாகவும் நடக்க வேண்டும். நீர், அக்கினி விடயங்களால் ஆபத்துக்கள் வரக்கூடும். சதய நட்சத்திரர் கவனமாக இருக்கவேண்டும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : பிங்க் வர்ணம்; எண்: 9.
அதிஷ்ட திகதிகள் : 29, 03.

**மீனம்:**
கல்வி முன்னேற்றம், பிரயாண வெற்றி; உறவினர்களது மகிழ்ச்சிகள் ஏற்படும். திருமணக் காதல் தடைகள் விலகும். வார இறுதியில் பண வசதிகள் கிடைக்கும். உத்திரட்டாதி ரேவதி நட்சத்திரருக்கு நல்ல பலன்கள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள்: புதன் வியாழன்.
அதிஷ்ட நிறம்: கலப்பு வர்ணம்; எண்: 6.
அதிஷ்ட திகதிகள்: 30, 01.

## நில்-கவனி-முன்னேறு



* பொய்யானவைகளை உண்மை என்று மயங்கும் சகஜ நிலையிலிருந்து விழிப்புணர்ந்து உண்மையை புரிந்துகொள்ளும் உணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள்.
* பிரமாண்டங்களில் மனதை இழக்காமல் யதார்த்தத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள்.
* சந்தர்ப்ப சூழ்நிலைகளை சரியாக எடைபோட்டு செயல்படும் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள்.
* கனவுகளை வளர்த்துக் கொள்ளுங்கள். வளர்ச்சிக்கு உதவிகரமானது. ஆனால் கற்பனைகளிலேயே வாழ்க்கையின் பெரும்பான்மையைக் கழித்துவிடும் தவறுக்கு அடிமையாய் இராதீர்கள்.
* உண்மையை உணர்ந்து செயற்படுபவர்கள் தான் விரும்பியதை விரும்பிய வண்ணம் விரும்பிய பொழுது அடைகிறார்கள்.
* நீங்களாகவே எந்தவொரு மாயைக்குள்ளும் உங்களை அடைத்துக் கொள்ளாதிருங்கள். உள்ளுக்குள் உங்களை நீங்களே கேள்வி கேட்டுக்கொண்டு விடை காண முயலுங்கள்.
* உங்களைக் கேலி செய்பவர்கள், பழிப்பவர்கள் மீது கோபம் கொள்வதைத் தவிர்த்து கேலிக்கான காரணத்தை சரியாக கண்டுணர்ந்து திருத்திக் கொள்ளுங்கள்.
* மாற்றங்களில் நம்பிக்கை கொண்டு செயல்படுங்கள். அதே நேரத்தில் மாற்றத்திற்குத் தேவையான கால அவகாசத்தில், அவசரப்படாமல் பொறுமை காத்திருங்கள்.
* எத்துணை பெரிய காரியமாயினும் துவக்கம் எளிமையாய்த்தான் இருக்கும். இன்றைக்கு மிகப் பிரமாண்டமாய் விளங்கும் அடையாறு ஆலமரம்கூட மிகச் சிறியதான ஒரிலையுடனான தளிரிலிருந்துதான் வளர்ந்தது என்பதிலே உங்களுக்கு எந்தச் சந்தேகமும் வேண்டாம்.
* தெளிவாய்ப் புரிந்து கொள்வதன் அடிப்படையில் தொடங்கும் நட்புத்தான் நீடித்து நன்மை பயக்கும்; இல்லையேல் சங்கடமும், மனவருத்தமும்தான் மிஞ்சும்.
* ஒரு நாணயத்தின் இரண்டுபக்கமும் போல ஒவ்வொரு செயலுக்கும் அதன் விளைவு; எதிர்விளைவுகளை சரியாகக் கணக்கிட்டு செயல்படுங்கள்.
* சுய நன்மையை மனதில் கொண்டு உண்மைக்கு மாறான காரியத்தை செய்வதையோ அல்லது கருத்தை சொல்வதையோ முற்றிலுமாகத் தவிருங்கள்.
* உங்கள் திறனை வளர்ப்பதென்பது பாறையில் வேர் பிடிப்பதுபோல கடினமானதாயிருந்தாலும், வேர் பிடித்த பின் பாறையைப் பிளப்பதுபோல் தடை தகர்த்து உயரலாம்.

www.padippakam.com

# இளவரசியின் உடையலங்காரம்

ஆகஸ்ட் 31- இளவரசியின் இரண்டாம் ஆண்டு நினைவு நாள்.

உலகெங்கும் பலகோடி மக்களது இதயத்தைத் திருடியவர் இளவரசி டயானா. அவரது உடையலங்காரங்கள் எண்ணில் அடங்காதவை. அவற்றில் ஒருசிலவற்றை இங்கே காணலாம்.



← இங்கிலாந்தில் இளவரசி டயானா இறுதியாகக் கலந்து கொண்ட பொது நிகழ்ச்சியின்போது அவர் அணிந்திருந்த உடை இது. காத்தறின் வோக்கர் என்ற ஆடை அலங்கார நிபுணர் இதனை வடிவமைத்திருந்தார்.

↓ பூத்தையல் வேலைப்பாடுகளுடன் கூடிய வெள்ளை சற்றின் பட்டு உடை. மாலைநேர கொக்டேயில் விருந்துக்காக டயானா இதனை கிரிஸ்டி விற்பனை நிலையத்தில் வாங்கினார். டேவிட் சஸ்ஸினும், லோர்சன் முல்லானியும் இந்த உடையை வடிவமைத்திருந்தனர்.

↓ அரச குடும்பத்தவர் அணிந்து கொள்ளும் ஒவ்வொரு உடையும் ஒரு தடவைக்கு மேல் அணியப்படுவதில்லை. தங்க வர்ணப் பூவேலைப்பாடுகள் கொண்ட சங்கிலி போன்ற அமைப்புடன் இந்த ஆடையின் இடது இடையில் ஒரு 'போ' அமைக்கப்பட்டுள்ளது.

1991ல் நடைபெற்ற ஒரு திரைக் காட்சித் தொடக்க விழாவின் போதும் 1993 ஒரு நடன நிகழ்ச்சியின்போதும் இரு தடவைகள் டயானா இந்த ஆடையை உடுத்தினார்.





5. டயானாவின் பாதணிகள் இவை. அவருடைய கணவர் இளவரசர் சாள்சுடன் இணைந்து செல்லும் வேளைகளில்-குதியோ அல்லது அடிப்பாகமோ சிறிதளவு கூட உயரமில்லாமல் செய்யப்பட்டவையாகத்தான் அமைக்கப்பட்டிருக்கும். இருவரும் ஏறத்தாழ ஒரே உயரமானவர்கள் என்பதனால், உயரமான பாதணிகளை அணிய மாட்டார். இத்தகைய சாதாரண-வேலைப் பாடுகளற்ற பல பாதணிகள் டயானாவிடம் இருந்தன.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** GI

பெயர்:.......................

முகவரி:.......................

.......................

தொழில்:.......................

கையொப்பம்:.......................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 04-09-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# வழங்குவது 05 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

தன் முதற்காதல் ஏமாற்றத்தை மோனிக்காவினால் தாங்க முடியவில்லை. காதலன் அடம் டேலுடன் அதன் பின்னர் அவள் முகம் கொடுத்து பேசியதும் இல்லை.

'ஆண்களை நம்பாதே' என்று தன் தோழி கூறிய புத்திமதியையும் மோனிக்கா மறக்கவில்லை.

அடம் டேலுடன் மோனிக்காவின் காதல் முறிந்த பின்னர் வேறு சில மாணவர்கள் மோனிக்காவை வட்டமிட்டனர்.

அவர்களை தன் பின்னால் அலைய வைப்பதில் ஆனந்தம் கண்டாள் மோனிக்கா. அதனால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் மயக்கும் புன்னகையை விநியோகித்து கிறங்கடித்தாள்.

தனியான சந்திப்புக்களுக்கு அவர்கள் ஏங்கினார்கள். குறைந்த பட்சம் மோனிக்காவின் குளிர்ச்சியான இதழ்களில் ஒரு முத்தம் கொடுக்கவாயினும் ஏங்கினார்கள்.

மோனிக்கா சமயோசிதமாக நழுவினாள். சாமர்த்தியமாக ஏமாற்றினாள். அவர்களைப் பைத்தியமாக்கி ரசித்தாள்.

முன்புபோல் அல்லாது இப்போது மோனிக்காவுக்கு தன்னம்பிக்கை வந்திருந்தது. தன்னாலும் ஆண்களை அலையவைக்க- தவித்துத் தவித்துத் துடிக்கவைக்க முடியும் என்று நினைத்தபோதே சந்தோசமாக இருந்தது.

## பிளேய்லர்

இக் கட்டத்தில் மோனிக்காவுக்கு கிடைத்த இன்னொரு நண்பர் பிளேய்லர். பேவர்லி ஹில்ஸ் நாடகப் பள்ளியைவிட்டு மோனிக்கா விலகிய போதும் அப்பள்ளியுடன் தொடர்புகளை வைத்திருந்தாள்.

மோனிக்காவுடன் அங்கு சில்மிஷங்களில் ஈடுபட்ட ஆசிரியர் வேறு எங்கோ பணியாற்றச் சென்றிருந்தார்.

நாடகப் பள்ளியில் தொழில்நுட்பப் பிரிவுக்கு பொறுப்பாக புதிதாக நியமிக்கப்பட்டவன்தான் பிளேய்லர்.

ஒல்லியான உடல்வாகு கொண்டவன். 25 வயது. மோனிக்காவைவிட எட்டுவயது அதிகம்.

நாடகப் பள்ளியில் படிக்கும் பெண்களில் மசியக் கூடியவர்களை குறிப்பால் உணர்ந்து



## நள்ளிரவு தொலைபேசி

வலை வீசுவதில் பிளேய்லர் கில்லாடி.

பல மாணவிகள் அவன் வலையில் வீழ்ந்தனர். அவனை நாடிப் போகவும் ஆரம்பித்தனர். அவனுடைய அரவணைப்புக்காக ஏங்கினார்கள்.

மோனிக்கா நாடகப் பள்ளிக்குச் சென்ற போது பிளேய்லர் பற்றியும், அவனது காதல் லீலைகள் பற்றியும் சக மாணவிகள் ஒளிவு மறைவு இல்லாமல் அவளிடம் கூறினார்கள்.

மோனிக்காவுக்கும் பிளேய்லரைச் சந்திக்கும் ஆர்வம் ஏற்பட்டுவிட்டது. சக மாணவிகள் பிளேய்லரிடம் அவளை அறிமுகம் செய்து வைத்தபோது, மாணவிகளுக்குத் தெரியாமல் தன் நாவால் தன் உதடுகளை ஈரப்படுத்திக் காட்டினாள் மோனிக்கா.

பிளேய்லர் பெண்களின் ஒவ்வொரு அசைவுக்கும் பொருள் அறிந்தவன். மோனிக்காவைப் புரிந்துகொண்டான். அவன் கண்களில் ஆசை பொங்கித் தெரிந்தது.

## பின்தொடர்ந்தார்

நாடகப் பள்ளியில் கலை நிகழ்ச்சி ஒன்றுக்கு ஒழுங்கு செய்திருந்தனர். அதில் மோனிக் காவும் கலந்து கொண்டாள்.

அப்போது மோனிக்காவிடம் ஜீப் ஒன்று இருந்தது. மோனிக்காவின் அம்மாதான் அந்த ஜீப் வண்டியை வாங்கிக் கொடுத்திருந்தார்.

கலை நிகழ்ச்சி முடிந்ததும் தனது ஜீப்பில் ஏறுவதற்காக வாகனத்தரிப்பிடத்திற்கு மோனிக்கா சென்றுகொண்டிருந்தாள்.

அப்போது அவளை நிழல் போல ஓர் உருவம் தொடர்ந்தது. மோனிக்காவுக்குத் தன்னை யாரோ தொடர்கிறார்கள் என்பது தெரிந்துவிட்டது. நிதானமாக நடந்தாள்.

இப்போது நிழலை வைத்தே அடையாளம் காணக்கூடியதாக இருந்தது. பிளேய்லர்தான் பின் தொடர்ந்து வந்தான்.

அவள் ஜீப்பை நெருங்கிய போது பிளேய்லர் கிட்டத்தில் வந்துவிட்டான். தொண்டையைச் செருமியபடி "மோனிக்கா" என்று கிசுகிசுப்பாக அழைத்தான்.

அப்போதுதான் அவனைக் கண்டதுபோல "நீங்களா?" என்று பொய்யாக ஆச்சரியப்பட்டாள் மோனிக்கா.

பிளேய்லர் அவளைப் பற்றி விசாரித்தான். குடும்ப விவரங்களையும் கேட்டான். மோனிக்கா தன் ஜீப்பை நிறுத்தியிருந்த இடம் மறைவானதாக இருந்தது. அதனால் ஏனையோர் பார்வையில் படாதவாறு, இடையூறு இன்றி அவர்கள் உரையாட முடிந்தது.

உரையாடிவிட்டு விடைபெறுக் கொள்ளும்போது, சட்டென்று மோனிக்காவின் இரண்டு கன்னங்களையும் தன் கைகளால் பிடித்தபடி, அவள் உதடுகளை கவ்வி முத்தமிட்டான்.



பிளேய்லருடன்

ஒரே ஒரு முத்தம். ஆழமான முத்தம். மோனிக்காவுக்கு இனிப்பும், அவன் கடித்ததால் இனிப்புக் கலந்த வலியும் எழுந்தது.

இந்தத் தித்திப்பான சந்திப்பின் பின்பு இருவரும் அடிக்கடி சந்தித்தனர்.

தன் வயதை ஒத்த மாணவர்களைவிட தன்னை விட, அதிக வயதான பிளேய்லரிடம் மோனிக்காவுக்கு அதீத ஈடுபாடு ஏற்பட்டு விட்டது.

மோனிக்காவின் தொலைபேசி இலக்கத்தையும் வாங்கிக்கொண்ட பிளேய்லர் நள்ளிரவு வேளைகளில் தொடர்பு கொள்ளுவான்.

கிளுகிளுப்பாகப் பேசி அவளை மகிழ்ச்சிப்படுத்துவான். நள்ளிரவில் அவனது கிளுகிளுப்பான பேச்சுக்கள் மோனிக்காவுக்குள் கிளர்ச்சிகளை உருவாக்கும்.

அந்தப் பேச்சுக்களை விரும்ப ஆரம்பித்த மோனிக்கா, தினமும் நள்ளிரவில் அவனது ✆போனுக்காகக் காத்திருக்க ஆரம்பித்தாள்.

அவன் பேசும் எதனையும் யாருடனும் பகிர்ந்துகொள்ள முடியாது. அந்தளவுக்கு பச்சை பச்சையாக இருக்கும்.

"நாடகப்பள்ளிக்கு அதிகம் செல்ல வேண்டாம். படிப்பில் கவனம் செலுத்து!" என்று மோனிக்காவுக்கு தாயார் அறிவுறுத்தினார்.

அப்போது மோனிக்கா பெல் எயார் உயர் நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தாள். இறுதி ஆண்டுப் பரீட்சை நெருங்கியதால் தீவிரமாகப் படிக்க வேண்டியிருந்தது.

அதனால் பிளேய்லரை நேரில் சந்திப்பதை விட ✆போனில்தான் அடிக்கடி உரையாட முடிந்தது.

பிளேய்லரின் கிளர்ச்சியூட்டும் பேச்சுக்களால் பரீட்சைக்கு படிப்பதும் அடிக்கடி தடைப்பட்டது.

ஆனாலும் மோனிக்கா படிப்பிலும் கெட்டிக்காரிதான். உள்ளக்கிளர்ச்சி ஊட்டும் பேச்சுக்களையும் அவளால் அசைபோட முடியும். கல்லூரிப் படிப்பையும் கிரகிக்க முடியும்.

இந்தத் திறமையால்தான் உயர்நிலைப் பள்ளியின் இறுதி ஆண்டுப் பரீட்சையில் வெற்றி காண முடிந்தது.

திடீரென்று சில நாட்களாக பிளேய்லரின் தொடர்பு இல்லாமல் போய்விட்டது.

## ஏக்கம்

மோனிக்கா அவனது தொலைபேசி அழைப்புக்காக ஏங்கினாள். அவனது பேச்சுக்கள் அவளது பருவ தாகத்துக்குத் தேவையாக இருந்தன.

மோனிக்காவுக்கும் பிளேய்லருக்கும் இடையே நெருக்கம் ஏற்பட்டதை நாடகப்பள்ளியில் படித்த சக மாணவிகள் அறியவில்லை.

மிக இரகசியமாகவே மோனிக்காவும், பிளேய்லரும் நெருங்கிப் பழகிவந்தனர்.

அதனால் தானாகச் சென்று நாடகப் பள்ளியில் பிளேய்லரைப் பற்றி விசாரிக்க மோனிக்காவுக்கு தயக்கமாக இருந்தது.

பொறுத்துப் பார்த்து பொறுமை இழந்த நிலையில் தயக்கத்தை உதறிப் போட்டுவிட்டு நாடகப் பள்ளிக்கு சென்றாள்.

அங்கு ஏமாற்றம் தரும் உண்மை ஒன்று காத்திருந்தது.

"பிளேய்லருக்கு திருமணம் நடந்து முடித்துவிட்டது. அதனால்தான் அவன் விடுமுறையில் சென்றிருந்தான். கேற் நேசன் என்பவளை பிளேய்லர் பல வருடங்களாக காதலித்து தற்போதுதான் திருமணம் செய்து கொண்டுள்ளான்" என்ற தகவல்களை மாணவிகள் கூறினார்கள்:

"அவனுக்கு ஒருத்தி போதாது. தேன் நிலவை முடித்துவிட்டு வந்து எங்களிடமும் தேன் கேட்பான்" என்று மாணவிகள் கூறி கொல்லென்று நகைத்தார்கள்.



பெல் எயார் உயர் நிலைப் பள்ளியில் மோனிக்கா

மோனிக்காவுக்கு இப்போது பிளேய்லர் மீது கோபம் வரவில்லை. தனக்கு அவன் துரோகம் செய்ததாக சோகமும் வரவில்லை.

அடம் டேலுடன் ஏற்பட்ட அனுபவம் காரணமாக மோனிக்கா தெளிவு பெற்றிருந்தாள்.

பிளேய்லரை தன் காதலனாக மோனிக்கா நினைத்துப் பார்த்ததும் இல்லை. தன் பருவ ஏக்கத்தையும், தாகத்தையும் தணிக்கக்கூடிய ஒருவனாகக் கருதியே பழகிவந்தாள்.

பிளேய்லரை சந்திக்க வேண்டும். அவன் பேச்சைக் கேட்க வேண்டும் என்று மனது உந்திக்கொண்டே இருந்தது.

விடுமுறை முடித்துத் திரும்பி வந்தான் பிளேய்லர். அதுவரை சேகரித்து வைத்திருந்த தணியாத ஏக்கத்தோடு பிளேய்லரை சந்திக்க இடம் குறித்தாள் மோனிக்கா. (வருவாள்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## தெஹிவளை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் — திருமதி ஓ.எஸ். ஹுபஹ்ர், 153, காலிவீதி, தெஹிவளை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

www.padippakam.com





சக்தி தனக்கே கருவி யாக்கு-அது
சக்தியற்ற சிந்தனைகள் தீரும்-மனச்
சக்தி தனக்கே கருவியாக்கு-அதில்
சாரும் நல்ல உறுதியும் சீரும்.

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# கரடி சொன்ன குறள்

ஓர் ஊரில் நல்லான், வல்லான் என்ற நண்பர்கள் வாழ்ந்து வந்தார்கள். பெயர்களுக்கு ஏற்றபடி நல்லான் நல்லவனாகவும், வல்லான் வல்லவனாகவும் இருந்தார்கள்.

ஒரு நாள் நண்பர்கள் இருவரும காட்டு வழியால் நடந்து சென்றனர். வழியில் ஒரு கரடி நின்றுகொண்டிருந்தது.

அதனைக் கண்ட இருவரும் ஓடத் தொடங்கினர். கரடியும் துரத்திக் கொண்டு வந்தது. வழியில் ஒரு மரத்தைக் கண்டதும் மரம் ஏறத் தெரிந்த வல்லான் மரத்தில் ஏறினான்.

மரம் ஏறத் தெரியாத நல்லானோ மரத்தடியில் நின்று கொண்டிருந்தான். இதைப் பார்த்த வல்லான், நல்லானிடம்,

"நல்லான்! கரடி உன்னைப் பார்த்து விட்டால் உன்னையும் கொன்றுவிடும். பின்னர் என்னையும் கண்டு பிடித்துக் கொன்றுவிடும். அதனால் நீ வேறு எங்காவது போய்விடு. நானாவது பிழைத்துக் கொள்கிறேன்!" என்று சொன்னான்.

அந்நிலையில் கரடி அங்கு வந்துவிட, நல்லான் கீழே விழுந்து மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு உயிரற்றவனைப் போல் கிடந்தான்.

அவனுக்கு அருகில் வந்த கரடி அவனை முகர்ந்து முகர்ந்து பார்த்தது அவன் மூச்சைப் பிடித்துக் கொண்டு கிடந்ததால் இறந்து விட்டதாகக் கருதி அவனை ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டுப் போனது.

இவற்றையெல்லாம் மரத்தின் மேலிருந்து பார்த்துக் கொண்டிருந்த, வல்லான் கரடி போனதும் மரத்திலிருந்து இறங்கி வந்தான்.

நல்லானிடம் அவன் வந்து,

"கரடி உன்னிடம் ஏதோ சொல்லியதே? என்ன சொல்லிற்று!" என்று கேட்டான்.



அதற்கு நல்லான் தன்னிடம் கரடி, திருக்குறள் ஒன்று கூறி அதற்கு விளக்கமும் அளித்துச் சென்றது எனக் கூறினான்.

"என்ன திருக்கிறள்?" என்று கேட்டான் வல்லான்.

'கேட்டினும் உண்டு ஓர் உறுதி
இளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்'

என்று குறளைக் கூறிய நல்லான் அதற்கு விளக்கமும் கூறினான்.


"எமக்கு வருகிற தீமையிலும் ஒருவகையான நன்மை உண்டு. எப்படி என்றால் அந்தத் தீமைதான் எம் நண்பர்களின் இயல்புகளை எமக்கு அளந்து காட்டும் அளவு கோலாகும்." நல்லான் கூறிய குறளையும் அதன் விளக்கத்தையும் கேட்ட வல்லான் வெட்கித் தலை குனிந்தான்.

## அதிசயம் - ஆனால் உண்மை!



↑ தென்னாபிரிக்காவைச் சேர்ந்த மோசஸ் சித்தோல் என்ற 33 வயது குற்றவாளிக்கு 2410 வருடங்கள் சிறைத்தண்டனை அளித்து தீர்ப்பளித்தார் நீதிபதி. பஞ்சமா பாதகச் செயல்கள் புரிந்த குற்றத்திற்காகவே இத்தனை வருட சிறைத் தண்டனை.


↓ 'வீவர் பேர்ட்' எனப்படும் தையல் பறவைகளில் பெண் பறவை எந்த ஆண் பறவை அழகாகக் கூடுகட்டுகிறதோ அதனுடன்தான் சேர்ந்து வாழும். அழகில்லாத, அரைகுறையாகக் கூடு கட்டும் ஆண் பறவைகளுடன் சேர்ந்து வாழாது.





← யூகோஸ்லாவிய நாட்டைச் சேர்ந்தவர் ஸ்டோஸ் கோவிக் என்ற இளைஞர். இவருக்கு ஒரு வியாதி. என்ன வியாதி தெரியுமா? தண்ணீரைக் கண்டாலே பயம். அதனால் இவர் குளிக்கவே மாட்டார். தண்ணீர் குடிக்கக்கூடப் பயப்படுவார்.

## வெள்ளைக் குதிரைகள்



இங்கிலாந்தில் ஊபிங்டன் என்ற இடத்தில் வெண்கட்டி மலைகள் அதிகம் உள்ளன. இதைக் குடைந்து உருவங்கள் செதுக்குவது எளிதல்ல. கொஞ்சம் பலமாக உளியைத் தட்டினாலும் தூள் தூளாக உதிர்ந்துவிடும். ஆனால் பல நூற்றாண்டுகளாக நிலைத்து நிற்கும்படியான உருவங்கள் இங்கு செதுக்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த மலைப்பகுதியில் மொத்தம் 17 குதிரைகள் செதுக்கப்பட்டுள்ளன. வெண்ணிற மலைகளாக இருப்பதால் இந்தக் குதிரைச் சிற்பங்கள் வெள்ளை நிறத்தில் இயற்கையாகவே ஏற்பட்டு விட்டன.

இங்கிலாந்தை ஆண்ட அல்பிரட் என்ற மன்னனின் சாதனைகளைக் குறிக்கும் விதமாக இந்தக் குதிரை சிற்பங்கள் செதுக்கப் பட்டன என்று கூறுகின்றனர்.

இந்தக் குதிரைச் சிற்பங்களைப் போலவே பின் நாட்களில் 1700 மற்றும் 1800ல் குதிரை, யானை, சிங்கம் போன்ற பல உருவங்களும் செதுக்கப்பட்டன. ஆனால் இவை எல்லாவற்றையும்விட வெள்ளைக் குதிரைகளின் சிற்பங்கள் தான் தத்ரூபமாக உள்ளன.

காலத்தால் அழியாத இந்த கலைப் பொக்கிஷங்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் விசேஷமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **04.09.1999**.

வர்ணம் தீட்டும் போட்டி இல: **311**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 309

பரிசுக்குரியவர்:
எம்.சிபாயா,
மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, திருகோணமலை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எல்.ராதிகா, மத்திய மலைமகள் கல்லூரி, தெல்தொட்ட. | கி.ஷர்மினா, சைவ மங்கையர் கழகம், வெள்ளவத்தை, கொழும்பு-06. |
| பிரியங்கா சிவலோகநாதன், விகாரமாதேவி பெண்கள் கல்லூரி, கண்டி. | ∴பாத்திமா நஷ்மா நஜீம், ஒக்ஸ்∴போட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை. |
| பொ.கமல்ராஜ், கமு/கோளாவில் விநாயகர் மகா வித்தியாலயம், அக்கரைப்பற்று | பி.பாலரஞ்சனி, கிரான்லி.த.பாடசாலை, அக்கரப்பத்தனை. |
| எஸ்.ஜாபிறா, மட்/மாக்கான்மாக்கார் வித்தியாலயம், மீராகேணி, ஏறாவூர். | க.சிவஞானம், நெளுக்குளம்/ கலைமகள் மகாவித்தியாலயம், வவுனியா. |
| ஸ்ரீஸ்கந்தராஜா விநோதன், தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை. | பெ.வி.பியோணி பிரியதர்சனி, தமிழ் மத்திய கல்லூரி, பண்டாரவளை. |

## துணுக்குகள்

மின்சாரத்தைக் கண்டுபிடித்தவர் தோமஸ் அல்வா எடிசன். இது எல்லாருக்கும் தெரியும். இந்த மின்சாரம் போனதும் முதலில் தேடுவது டோர்ச் லைட்டைத்தான். இதைக் கண்டுபிடித்தவர் யார் தெரியுமா?

**தோமஸ் அல்வா எடிசன்தான் இதையும் கண்டுபிடித்தார்.**

'ப்ளீஸ்' என்றால் 'தயது செய்து' என்று பொருள். உங்களுக்குப் ப்ளீஸ் என்பவரைத் தெரியுமா?

இவர்தான் முதன் முதலாகக் கார் விபத்தில் பலியானவர். இது 1895ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நியூயோர்க் நகரில் இடம்பெற்றது.

உலகில் சினிமா திரையரங்குகள் எங்கு அதிகமாக உள்ளன தெரியுமா?

ரஷ்யா, அமெரிக்கா, ஃபிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, பல்கேரியா, ஸ்பெயின், மெக்ஸிகோ, இந்தியா ஆகிய நாடுகளில்தான் அதிகமாக உள்ளன.

ஏரியில் இருந்து கடலில் கலக்கும் நதியைப் பற்றித்தான் நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் கடலில் தோன்றி ஏரியில் கலக்கும் நதி ஒன்று இருக்கிறது. அது எது தெரியுமா?

ஆபிரிக்காவில் உள்ள சுஜீரா என்ற நதி தான் அது.

## விடுகதைகளும் விடையும்

இங்கே ஐந்து விடுகதைகள் உள்ளன. ஆனால் அவை எல்லாவற்றிற்கும் ஒரே விடைதான். எங்கே கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

1. வளைவான், நெளிவான் நம்மைக் கலங்க வைப்பான்.
   அவன்யார்?
2. சட்டை போடாமலே சட்டையைக் கழற்றும்
   அது என்ன?
3. ஜன்னல், பின்னல் கயிறு, எண்ணெய் படாத கயிறு
   அது என்ன?
4. கண் உண்டு, காது இல்லை, ஆனால் பார்க்கும் கேட்கும்
   அது என்ன?
5. வடிவழகு மாப்பிள்ளை வயிற்றால் நடக்கின்றார்.
   அவர் யார்?

விடை: பாம்பு

## அதிகம் பேசப்படும் மொழி



உலகில் அதிகம் பேர் பேசுவது எந்த மொழி என்று கேட்டால் ஆங்கிலம் என்று பலர் கூறுவார்கள். ஆனால் சீனமொழிதான் அதிக மக்களால் பேசப்படுகிறது. சுமார் 88 கோடி பேர் சீனமொழி பேசுகின்றனர்.

இதற்கடுத்ததாக இந்திமொழிதான் உலகில் அதிகம் பேரால் பேசப்படுகிறது. உலகில் 46 கோடி மக்கள் இந்தி மொழியைப் பேசுகிறார்கள். உலகம் முழுவதும் பரவலாகப் பேசப்படும் ஆங்கில மொழி நான்காவது இடத்தில் உள்ளது.


தமிழ்மொழி 21வது இடத்தில் உள்ளது.

## காதுச் செய்திகள்



* வெட்டுக்கிளிக்கு காதுகள் பின்னங்கால்களின் ஆரம்பத்தில், வயிற்றையொட்டி அமைந்துள்ளன. சில இனங்களில் முன்னங் கால்களில் அமைந்துள்ளன.
* வெளவாலின் காதுகள் ரேடார் செவியுணர்வு கொண்டவை.
* ஆபிரிக்க யானையை விட இந்திய யானைக்கு காதுகள் சிறியவை. யானைகளின் காது அசைப்பு அனிச்சைச் செயலாகும்.
* விட்டில் பூச்சிக்கு செவிக்குப் பதிலாக பிம்பானஸ் என்ற உறுப்புக்கள் உள்ளன. இவை மீள் அலைகளை உணரும் தன்மையுடையன.
* நீர் யானைக்கு காதினுள் வால்வு அமைந்திருக்கும்.
* கரப்பான் பூச்சிக்கு ஒலியை உணரும் ரோம இழைகள் அடிவயிற்றில் அமைந்துள்ளன.
* மீனின் காதுகள் அதன் உடலுக்குள் கண்ணுக்குத் தெரியாத இடத்தில் உள்ளன.
* பறவைகளில் தீக்கோழிக்கு மட்டுமே செவித்துளை பெரியதாகவும் கண்ணுக்குப் புலப்படும்படியும் அமைந்துள்ளது.
* டொல்பினுக்கு மனிதனை விட ஒரு மடங்கு கூர்மையாகக் காது கேட்கும்.
* கொசுக்கள் உணர் கொம்பிலுள்ள ஆயிரம் உரோம இழைகள் மூலம் ஒலி அலைகளை உணர்கின்றன.
* கடல் சிலந்திகள், ஸ்குவிட்கள் ஆகியவற்றுக்கு செவி புலனுறுப்புக்கள் கிடையாது. இவற்றுக்கு சுத்தமாகக் காது கேட்காது.
* எறும்பு, இலையான் முதலியவற்றிற்கு கேட்கும் சக்தி கிடையாது.

## ஏன் தெரியுமா



பசிபிக் சமுத்திரம் 'நெருப்பு வளையம்' என்று அழைக்கப்படுகின்றது. இப்படி அழைக்கப்படுவது ஏன் என்று தெரியுமா?

உலகில் உள்ள ஐநூறுக்கும் மேற்பட்ட எரிமலைகளில் மிக அதிகமான அளவு எரிமலைகள் பசிபிக் சமுத்திரங்களின் கரையோரங்களில்தான் உள்ளன. அதனால்தான் பசிபிக் சமுத்திரம், 'நெருப்பு வளையம்' என அழைக்கப்படுகிறது.

**இதுவரை**

**பாக்கியத்தின் மகள் வர்ணாவின் நாய் பிங்கிக்கு 'டிஸ்டெம்பர்' எனப்படும் கொடிய நோய் வருகிறது. அதனைக் காப்பாற்றவே முடியாது என்று டாக்டர்கள் கைவிரிக்கின்றனர். ஆனால் அந்த நாய் அதிசயமாக உயிர் பிழைக்கிறது.**

**இதேவேளை, சொர்ணம், நீலமேகம் தம்பதியின் மகள் பூவிழி கொலையாகிறாள். இனி...**



# கையில் 18 சிக்கிய மின்னல்



வர்ணா டாக்டர் ரத்னவேலின் க்ளினிக் போய்ச் சேர்ந்தபோது அவர் ஓய்வாய் உட்கார்ந்து மெடிக்கல் மேகஸின் ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்தார். வர்ணாவைப் பார்த்ததும் மலர்ந்தார்.

"வாம்மா...! உடனே புறப்பட்டு வந்ததுக்கு நன்றி!" அவர் காட்டிய நாற்காலியில் உட்கார்ந்து கொண்ட வர்ணா கேட்டாள் "டாக்டர்... நீங்க என்னை உடனே புறப்பட்டு வரச்சொன்னீங்க... எதுக்காகன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"கண்டிப்பா..." சொன்னவர் தன் இரண்டு கைகளையும் மேஜையின் மேல் ஊன்றிக் கொண்டு மெல்லிய குரலில் கேட்டார்.

"வர்ணா...! நான் ஒரு விஷயம் கேள்விப்பட்டேன். உன் வீட்டுக்கு எதிரில் இருக்கிற பார்கவிங்கிற பொண்ணுக்கு தீ விபத்து ஏற்பட்டு உடல் கருகி உயிர்க்கு போராடிக்கிட்டு இருக்கும் போது நீ போய் பார்த்ததாகவும் அதிசயிக்கத்தக்க முறையில் அந்தப் பொண்ணு உயிர் பிழைச்சுட்டதாகவும் ஒரு டாக்டர் சொன்னார். உண்மையாம்மா?"

"ஆமா டாக்டர்... நானே இன்னும் அந்த பிரமிப்பிலிருந்து விடுபடலை. உன் கையில என்ன மந்திரக் கோலா வெச்சிருக்கேன்னு அந்த டாக்டர்கூட வேடிக்கையா கேட்டார்."

ரத்னவேல் புன்னகைத்தார்." அவர் வேடிக்கையா கேட்டிருக்கலாம். ஆனா உண்மை அதுதான். உன்கிட்ட நிஜமாவே ஒரு மந்திரக் கோல் இருக்கு..."

வர்ணா தன் விழிகளை விரித்தாள்.

"டாக்டர்... நீங்க என்ன சொல்றீங்க...?"

"கண்ணுக்குத் தெரியாத ஒரு மந்திரக்கோல் உன்கிட்ட இருக்கம்மா... இல்லேன்னா செத்துப் போக வேண்டிய நாய் பிங்கி இப்போ உன்னோட வீட்ல விளையாடிக்கிட்டி இருக்காது. தீக்காயங்களோடு உயிரை விட்டிருக்க வேண்டிய பார்கவி இப்போ ஹாஸ்பிடல்ல அட்மிட்டாகி உயிர் பிழைச்சுகிட்டு இருக்க மாட்டா..."

"ஸார்... என்கிட்ட எந்த சக்தியும் இருக்கிற மாதிரி தெரியலை... நான் ஒரு சாதாரண பெண். நாய் உயிர் பிழைச்சதும், பார்கவி உயிர் பிழைச்சதும் எதேச்சையா நடந்த செயல்களா இருக்கலாம் இல்லையா...?"

"அப்படி இருக்க வாய்ப்பே இல்லைம்மா. உன்கிட்டே ஏதோ ஒரு சக்தி இருக்கு. நாய் உயிர் பிழைச்ச விஷயத்தை நீ டெலிஃபோனில் சொன்னதும் நான் உன் வீட்டுக்கு வந்தேன். உன் வீட்டிலேயும் எனக்கு ஒரு வித்தியாசமான அனுபவம் கிடைச்சது."

"என்ன அனுபவம் டாக்டர்?"

"அதெல்லாம் வேண்டாம்மா! சொன்னாலும் யாரும் நம்ம மாட்டாங்க. உன் கிட்ட ஒரு பவர் இருக்கிறது எனக்கு உறுதியா கன்ஃபர்ம் ஆயிடுச்சு... இருந்தாலும் அதை மறுபடியும் ஒரு தடவை கன்ஃபர்ம் பண்ணிக்க ஆசைப்பட்டுத்தான் உன்னைக் கூப்பிட்டேன். உனக்கும் இதுல விருப்பம் இருந்தா நாம ரெண்டு பேரும் இப்போ ஒரு இடத்துக்கு போய்ட்டு வரலாம்."

"எங்கே டாக்டர்...?"

"இண்டஸ்ரியலிஸ்ட் ராஜநாராயணனை உனக்குத் தெரியுமா வர்ணா...?"

வர்ணா தலையசைத்தாள். "தெரியாமே என்ன ஸார். இன்னிக்கு சிட்டியில் அவர் நெம்பர் ஒன் மல்டிமில்லினர். அவரைப் பத்தி தெரியாதவங்க மெட்ராஸ்ல யாரும் இருக்கமாட்டாங்க..."

"யூ.. ஆர் கரெக்ட். அவர் வீட்டு நாய்களுக்கு நான்தான் டாக்டர் அண்ட் கேர் டேக்கர். வாரம் ஒரு தடவை அவரோட பங்களாவுக்குப் போய் அங்கே வளர்க்கப்படற நாய்களை செக்கப் பண்ணி மருந்து மாத்திரை கொடுக்க வேண்டியது என்னோட வேலை. கடந்த பத்து வருஷ காலமா இந்த வேலையை பண்ணிட்டிருக்கேன். மில்லினர் ராஜ் நாராயணனுக்கு மனைவியும் ஒரு பையனும் உண்டு. பையன் இப்போ ஜெர்மனியில் தொழில் சம்பந்தமா மேல் படிப்பு படிக்க போயிருக்கான். பேர் தீபக்.ராஜநாராயணனோட மனைவி திலகம் கடந்த சில காலமாகவே நிரந்தர நோயாளி. பி.பி., சுகர், அல்சர் இப்படி எல்லா வியாதிகளுமே உண்டு. அவங்க ஃபேமிலி டாக்டரான பாலச்சந்தர் கணேஷ் எல்லா வகையான ட்ரீட்மெண்களையும் கொடுத்துப் பார்த்துட்டார். ஃபாரினுக்கும் நாலைஞ்சு தடவை போய்டு வந்தாச்சு. அந்தம்மாவோட ஹெல்த் மட்டும் இம்ப்ரூவ் ஆகலை."

வர்ணா கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்க ரத்னவேல் தொடர்ந்தார்.

"இப்போ கடந்த ரெண்டு நாளா அந்த அம்மாவோட உடல் நிலை ரொம்பவும் மோசமாகி கோமா ஸ்டேஜுக்கு போயிடுச்சு. சிட்டியில் இருக்கிற எல்லா டாக்டர்ஸும் வந்து பார்த்துட்டு இந்த கோமா ஸ்டேஜிலேயே உயிர் எந்த நேரத்திலும் பிரியலாம்னு சொல்லிட்டுப் போயிட்டாங்க. அந்த அம்மாவுக்கு மகன் தீபக்கோட கல்யாணத்தை கண்ணால பார்த்துட்டு சாகணும்னு ரொம்ப ரொம்ப ஆசை. ஆனா விதி அந்த ஆசைக்கு முட்டுக்கட்டை போட்டிருக்கு. அந்த முட்டுக்கட்டையை அகற்ற உன்னால முடியும்னு நான் நினைக்கிறேன்..."

"டா..க்..ட..ர்.."

"நான் என்ன சொல்ல வர்றேன்னு உனக்கு புரிஞ்சிருக்கலாம்..."

"புரியுது டாக்டர்...! நான் வந்து அந்த அம்மாவைப் பார்க்கணும்."

"எஸ்... பார்த்தா மட்டும் போதாது. அந்த அம்மாவுக்குப் பக்கத்துல உட்கார்ந்து ஆத்மார்த்தமா அவங்களைத் தொட்டுப் பேசணும். உங்களுக்கு குணமாயிடும்னு உணர்ச்சிபூர்வமா சொல்லணும்... இப்பவே புறப்பட்டு போலாமா?"

"ஸாரி... டாக்டர்... நான் வரலை..." வர்ணா நாற்காலியைத் தள்ளி விருட்டென்று எழுந்து கொண்டாள்.

**கிரைம் சக்கரவர்த்தி**

**ராஜேஷ்குமார்**

இன்ஸ்பெக்டர் பலராமன் பூவிழியின் அப்பா நீலமேகத்துக்கு முன்பாய் உட்கார்ந்திருந்தார். முகம் இறுகிக் காணப்பட்டது. குரலில் சற்றே கடுமை கலந்து பேசிக் கொண்டிருந்தார்.

"இதோ பாருங்க மிஸ்டர் நீலமேகம்! உங்க பொண்ணு பூவிழியோட மார்டர் சம்பந்தமான விசாரணை ஒரு சங்கிலித் தொடர் மாதிரி நீண்டுகிட்டே போயிட்டிருக்கு. பூவிழியைக் கொலை பண்ணினது மிதுன்தான்னு நினைச்சு விசாரிக்கப்போனா நான் ஸ்பாட்ல இருக்கும்போதே அவனை யாரோ கொலை பண்ணிட்டாங்க. கேஸ்ல இப்போ பயங்கர குழப்பம். இந்த குழப்பம் விலகணும்னா நீங்க பூவிழியைப் பத்தின உண்மையான தகவல்களைச் சொல்லணும்."

"உண்மையான தகவல்களா?"

"ம்..."

"அதைத்தான் ஏற்கனவே சொல்லிட்டேனே..?"

"நோ... நீங்க சொன்ன தகவல்களுக்கும் நான் கேள்விப்பட்ட தகவல்களுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு."

"நீங்க என்ன கேள்விப்பட்டீங்க?"

"உங்க பொண்ணு பூவிழிக்கு நிறைய பாய்ஃப்ரண்ட்ஸ் இருந்திருக்காங்க. ராத்திரி நேரங்கள்ல கார்ல அவ பலரோடு சுத்தியிருக்கா..."

நீலமேகம் முகம் சிவந்து குரலை உயர்த்தினார். "இன்ஸ்பெக்டர்! வாட் நான்சென்ஸ்.. யூ... ஆர் டாக்கிங், எம் பொண்ணு அப்பேர்ப்பட்டவ கிடையாது..."

"பொண்ணைப் பெத்தவங்க எல்லோருமே தன்னோட பொண்ணைப் பத்தி இப்படியொரு சர்ட்டிபிகேட்டை வெச்சிருப்பாங்க. அந்த சர்ட்டிபிகேட்டைத்தான் நீங்களும் எடுத்து காட்டறீங்க. ஆனா உங்க பொண்ணோட நடத்தை வேறு விதமா இருந்திருக்கு."

"எம்பொண்ணு பூவிழியைப் பத்தி இப்படி மோசமான தகவல்களைக் கொடுத்தது யார் இன்ஸ்பெக்டர்?"

"கேஸ் கோர்ட்டுக்கு போகிற வரை அதை வெளியே சொல்ல முடியாது."

"எம் பொண்ணை இழந்ததுக்கத்தை விட நீங்க சொல்ற வார்த்தைகள் கொடுமையா இருக்கு இன்ஸ்பெக்டர். அவ தப்பான பொண்ணு கிடையாது."

"மிஸ்டர் நீலமேகம்! உங்க உணர்ச்சிகளைக் கொஞ்சம் தள்ளி வெச்சுட்டு ப்ராக்டிகலா யோசனை பண்ணிப் பாருங்க. ஒரு கொலை நடக்கணும்னா ஒரு பலமான பின்னணி இருக்கணும். சாதாரணமா ஆபீஸுக்கு போய்ட்டு வர்ற ஒரு பொண்ணை இவ்வளவு கொடூரமா யாரும் கொலை பண்ணியிருக்க மாட்டாங்க. பூவிழி கற்பழிக்கப்படலை. ஸோ கொலையாளியின் நோக்கம் அவளைக் கொல்றது மட்டுமே.. கொலை செய்யக்கூடிய அளவுக்கு ஒருவனுக்கு பூவிழி மேல் கோபம் வருதுன்னா ஏதோ ஒரு காரணம் திரை மறைவுக்குப் பின்னாடி இருக்கு. பூவிழிகிட்ட மரண வாக்கு மூலம் வாங்கும்போது உன்னை இப்படி தாக்கினது யார்ன்னு கேட்டோம். அந்தக் கேள்விக்கு பூவிழி 'மி'ன்னு ஒரு எழுத்தை மாத்திரம் சொல்லிட்டு உயிரை விட்டுட்டா. அந்த எழுத்துக்குரிய மிதுனும் இப்போ உயிரோடு இல்லை. உண்மையிலேயே பூவிழி மிதுனைக் குறிப்பிடறதுக்காகத்தான் 'மி'ன்னு சொன்னாளா.. இல்லை வேறு யாரையாவது நினைச்சுகிட்டு சொன்னாளான்னு தெரியலை. குழப்பம் இப்படியொரு பூதாகரமான நிலைமைக்கு பெரிசாயிட்ட காரணத்தினால்தான் மறுபடியும் இந்த விசாரணையை ஆரம்பிச்ச இடத்துக்கே வந்துட்டேன். பூவிழியைப் பத்தின எந்த ஒரு உண்மையாவது உங்களால மறைக்கப்பட்டிருந்தா அதை வெளியே சொல்ற கட்டாயம் இப்போ வந்திருக்கு."

நீலமேகம் தீர்க்கமாய் தலையாட்டினார்.

"ஸாரி இன்ஸ்பெக்டர்... நீங்க நினைக்கிற மாதிரி நான் எந்த உண்மையையும் மறைக்கலை..." பலராமன் புன்னகைத்தார்.

"மிஸ்டர் நீலமேகம்! நீங்க மறைச்சு வெச்சிருக்கிற உண்மையை இப்போ வெளியே கொண்டு வரட்டுமா..?"

(தொடர்ந்து வரும்)

---

**'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.**

குடும்பம் உணவுக்குப் போராடிக் கொண்டிருந்த அந்த வறுமைச் சூழ்நிலையிலும், அந்தப் பெண்ணின் உடலழகு குறையாமல் இருந்தது ஒரு ஆச்சரியம்தான். அதற்குக் காரணம், அவளது வயதாக இருக்கலாம். வாழ்க்கைச் சூழலைப் பொருட்படுத்தாத மனமாக இருக்கலாம். இல்லை, இவளது அழகு ஒன்றை நம்பித்தான் இந்தக் குடும்பத்தின் எதிர்காலம் இருக்கிறது என்ற இரக்கத்தின் காரணமாக இறைவன் அருளிய வரமாகவும் இருக்கலாம்.

அவளை முதலில் சுவைப்பது யார்? அந்த அதிஷ்டசாலி நாமாகத்தான் இருக்க வேண்டும் என்று சில முக்கியஸ்தர்களுக்குள் ஒரு இரகசியப் போட்டி நடந்து கொண்டிருந்தது.


நடுநிசியில், மதுபோதையில், வீட்டின் கதவைத் தட்டி எழுப்பி, 'இப்பொழுதே என்னுடன் வா' என்று கூப்பிட்டவர்களும் உண்டு. 'எங்களின் உதவியோடுதான் உனது வருங்கால வாழ்வில் வசந்தம் வீசப்போகிறது. நாங்கள் எதிர்பார்ப்பதை நீ கொடுக்கத்தான் வேண்டும்.' என்று அவளது வாழ்வை வர்த்தக ரீதியில் அணுகியவர்களும் உண்டு.

வாழ்வில் விருப்பங்களுக்கு விலை கொடுக்கலாம்; ஆனால் அவள் விரும்பாத வாழ்வுக்கு விலை கேட்டுக் கொண்டிருந்தது இந்தச் சமுதாயம்.

ஒருநாள் பகல் பொழுதில் படக் கம்பெனியில், அந்தப் புதுமுக நடிகைக்கு வசனம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தேன் நான். அலுவலகத்தில் இருந்தவர்கள் நாங்கள் மூவர். நான், அந்த நடிகை, ஆபீஸ் பாய்.

திடீரென்று வெளியில் ஒரு கார் வந்து நின்றது. மூவருமே எட்டிப் பார்த்தோம். பட சம்பந்தமான முக்கியஸ்தர் ஒருவர், காரிலிருந்து இறங்கி உள்ளே வந்தார்.

# தர்ம யுத்தம் 03



ஆர்.சி.சக்தி

தற்செயலாக வந்தவர்போல் தன்னைக் காட்டிக்கொண்ட அவர், திடீரென்று ஆபீஸ் பையனை அழைத்து, சென்னை நகரில் இன்னொரு கோடியில் இருக்கிற இடத்தைக் குறிப்பிட்டு, ஒரு வேலை சொல்லி அனுப்பி வைத்தார். ஆபீஸ் பாய் சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டுப் போய்விட்டான்.

**போய் வா**

மறுபடியும் நாங்கள் வசனத்தில் ஈடுபட்டபொழுது, அந்த முக்கியஸ்தர் ஹாலுக்குள் வந்தார். என்னை அழைத்து, "எனக்கு ஒரு முக்கியமான தபால் வரவேண்டியிருக்கு. நீ உடனே என் வீட்டிற்குச் சென்று, ஏதேனும் தபால் வந்திருக்கிறதா என்று கேட்டு, வந்திருந்தால் வாங்கிக்கொண்டு வா" என்றார்.

நான் குழப்பத்துடன், "வீட்டிற்கு ஒரு ஃபோன் பண்ணிக் கேட்டுரலாமே!" என்றேன். அதற்கு அவர், "எங்க வீட்டுல ஃபோன் வேலை செய்யல, அதனாலதான் சொல்றேன் போயிட்டு வா" என்றார்.

நான் ஓரக் கண்ணால் அந்தப் புதுமுக நடிகையைப் பார்த்தேன். அந்தப் பெண்ணும் கண்களாலேயே என்னைக் கெஞ்சினாள் 'போகாதீர்கள்.' என்று.

ஆனால் நான் போகாமல் இருக்க முடியாது. என்னுடைய நிலைமை இது.

பார்வையிலேயே அந்தப் பெண்ணுக்குப் பதில் சொன்னேன்: "தைரியமாக இரு. சீக்கிரம் வந்துவிடுகிறேன்."

காதலர்கள்தான் கண்களால் பேசிக்கொள்வார்கள் என்று படித்திருக்கிறோம்; கேட்டிருக்கிறோம். ஆனால், அன்று அந்த இக்கட்டான சூழ்நிலையில் அண்ணன், தங்கையாகப் பழகிக் கொண்டிருந்த நாங்களும் பேசிக்கொண்டது கண்களால்தான். கண்கள், மனித சமுதாயத்திற்குக் கிடைத்திருக்கிற மாபெரும் சேவகன்; உள்ளத்து உணர்வுகளை மற்றவர்களுக்குத் தெரியாமல் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளக் கிடைத்த இரகசிய தபால்காரன்; மனதின் தூதுவர். அங்கே கவர் கிடையாது; கார்டு கிடையாது; ஸ்டாம்ப் என்ற பேச்சுக்கே இடமில்லை. எந்தத் தபால் அலுவலகத்தின் முத்திரையும் அதற்குத் தேவைப்படாது.

நான் அலுவலகத்திலிருந்து வெளியே வந்தேன். என் உடலிலும், மனதிலும் ஒரு வித படபடப்பு.

அலுவலகம் அமைந்திருந்த இடம் தி.நகரில் சிவா-விஷ்ணு கோயிலுக்கு எதிரில் அமைந்திருக்கும் மகாலெட்சுமி தெரு. அந்த முக்கியஸ்தரின் வீடு, அன்றைய போக் ரோட்டின் ஒரு கடைசியில். சீக்கிரம் போய்த் திரும்ப வேண்டும் என்று எனக்குள் ஒரு உத்வேகம். இருந்த சைக்கிளையும் ஆபீஸ் பையன் எடுத்துக் கொண்டு போய்விட்டான்.

**ஓட்டம்**

நான் ஓட ஆரம்பித்தேன். சிறிது, சிறிதாக என் ஓட்டத்தின் வேகம் அதிகரித்தது. அன்றிருந்த என் இளமையும் எனக்குத் துணை புரிந்தது. முடிந்தவரை வேகமாக ஓடினேன். என் வாழ்நாளில் அதற்கு முன்பும் சரி, பின்பும் சரி, எதற்காகவும் எதைத் தேடியும், யாருக்காகவும் அப்படி ஓடியதே இல்லை. தெருவில் போன ஒரு சிலர் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். அது பற்றி எல்லாம் நான் கவலைப்படவே இல்லை.

அந்த முக்கியஸ்தர் வீட்டின் காலிங் பெல்லை அடித்தேன். வீட்டிலிருந்தவர்கள் வெளியே வந்ததும், "ஏதாவது தபால் வந்திருக்கான்னு சார் கேட்டுட்டு வரச் சொன்னார்" என்று மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்கக் கேட்டேன்.

எனக்கு அவர்கள் பதில் சொல்வதற்கு முன்னால் என்னை ஏற இறங்கப் பார்த்தார்கள். "ஏன் இப்படி இரைக்கிறீர்கள்? ஓடியா வந்தீங்க?" என்கிற அவர்களின் கேள்விக்குப் பதில் சொல்கிற நிலைமையில் நான் இல்லை.

"தபால் எதுவும்இல்லை" என்ற பதிலை அவர்களிடம் பெற்றுக்கொண்டு, மறுபடியும் ஓட்டம்.

**மிரண்டு போய்**

நான் அலுவலகத்தை அடைந்தபோது, அந்தப் புதுமுக நடிகை, என்னை 'அண்ணா' என்று அழைத்துப் பழகிய அந்தத் தங்கை, வாசல் படிக்கட்டுக்களில்; மிரண்டு போய் உட்கார்ந்திருந்தாள்.

உள்ளிருந்து அந்த முக்கியஸ்தரின் குரல் மாத்திரம் கேட்டுக் கொண்டிருந்தது.

"ஏய், இங்க வான்னு கூப்பிடறேன் இல்ல, உள்ளே வா."

நான் புரிந்துகொண்டு ஆறுதல் அடைந்தேன். தவறு நடக்கவில்லை. தவறுக்கான முயற்சி நடந்திருக்கிறது. அந்த முயற்சி திருவினையாகவில்லை.

நான் உள்ளே சென்று அவரிடம், "ஐயா, போஸ்ட் ஒண்ணும் வரலைன்னு வீட்ல சொன்னாங்க" என்றேன்.

என்னை இவ்வளவு சீக்கிரம் எதிர்பாராத அவரின் முகம் இறுகியது. இப்போது அவருக்கு இரண்டு ஏமாற்றங்கள்.

அந்தப் பெண்ணால் ஒன்று; என்னால் ஒன்று. அவளது மறுப்பு ஒரு ஏமாற்றம். மறுபடியும் முயற்சிக்கலாம் என்கிற நிலையில் எனது வருகை ஒரு ஏமாற்றம். "சரி, சரி, நான் வர்றேன். ஆபீசை பத்திரமா பார்த்துக்கோ" என்று தன் கைப்பெட்டியை எடுத்துக்கொண்டு, காரில் ஏறிச்சென்றார். செல்ஃப் டிரைவிங்.

**கண்ணீர்**

கோடை வெப்பத்தினால், ஓடிவந்த வேகத்தில் வேர்வையில் நனைந்திருந்தது என் சட்டை. காய்ந்து போயிருந்த எனது காற்றுக் குழாயின் தாகம் தணிப்பதற்காக தண்ணீர் குடிக்கலாம் என்று டம்ளரைத் தேடினேன்.

அப்போது உள்ளே வந்த அந்தப் புதுமுக நடிகை, இல்லை, என் தங்கை நனைந்திருந்த என் சட்டையை, இன்னும் முழுமையாக நின்றிராத என் மூச்சு இரைப்பைப் பார்த்து, அவரைக் காப்பாற்ற நான் பட்ட கஷ்டத்தைப் புரிந்துகொண்டார் என்று நினைக்கிறேன். அவர் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. சற்று நேரத்திற்கு முன்னால் 'என்னைத் தனியா விட்டுட்டுப்போகாதீங்க' என்று கண்களால் பேசியவர், இப்போது தன் நன்றியையும் கண்களால்தான் வெளிப்படுத்தினார்.

எனக்கு தண்ணீர் குடிக்க வேண்டும் என்ற எண்ணம் மறந்து போயிற்று. தாகம் என் நினைவில் இல்லை. தாகத்தைத் தீர்க்கும் சக்தி தண்ணீருக்கு மட்டும்தான் உண்டா? இல்லை, கண்ணீருக்கும் உண்டு என்பது என் அனுபவம்.

(அனுபவங்கள் வரும்)

**இதுவும் ஒரு நடிகையின் கதைதான்**



படிப்பகம்

www.padippakam.com

# கோகிலா என்ன செய்து விட்டாள்?

## 17

**தமிழ் நாட்டின் முற்போக்கு எழுத்தாளர் ஜெயகாந்தன். அவரது எழுத்துக்கள் உலகப் பிரசித்தமானவை. பலகோடி வாசக நெஞ்சங்களை வசீகரம் செய்தவை.**

## ஜெயகாந்தன்

இரவெல்லாம் தூங்காமல் அவள் தனிமையில் உழன்று கொண்டிருந்தபோது, அவன்பால் அவள் மனம் பெண்மைக்கே உரிய ஆதரவோடு குழைந்த போது, அவள் தனது அறைக் கதவைத் திறந்துகொண்டு அவனது மூடிய கதவை வெறித்தவாறு நிற்பாள்.

தானே வலியச் சென்று அவனை அணுகுவதனின்றும் அவளைத் தடுத்தது அவளது சுய கௌரவம் அல்ல; தனது உறவு அந்தப் பெரிய மனிதனைச் சிறுமைப்படுத்திவிடும் என்ற அச்சம்; அதுவே அவளைத் தடுத்தது.

பரஸ்பரம் தனிப்பட்ட கௌரவங்களில் குறுக்கிடாமல் நிரந்தரமாகப் பிரிந்துவிடப்போகும் ஒரு தாம்பத்திய வாழ்க்கையின் கடைசி நாட்களை அவர்கள் இருவரும் எவ்வளவு அழகாக எல்லை வகுத்துக் கொண்டு அந்த எல்லைகளை மீறாமல் வாழ்ந்திருக்கிறார் என்ற உண்மையை ஒரு மூன்றாம் நபர் மாதிரி அவள் எண்ணி எண்ணித் தன்னுள் சிலாகித்துக் கொண்டபோது-இந்த வாழ்க்கை இப்படியே தொடர முடியாமல் போகிறதே என்ற ஏக்கம் சிறுகச் சிறுக தன்னுள் கனப்பதால் இரவெல்லாம் பெருமூச் செறிந்து கொண்டிருந்தாள்.

அனந்தராமனும் ஏறத்தாழ இதே மனநிலையில் இருந்தாலும்கூட இந்த வாழ்க்கை தொடர முடியும் என்று கிஞ்சித்தும் நம்பிக்கைகொண்டிருக்கவில்லை. இருப்பினும் ஒரு அழகான வாழ்க்கையை அநியாயமாகப் பறிகொடுத்து விட்ட இழப்பு உணர்ச்சி திடீர் திடீரென அவனுள்ளே அடிக்கடி ஒரு வெறுமையை விளைவித்து அவனை ஒரு வெறியனைப் போல் விழிக்க வைத்தது!

'இது உண்மைதானா? அவளை நான் நிரந்தரமாகப் பிரிந்துவிடத்தான் போகிறேனா?' என்று தவிக்கும்போது அந்தப் பிரிவு அவன் மனத்துக்குக் கொஞ்சங்கூட இதமாக இல்லை. எனினும் அவள் வாழ்க்கையில் அதன் மூலம் ஒரு நிம்மதி நிலவும் என்று அவன் மனப்பூர்வமாய் நம்பியதால், இத்தனை ஆண்டுகளாக அவளோடு இருந்து அவள் வாழ்க்கையை நரகம் ஆக்கியதற்குத் தண்டனை போல ஏதோ ஒரு நியாயத்திற்குத் தன்னை ஆட்படுத்திக் கொண்டு இந்த சுய பலிக்கு அவன் தயாராகி விட்டான். ஏதோ ஒரு சமயம் அவன் கதவைத் திறந்து பார்த்த பொழுது அவளும்கூடத் தன்னைப் போலவே மூடிய தனியறையில் விழித்துக் கொண்டும் உலாவிக் கொண்டும் இருக்கிறாள் என்று அறிந்த போதும்- அவள் தனது எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறாள் என்று தான் நினைத்தானே தவிர தன் பொருட்டு அவளும்கூடத் தவித்துக் கொண்டிருக்கக் கூடுமென்று கற்பனை செய்து கொள்ளக்கூட அவன் தயாராக இல்லை.

அவனுக்குக் கடைசி நம்பிக்கையாக முளைத்து, முளையிலேயே கருகிப்போனது அந்தக் கடிதச் சம்பவம்.

'என்னை நீ வெறுப்பதாகச் சொல்லுவாயே அது பொய்யல்ல என்றால் அந்தக் கடிதத்தைக் கொடு'- என்று நான் கேட்டபோது ஒரு மனிதாபிமானம் கருதியாவது அந்தக் கடிதத்தை 'நான் தரமாட்டேன்' என்று அவள் சொல்லி இருக்கலாம். அவள் என்னை நேசிக்கவில்லை என்பதற்கும், என்னை வெறுக்கிறாள் என்பதற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது! இதுகூடவா அவளுக்குப் புரியாமல் இருந்திருக்கும்? அவள் நிஜமாகவே என்னை வெறுக்கிறாள். எனவே தான் அவளால் அதைச் செய்ய முடிந்தது.

'இந்தக் கடிதம் வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்கள். எதற்கு அநாவசியப் பேச்சு?'- என்றாவது அவள் சொல்லி இருக்கலாம். ஒன்றுமே சொல்லாமல் அந்தக் கடிதத்தை உடனே என் கையில் தந்துவிட்டு என் பார்வையிலிருந்து அவள் மறைந்த மௌனம் இருக்கிறதே அது எவ்வளவு பொருள் செறிந்தது!' என்று உணர்ந்தபோது அவள் மீது அவன் பொறாமை கொண்டான். அவளைப்போல் தானும் தன் மனத்தை இரும்பாக்கிக்கொள்ள முடியாமல் இவ்விதம் அவளைப் பற்றித் தவித்துக் கொண்டிருப்பதை எண்ணி வெட்கமும் கொண்டான்.

அந்த வீம்பில்தான் அன்று பூராவும் அவளைத் தான் எதிர்ப்பட நேர்ந்தபோதெல்லாம் யாரோ தன் முகத்தை பிடித்துத் திருப்புவது மாதிரி அவன் திரும்பிக் கொண்டான். அவளைப் பற்றிய நினைவு ...லிருந்து அவ்விதமே தன்னை விலக்கிக் கொண்டுவிட்டதாக அவன் கொஞ்சம் கொஞ்சமாக நம்பிக்கை கொள்ள ஆரம்பித்தான்.

அனந்தராமனும் கோகிலாவும் ரயில் புறப்படுவதற்கு முன்பு ரெஸ்டாரண்டுக்குப் போய்க் காபி சாப்பிட்டார்கள். அப்போதும் கூட அவர்கள் நேருக்கு நேர் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளவோ ஒரு வார்த்தை பேசிக் கொள்ளவோ இல்லை. அவர்கள் ஒருவர் மாற்றி ஒருவர் பெருமூச் செறிந்து கொண்டார்கள். அவர்கள் இருவருமே தனித் தனியே தங்களுக்குள் அமிழ்ந்து ஓர் உள் உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள். எனவே அவர்கள் எதைப் பார்த்தாலும் அது மனத்தில் பதியாமல் பற்றற்றுப் பார்த்தார்கள். அவர்களோடு யாராவது பேசினால்கூட அதற்கு இவர்கள் புன்னகையோடு பதில் சொன்னாலும் இரண்டுமே யந்திரீகமாகவே நிகழ்ந்தன.

யாரோ ஒருவர் 'உங்கள் ரயில் புறப்படப் போகிறது' என்று அனந்தராமனிடம் நினைவு படுத்தியபோதுதான் அவன் கைக்கடிகாரத்தைப் பார்த்து மிகவும் சாவதானமாக எழுந்தான். அவள் அவனைப் பின் தொடர்ந்தாள்.

சந்தடியும் ஆரவாரமும் மிகுந்த இது போன்ற கூட்டத்தினிடையே புகுந்து நடக்கும் போது முன்பெல்லாம் அவர்கள் தங்களுக்குள், அன்று வீட்டில் நான்கு சுவர்களுக்குள்ளே எவ்வளவுதான் சச்சரவு கொண்டிருந்தாலும் கூட்டத்தின் நெரிசலினிடையே அவன் கையைத் தன் உடலோடு அணைத்து இறுகப் பற்றியவாறுதானே செல்வாள்? ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அவள் அவன் கையை அவ்விதம் பற்றிக்கொள்ள மறந்திருந்தால் அந்த விநாடி அவன் திரும்பிப் பார்க்கும்போது அந்த முகம்தான் எப்படி மாறிப் போயிருக்கும்! அந்தப் பார்வைதான் என்னென்ன கேள்விகள் கேட்கும்! தன்னை மட்டுமில்லாது தன் பொருட்டு அந்தக் கூட்டத்தையே அவன் வெறுப்பது போல் இருக்கும் அந்தப் பார்வை. ஏதோ தனக்கு உரிமையான ஒரு நாய்க்குட்டியை அழைப்பது போன்று அவன் அவளை நோக்கிக் கையை நீட்டும்போது மனத்தால் அந்த நிமிஷம் அவனை விட்டு வெகு தூரம் விலகி உடலால் மட்டும் அவனோடு அவள் பந்தப்படுவாளே...

இப்போது-ரெஸ்டாரண்டை விட்டு அவள் வெளியே வருவதற்குள் அவன் கும்பலை விலக்கித் தான் மட்டும் தனியே ஓடிக்கொண்டிருக்கையில் அவனைப் பின் தொடர்ந்து கூட்டத்தின் நெரிசலில் புகுந்து புகுந்து, எங்கோ ஓடிக்கொண்டிருக்கும் அவனைப் பிடிப்பதற்காகத் தானும் போய்க் கொண்டிருக்கும்போது-அவள் அந்த அனுபவங்களை எண்ணினாள். ஆனால் அதற்காக வருத்தப்படுவதா சந்தோஷப்படுவதா என்று மட்டும் அவளுக்குப் புரியவில்லை.

அந்த ஏ.ஸீ.கம்பார்ட்மெண்ட் அருகே போய் நின்ற பிறகுதான் அனந்தராமன் அவளைத் திரும்பிப் பார்த்தான். அவளுக்குப் பின்னால் பச்சை விளக்கைத் தலைக்கு மேலே உயர்த்தியவாறு நிற்கும் கார்டைக் கண்டவுடன் ஒரு காலைப் படியில் ஊன்றி ஒரு கையால் கதவின் கைப்பிடியைப் பற்றியவாறு நின்ற அனந்தராமன் நேற்று இரவிலிருந்து தவிர்த்து வந்த அவளது கண்களை இறுதியாகச் சந்திப்பதற்கு இப்போது சித்தமானான்.

'அவளது கண்கள் ஏன் கலங்கி ரத்தமாய்ச் சிவந்து குழம்பி இருக்கின்றன. தனது கண்களைச் சந்திக்க முடியாமல் அவளது பார்வை ஏன் தாழ்ந்து தாழ்ந்து தவிக்கிறது' என்று அவன் பார்வையில் வழியே தன்னை அவன் பார்த்துக் கொண்டபோது கோட்டுப் பாக்கெட்டிலிருந்து பாதி வெளியே தெரிந்த அந்தக் கவரைப் பார்த்தான்.

'ஓ' என்ற முனகலோடு அவன் அவளைப் பார்த்துப் புன்னகை புரிந்தான்.

'ப்ளீஸ்' என்று அந்தக் கடிதத்திற்காக ஒரு பிச்சைக்காரி மாதிரி அவள் தன்னிடம் கையேந்திக் கெஞ்சியபோது அவனுக்கு மனசு என்னவோ செய்தது.

'இதென்ன கடைசிச் சோதனை?' என்றெண்ணி இதிலிருந்தும் தன்னை மீட்டுக் கொள்வதற்காக அவன் உறுதியாய்ச் சொன்னான்: "நோ. அது என்னுடையது" என்று அவன் சொன்னபோதிலும்-இனிமேல் வாழ்க்கையில் என்றுமே சந்திக்க முடியாத அந்த முகத்தை என்றைக்கும் அழியாத சித்திரமாய் நெஞ்சில் பதித்துக்கொள்ள வேண்டுமென்ற தாகத்தோடு அவன் பார்த்துக் கொண்டிருந்தபோது தனது கண்கள் கலங்கியது அவனுக்குத் தெரியவே இல்லை.

அவள் அவனிடம் நெருங்கி வந்து கேட்டாள். அந்தக் கேள்வி சிதைந்து மங்கி உருவிழந்த குரலில் ஒலித்தது:

"...நாம்... எப்போதாவது- மறுபடியும் நாம்..."

-அந்த விசில் ஏன் அவ்வளவு அவசரமாக அலறுகிறது! தன் முதுகில் யாரோ புறமிருந்து தாக்கியது போல் வெடுக்கென்று திரும்பிப் பார்த்தாள் கோகிலா. பச்சை விளக்கை உயர்த்திப் பிடித்திருந்த கை கீழே தாழ்ந்ததும் குலுங்கியது ரயில் மட்டும்தானா?...

அவன் அவளைப் பார்த்தவாறே பின்வாங்குவது போல் ரயிலில் ஏறினான். ரயில் நகரும்பொழுது "ப்ளீஸ்!" என்று கடிதத்துக்காக யாசித்தவண்ணம் சில அடிகள் பின்னாலேயே ஓடி வந்தாள் கோகிலா. விலகி விலகிப் போகும் தன்னை நோக்கி ஓடி வந்துகொண்டிருக்கும் அவளை அப்படியே விட்டு விட்டுத் தான் மட்டும் நிரந்தரமாக விலகிப் போவதற்கு அவனது ஆண்மை உடன்படவில்லை. ஒன்று அவன் இறங்க வேண்டும்; அல்லது அவளுக்குக் கைகொடுத்து அவளை இழுத்து அணைத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் அவளோ அந்தச் சிரமத்திற்கெல்லாம் இடம் வைக்காமல் நகர்ந்து கொண்டிருக்கும் ரயிலைப் பிடித்துத் தாவி ஏறினாள்... "ப்ளீஸ், ப்ளீஸ்!"

தன்னை மீறிய பதைப்புடன் கோகிலாவின் இடையில் கை கொடுத்து அவளைத் தூக்கி அணைத்துக் கொண்டான் அனந்தராமன்.

ரயில் போயேவிட்டது.

பிளாட்பாரத்துக்கு வெளியே, 'அவுட்டரின்' அருகே எங்கோ உயரத்திலிருந்து பொழிந்து கொண்டிருக்கும் மின்சார விளக்கின் வெளிச்சத்தில் சுக்கல் சுக்கலாகக் கிழிக்கப்பட்ட ஒரு கடிதத்தை அவனது கரங்கள் காற்றில் பறக்க விட்டன.

அவ்வளவு பாதுகாப்பாக, அவ்வளவு பிடிவாதமாக அவளிடம் தர மறுத்த அந்தக் கடிதத்தை அவனே இப்படிச் சுக்கல் சுக்கலாகக் கிழித்து எறியும்படி...

ஓ! கோகிலா என்ன செய்து விட்டாள்?

(கோகிலா.... முற்றும்)




அடுத்த வாரம் முதல்

புதிய தொடர்

அமோக ஆரம்பம்

? ? ? ?



ஒருவாரம் பொறுத்திருங்கள்!

—தவறவிடாதீர்கள்—


# அரங்கம் அந்தரங்கம்

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.**

## 25

இதில் எல்லாம் பழக்கமில்லாத கமலா அழுதாள். பிறகு தன் குழந்தையின் எதிர்காலம் பத்திரமாகி விட்டது என்று தேறினாள்.

இருந்த ஒரே பழைய சேலையை உடுத்திக்கொண்டு கற்பகத்தின் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

கற்பகம் அவளுக்குப் பட்டுச் சேலையைக் கொடுத்து நகைகளால் அவளை அலங்கரித்து, உபதேசம் நடத்தி தைரியம் கொடுத்து, பக்குவப்படுத்தினாள்.

திரைமறைவில் நின்று பேசியே பழக்கப்பட்ட கமலா, 'தலைக்கு மேலே வெள்ளம், இதில் சாண் என்ன முழம் என்ன' என்ற முடிவுக்கு வந்தாள்.

ஒன்றுமே இல்லாத சூன்ய நிலையில் இதுவும் ஒரு வாழ்க்கை என்று முடிவு கட்டினாள்.

...பெண்மையைப் பற்றி சீவக சிந்தாமணி சொல்வது போல் 'வெண்ணெய்க் குன்று உருகிய நிலைக்கு' கமலா ஆளானாள்.

⁂

கமலநாதன் அங்கே வரும்போது இரவு மணி பதினொன்று ஆகிவிட்டது. கதவைத் திறந்தது கற்பகம்; பக்கத்தில் நின்று வரவேற்றது கமலா.

வரும்போதே அவர் சற்று அதிகமான போதையில் தான் காணப்பட்டார். அதுவே ஒரு வரப்பிரசாதம் போல் கற்பகத்துக்குத் தோன்றியது.

தானும் அலங்காரமாக இருக்க அவள் தவறவில்லை.

கமலநாதனைத் தனது 'குளிர்ச்சி மிக்க' படுக்கை அறையில் கொண்டுவந்து உட்கார வைத்தபோதுதான் அவள் கவனித்தாள். அவர் இடுப்பிலே ஒரு பாட்டிலோடு வந்திருப்பதை!

ஏற்கனவே ராஜசேகரனைப் பற்றிய அனுபவத்தால், கையோடு அவர் அதைக் கொண்டு வந்திருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளக் கற்பகத்துக்கு வெகுநேரம் பிடிக்கவில்லை.

சாப்பிடுதற்கு ஏதாவது தயார் செய்து கொடுத்தாலும் அவர் சாப்பிடமாட்டார் என்பதும் விளங்கிற்று.

அதனால் டின்னில் அடைக்கப்பட்ட சில மாமிச வகைகளை அப்படியே கொண்டுவந்து, அவரையே உடைத்துக் கொள்ளச் சொன்னாள்.

ஏதோ எடுப்பதுபோல வெளியே சென்ற அவள் பயந்துகொண்டே நின்ற கமலாவுக்கு ஜாடை காட்டி விட்டுப் போனாள்.

கமலா நடுக்கத்தோடு கமலநாதனுக்குப் பரிமாற ஆரம்பித்தாள்.

சிவந்திருந்த கண்களோடு கமலநாதன் அவளையே கூர்ந்து பார்த்தார். 'கற்பகத்தை விட இவள் அழகானவள்; வயதும் குறைந்தவள்' என்று அவருக்குத் தோன்றிற்று.

"உன் பெயரென்ன...?"

"கமலா!"

"பேஷ்! கமலா- கமலநாதன்! வா, இப்படி உட்கார்."

கமலா பயந்துகொண்டே நின்றாள்.

கமலநாதன் எழுந்து சென்று அவள் கையைப் பிடித்தார். தன் பக்கத்தில் உட்கார வைத்தார்.

"யார் நீ...?"

"அம்மாவுக்குச் சொந்தம்!"

"இன்றைக்குத்தான் வந்தாயா...?"

"உம்..."

இது கற்பகம் விரும்பிச் செய்த ஏற்பாடு என்பது அந்த போதையிலும் கமலநாதனுக்குப் புரிந்தது.

கற்பகம் எப்போதும் கையிருப்புச் சரக்கு. இது இன்றைய 'ஸ்பெஷல்' என்று கருதிய கமலநாதன், மெதுவாக எழுந்து அறைக் கதவைத் தாழிட்டார்.

'உள்ளே இருந்து என்ன சத்தம் வருமோ' என்று பயந்துகொண்டே வெளியிலே சுவரில் சாய்ந்துகொண்டு நின்ற கற்பகம், கதவைத் தாழிடும் சத்தம் கேட்டவுடனேயே விடுதலை பெறும் உணர்ச்சியை அடைந்தாள். ஒரு பெருமூச்சு அவளது மார்பகத்து முந்தானையைத் தாலாட்டியது.

'இனி இந்தக் கதவு திறக்கப்பட வெகுநேரம் ஆகும்.' என்று கருதிய கற்பகம், தன் அறைக்குச் செல்வதற்காக மெதுவாக நடந்தாள்.

அப்போது காலிங் பெல் சத்தம் கேட்டது. 'இந்த நேரத்தில் யார்?' கற்பகம் இறங்கிப்போய் கதவைத் திறந்தாள்.

அங்கே வியர்க்க விருவிருக்க நின்றிருந்தார் நடிகர் சந்திரசூரியன்.

கற்பகத்துக்கு 'திக்' கென்றது.

அதைப் பார்த்து சந்திரசூரியன், "இப்போதுதான் கட்சி வேலைகளெல்லாம் முடிந்தன. ஏதோ உன்னைப் பார்க்க வேண்டும்போல் தோன்றிற்று; அதற்காகவே வந்தேன்!" என்று சொன்னபடி உள்ளே நுழைந்தார்.

கற்பகத்துக்கு சந்திரசூரியனிடம் ஒரு பற்றுதல் உண்டு. ஆனால் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை அவராலும் உருவாகும் என்று அவள் கருதியதில்லை.

ஆசை இருந்தது; அச்சம் அதிகமாக இருந்தது.



**கவியரசு கண்ணதாசன்**

கமலநாதனை இவர் பார்த்துவிடக் கூடாதே என்ற எண்ணமும் இருந்தது.

தன் தனி அறையில் அவரைக் கொண்டு போய் உட்கார வைத்தாள்.

சந்திரசூரியனுக்கு மதுப்பழக்கம் இல்லை. மணியோ இரண்டு. எதையும் சாப்பிடுகிற நேரமும் இல்லை.

அவருக்கு எதிரே இருந்த சோபாவில் உட்கார்ந்தபடி, "என்ன ஒரு நாளும் இல்லாத திருநாளாக இந்த நேரத்தில்...?" என்று இழுத்தாள் கற்பகம்.

"எந்த நேரத்தில் யாருக்கு என்ன தோன்றுமென்று யாருக்கு என்ன தெரியும்? பேறிஞர் தாந்தே சொன்னது போல், நேரத்தை மனிதன் முடிவு செய்ய முடியாதே!" என்றார் சந்திரசூரியன்.

பிறகு அவரது தத்துவங்கள் ஆரம்பமாகின.

தனது பராக்கிரமச் செயல்கள் பற்றி அவர் விவரித்தார். இடை இடையே கற்பகத்தின் குடும்ப நிலவரம் பற்றியும் கேட்டுக் கொண்டார். தன்னை விரும்பும் பெண்கள் செய்யும் தொல்லையைப் பற்றியும் விவரித்தார்.

ஏதோ கற்பகத்திற்கு அவரோடு பேசுவதில் ஒரு கசப்புணர்ச்சி தோன்றவில்லை.

அவளும்கூட தன்வசம் இழந்து விடுவாள் போன்ற நிலையும் இருந்தது.

(அந்தரங்கம் வரும்)

இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப்பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

—கண்ணதாசன்—



படிப்பகம்

www.padippakam.com

# "துள்ளாத மனமும் துள்ளும்"

மணி காலை 10.30 தாண்டி விட்டது. சமையல் அறையிலிருந்து மீனா வேகமாக ஓடி வந்து தொலைபேசி ரீசிவரை எடுத்து இலக்கத்தைச் சுழற்றினாள். மறுமுனையிலிருந்து, "ஹலோ யார் பேசுவது?" என்ற கேள்வியுடன் பேச்சு ஆரம்பித்ததும் அவளுக்குள் சந்தோசம் அப்பிக்கொண்டது.

"நான்தான் மீனா பேசுகிறேன்!"

"ஆ மீனாவா? எப்படி சுகம்?"

"நல்ல சுகம். நீங்கள் எப்படி?"

"நானும் நல்ல சுகம். இப்போது என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள்?"

"ஹலோ நானா? நான் இப்போது பகல் சமையல் வேலையில் இருக்கின்றேன்."

"இன்றைக்கு பகலைக்கு என்ன சமையல்?"



சிலாபம்-கே.பி.புஷ்பராஜா

"வழமை போலத்தான்"

"வழமை போல என்றால்..?

....... மீனா பலமாக சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறீர்கள்? வெட்கப்படாமல் சொல்லுங்கோ மீனா?"

"இன்று வெள்ளிக்கிழமை அல்லவா? கோவா கீரைசுண்டல், கத்திரிக்காய் வறுவல், முருங்கைக்காய் சாம்பார்!"

"கோபிக்காதீங்கோ மீனா! முருங்கைக்காய் என்றால் எனக்கு நல்ல விருப்பம்."

"அப்படியா? ஒரு நாளைக்கு வீட்டுக்கு வாங்களேன்."

"அதுசரி மீனா. உங்கள் கணவர் எங்கே?"

"இன்றைக்கு அவர் வேலைக்குப் போகவில்லை. மார்கட் போயிருக்கிறார்!"

இவ்வளவு நேரமும் மீனா தொலைபேசியில் பேசியதை அவளின் கணவன் ரவி வீட்டு வாசலில் நின்று இரகசியமாக கேட்டுக் கொண்டு இருந்தான். 'என்ன கொழுப்பு இவளுக்கு நான் வெளியே போயிருக்கும் போது எவனோ ஒருவனோட தொலைபேசியில்- அதுவும் சாப்பாட்டுக்கும் அல்லவா வரச் சொல்லுகிறாள்? இவனை அப்படியே கத்தியால்.. வெட்டி...' ரவியின் மனதில் ஆவேசம் பாலாய்ப் பொங்கியது.

ரவிக்கும் மீனாவுக்கும் திருமணம் முடிந்து ஆறுமாதம்தான் ஆகிறது. அந்த திருமணம் கூட ஒருவிபத்து என்றுதான்கூற வேண்டும்.

அன்று மெதுவான மழை தூறிக் கொண்டு இருந்தது. ரவி பஸ் நிலையத்தில் கொழும்பு பஸ் வண்டியை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டு இருந்தான். அப்போதுதான் மீனா அங்கு வந்துசேர்ந்தாள்.

எத்தனையோ பெண்களுக்கு விசிலடிக்கும் ரவி மீனாவைக் கண்டதும் தலையை குனிந்துக் கொண்டான். அவனே தன் நிலையைக் கண்டு ஆச்சரியப்பட்டான்.

"கொழும்பு பஸ் போய்விட்டதா?" மின்னல் வெட்டுவது போல வெள்ளமாய் சிரித்துக் கொண்டே மீனா ரவியிடம் கேட்டாள்.

தலை நிமிர்ந்த ரவி அவளின் அழகில் சொக்கிப்போய் "இன்னும் போகவில்லை!" என பயத்துடன் மெதுவாகப் பதிலளித்தான்.

அன்று தொடங்கிய பஸ் நிலைய சந்திப்பு இறுதியில் திருமணத்தில் போய் முடிந்து விட்டது.

மீனாவை அடைவதற்காக கல்யாண வயதில் வீட்டிற்குள் வண்ண வண்ணக் கனவுகளோடு தங்கை, மாதா மாதம் பென்சன் திகதியை எதிர்பார்த்து காலமெல்லாம் காத்திருக்கும் அப்பா, மருந்தோடுதான் வாழமுடியும் என்ற நிலையில் அம்மா, ஊரைச் சுற்றி வரும் தம்பி, இவர்கள் அனைவருமே ரவியை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கையில் மீனாவுக்காக எல்லோரையும் ஓரம் கட்டிவிட்டு தனிக்குடித்தனம் புகுந்தவன்தான் ரவி.

இந்நிலையில் ரவி வீட்டில் இல்லாத நேரம் எவரோ தொலைபேசியில் மீனாவுடன் பேசுவதைக் கேட்டு ஆத்திரம் அடைவதில் அவனது பக்கம் (அ)நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

யோசித்து முடிவெடுக்க அவனுக்கு நேரம் போதாது இருந்தது. பாவம்.. ரவி. இப்போது அவனது நெற்றியில் வியர்வை விதைகள் முளைக்கத் தொடங்கின.

'இவளை என்ன செய்வது? இவள்தானே முதன் முதலில் என்னைப் பார்த்து "ஐ லவ் யூ!" என்று சொன்னவள்- ஏமாற்றுக்காரி. என் வாழ்க்கையே போச்சு. இந்த தகவல் கசிந்தால் இனி எப்படி அம்மா, அப்பா முகத்தில் விழிப்பேன். ச்சே...' இப்போது ரவியின் மனம் துள்ளியது.

ரவி மீண்டும் தொலைபேசி பேச்சுக்கு செவி சாய்த்தான். "மார்க்கட்டுக்கா? இன்றும் முருங்கைக்காய்தான் வாங்கி வருவார் என்ன மீனா அப்படித்தானே?"

மீனா சிரித்துக் கொண்டே "அவரின் விருப்பம் தானே!"

"சரி உங்களது பொழுது போக்கு?"

"என் கணவரைச் சீண்டி விட்டு வேடிக்கைப் பார்ப்பதுதான்."

"சரி மீனா. உங்களுக்கு விருப்பமான பாட்டு என்ன?"

"துள்ளாத மனமும் துள்ளும் படத்தில் இன்னிசை பாடிவரும் இளங் காற்றுக்கு உருவமில்லை!"

"இதோ கேளுங்கள். நன்றி!"


தொலைபேசியின் இணைப்பை கீழே வைத்தாள் மீனா.

வீட்டிற்குள் வேகமாக நுழைந்தான் ரவி. "ஓ மீனா இவ்வளவு நேரமும் வானொலியின் தொலை பேசி நிகழ்ச்சியில்தான் பேசிக் கொண்டு இருந்தாயோ! நான் வேறு விதமாக சந்தேகப்பட்டுவிட்டேன்."

"சும்மா போங்க உங்களைப் போலத்தான் நானும் என்று எண்ணி விட்டீர்கள்." என்று மீனா சட்டென பதில் கூறியதும், ரவி இந்த ஆறுமாத காலத்திற்குள் மீனாமீது இப்படிப்பட்ட முடிவுகளை எத்தனையோ தடவை எடுத்துத் தோற்றுப் போய் மீனா முன் இன்று வாயடைத்து நின்றபோது அவனையறியாமலேயே அழுதுவிட்டான்.

'உங்களைப் போலத்தான் நானும் என்று எண்ணி விடாதீர்கள்' என்ற மீனாவின் சொற்களுக்கு இந்த முறை அவனால் எதிர்த்துப் பதில் சொல்லத்தான் முடியவில்லை.

# கடைசி ஆசை



நெடுந்தீவு குகன்-கனடா

சுமார் எட்டு வருடங்களுக்குப்பின் தனது சொந்த மண்ணில் கால்வைக்கிற சந்தோசத்தில் பஸ்ஸிலிருந்து இறங்குகிறார் சுந்தையா மாஸ்ரர். எங்கும் இராணுவத்தினரின் நடமாட்டம், முட்கம்பிவேலிகள், பாதுகாப்பரண்கள், இடிந்துபோன கட்டடங்கள் என அடையாளமே மாறிவிட்டிருந்த அந்தப் பகுதியின் சூழ்நிலை அவருக்குள் ஒரு பயத்தை ஏற்படுத்த அப்படியே நின்று சுற்றும் முற்றும் பார்க்கிறார்.

நெஞ்சிலே இனம் புரியாத வேதனை. "என்ன... ஐயா... நிண்டு பார்க்கிறீங்க...? அங்க அந்த ஆமிக்காறன் உங்களப்பாத்து ஏதோ சொல்லுறான். கெதியா போங்கோ...!" பின்னாலிருந்து இறங்கிய மகள் நந்தினி அவசரப்படுத்த பயணப் பையை கையிலெடுத்துக் கொண்டு நடக்க ஆரம்பிக்கிறார்.

"என்ன.. பிள்ள இதில இறக்கிவிட்டுட்டான். இனி நடந்துதான் போகவேணுமே...?.." எட்டு வருட இடைவெளியில் ஏற்பட்டிருந்த மாற்றங்களை அறியாத மாஸ்ரர் சந்தேகத்தோடு கேட்கிறார். "ஓமய்யா... ஜெற்றி வரை நடந்துதான் போக வேணுமாம்.. பாத்தீங்களே ஐயா... இந்த எட்டு வருசத்துக்குள்ள எவ்வளவெல்லாம் நடந்திட்டுது எண்டு..." அவரிடமிருந்து ஒரு பொதியை கையில் வாங்கியபடி நந்தினி சொல்கிறாள். 'ஓம் பிள்ள... எவ்வளவெல்லாம் நடந்து முடிஞ்சுது...' தனக்குள்ளே சொல்லிக்கொண்டவர் அந்த வேதனையான நாளை நினைத்துப்பார்க்கிறார்.

இராணுவம் படிப்படியாக முன்னேறி யாழ்குடாநாட்டை நோக்கி நகர்ந்துகொண்டிருந்த நேரம். இராணுவத்தின் செல்வீச்சுகளுக்கும், விமானத்தாக்குதல்களுக்கும் பயந்த மக்கள் தமிழ்நாட்டை நோக்கிப் பயணிக்க சுந்தையா மாஸ்ரர் எவ்வளவு மறுத்தும் மகனின்- மருமகளின் பிடிவாதத்தால் அவர்களோடு கடைசி மகள் நந்தினியையும் அழைத்துக் கொண்டு தமிழ்நாட்டுக்குப் பயணமானார்.

சொந்த மண்ணில் சுதந்திரமாய் வாழ வழியின்றி அகதியாய் புகலிடம் தேடி ஓடியவர்களை இயற்கைகூட எதிரியாய் நினைத்து விட்டது. சீரற்ற காலநிலையாலும், கடலின் கொந்தளிப்பாலும் படகு நடுக்கடலில் மூழ்கியதில் பாவம் பலர் பரிதாபமாய் பலியாகிப் போனார்கள்.

இந்தியமீனவர்களின் உதவியால் மாஸ்ரரும், மகள் நந்தினியும் வேறு சிலரும் மீட்கப்பட்டு கரைசேர்க்கப்பட்டனர். ஆனாலும் மூத்த மகன், மருமகள், குழந்தைகளை எங்கு தேடியும் அவர்களின் உடல்கூடக் கிடைக்கவில்லை.'

சுந்தையா மாஸ்ரருக்கு, தன் கண் முன்னே மகன், மருமகள், பிள்ளைகளை இழந்த சோகத்தோடு வாழ்க்கையில் எதுவுமே இல்லை என்றாகிவிட்ட நிலையில் ஓர் அகதிமுகாமில் கடைசிமகளுடன் நாட்களைக் கடத்துகிறார். சொந்தமண்ணை இழந்து, உறவுகளைப் பிரிந்து எங்கோ ஒருமூலையில் இந்த அகதிவாழ்க்கை அவரை ஒரு நடைப் பிணமாக்கிவிட்டிருந்தது.

அவருக்கோ கடைசிக்காலத்திலாவது தான்பிறந்த மண்ணில் வாழ்ந்து கடைசி மூச்சை அந்தமண்ணிலே விடவேணும் என்ற ஒரே ஆசை. நாடுதிரும்ப விரும்பி கப்பலுக்கும் பதிந்தார். இன்றோ, நாளையோ கப்பல் வரும் என்று காத்திருந்ததில் கிட்டத்தட்ட எட்டு வருடங்கள் காணாமல்போய்விட்டன. கடைசியில் தமிழக அரசு கண்ணைத்திறந்தது. மாஸ்ரரோடு பலரும் தமிழகத்திருந்து தாயகம் நோக்கிப் பயணமானார்கள்.

"என்ன... ஐயா.. யோசினை... லோஞ்சி வெளிக்கிடப்போகுதாம். எட்டி நடவுங்கோ...!" மகள் நந்தினியின் குரல் கேட்டு நிமிர்ந்தார் மாஸ்ரர். வேகமாய் வீசிய சோழகக்காற்று அவருக்குச் சுகமாக இருந்தது.

கரையிலே படகு புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. அங்கே அவருக்கு பரிச்சயமான பலர் அவரை அடையாளம் கண்டு ஆவலாய் அவரிடம் வருகின்றார்கள். பலவருடங்களுக்குப் பின் தனது மண்ணில் கால் வைக்கிற சந்தோசம் அவருக்குள் ஒரு புதிய உணர்வை ஏற்படுத்தியது. தன் உறவுகளோடு தனது சோகங்களைப் பகிர்ந்து கொண்டதில் ஓர் ஆறுதல்.

படகு தன் கட்டுக்களை அவிழ்த்துக் கொண்டு கரையிலிருந்து புறப்பட, மாஸ்ரரின் மனம் சந்தோசத்தில் துள்ளிக்குதிக்கிறது. கரையையே வெறித்துப்பார்த்த வண்ணம் ஒருமூலையில்போய் இருந்து கொள்கிறார். தூரத்தில் கரை தெரிய ஆரம்பிக்கிறது. எழுந்து நின்று கைகளை நெற்றியில் வைத்து தூரத்தில் மங்கலாய் தெரியும் தனது மண்ணை ஆசையோடு பார்த்துவிட்டு மீண்டும் அந்த மூலையில்போய் இருந்து கொள்கிறார்.

"என்ன... மாஸ்ரர்... என்ன செய்யுது...?" என்றபடி அவரோடு படிப்பித்த பொன்னம்பலம் மாஸ்ரர் அவரை நோக்கி வருகிறார்.

"ஒண்டுமில்லை... அண்ணை.. லேசா தலைக்கிள்ள சுத்துது... சத்தியும் வாறமாதிரி கிடக்குது.." தலையைப்பிடித்தபடி மாஸ்ரர் சொல்கிறார். "பிள்ளை.. நந்தினி ஐயாவ கொஞ்ச நேரம் என்ன கொண்டு போய் படுக்க விடு பிள்ள!" என்று நந்தினியை அழைக்கிறார் பொன்னம்பலம் மாஸ்ரர்.

"என்ன ஐயா.. என்ன செய்யுது...?." என்றபடி நந்தினி அங்குவர, "அது ஒண்டுமில்லை பிள்ள... மாஸ்ரர் கனகாலம் கடல் பிரயாணம் செய்ய இல்லை.. அதுதான்.. போங்க மாஸ்ரர்.. போய் கொஞ்ச நேரம் படுங்க சரியாப்போயிடும்..." என்றபடி அவரை எழுப்பி அனுப்புகிறார். நந்தினி அவரை அழைத்துக்கொண்டு உள்ளே சென்று படுக்க விடுகிறாள்.

படகு கரையைத் தொட்டுவிட்டதற்கு அறிகுறியாக உள்ளே இருந்தவர்கள் தங்கள் இருக்கைகளை விட்டு எழும்ப ஆரம்பிக்கிறார்கள். நந்தினி சந்தோசமாக உள்ளே ஓடி வந்தவள் "ஐயா.. கரை வந்திட்டுது.. எழும்புங்கோ...!" என்று அவரை தட்டி எழுப்புகிறாள். அவரிடம் எந்த சலனமும் இல்லை.

"ஐயா... என்ன.. ஐயா இது.. எழும்புங்கோவன் கரை வந்திட்டுது...!" மீண்டும் கொஞ்சம் சத்தமாய் எழுப்புகிறாள்.

ஆனால் அவரோ எதையும் காதில் வாங்காமல் தனது மண்ணைக் கண்ட சந்தோசத்தில் தனது கடைசிப்பயணத்தை தொடர்ந்து கொண்டிருந்தார்.

# ஊர்வாய்

அந்தப் பாடசாலையின் அமைவிடம் நகரத்திலிருந்து சுமார் ஒன்றரைக் கிலோமீட்டர் தூரத்திலிருந்தது.

சூழவுள்ள குடியேற்றவாசிகளின் பிள்ளைகளே அங்கு பெருமளவில் கல்வி கற்று வருகிறார்கள்.

தூர இடங்களிலிருந்தே நகரத்துப் பாடசாலைகளை நோக்கிப் படையெடுக்கும் மாணவர்கள் மலிந்த இந்தக் காலத்தில், நகரத்துக்கு மிக அணித்தாகவே உள்ள அந்த ஏழை எளிய மக்களுக்கு, நகரப் பாடசாலைகளின் அதீத செலவுகளுக்கு ஈடுகொடுக்க வழியில்லை என்பதால் தமக்குப் பக்கத்திலிருக்கும் அந்தப் பாடசாலையே அவர்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக அமைந்திருந்தது.

நாட்டு மக்கள் அனைவருக்கும் இலவசக் கல்வி என்று அரசாங்கம் என்னதான் முனைப்போடு செயற்பட்டாலும் 'ரியூஷன்' 'ஃபாஷனா'கவே வந்துவிட்ட நகரத்துப் பிள்ளைகளோடு போட்டிபோட்டுப் படிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு.

கட்டடங்கள் இருந்தபோதும், நாற்பதுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இருந்த போதும், பரோபகாரிகளின் நன்கொடை இத்யாதி நலன்புரி வசதிகளும், பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீடுகளும் என்னவோ கல்லூரியின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்யப்போதவில்லை என்றே கூறவேண்டும்.

பாடசாலை, வளவில் கிணறு ஒன்றிருந்த போதும் நீர்த்தாங்கியோ, குழாய் வசதிகளோ இல்லாத சிரமம் அவர்களுக்கு மிகுதியாகவே இருந்தது.

சிறியதொரு இடைவேளையில் ஒரே கிணற்றில் நீர் மொண்டு எல்லோரும் அருந்த முடியாத அவலம்.

பிள்ளைகள் வீதியைக் கடந்து முன்னாலுள்ள வீடுகளில் நீர் பருகச் செல்ல வேண்டிய தேவை தவிர்க்க முடியாதிருந்தது. இதனால் இடையிடையே சிறுபிள்ளைகள் சைக்கிளில் மோதிவிழும் அபாயமும் இருக்கின்ற சந்தர்ப்பங்கள் அதிகரித்துக் கொண்டே போயின.

இதையெல்லாம் அவதானித்துக் கொண்டிருந்த சிவகாமியம்மாவுக்கு, இதற்கொரு பரிகாரம் காணவேண்டுமென்ற அவா நெஞ்சிலெழுந்து நெடுநாள் மனதை அரித்தது; ரம்பமாய் அறுத்தது.

மூத்தவன் கனடாவிலிருந்து வரட்டுக்கும். சொல்லி இதுக்கொரு முடிவு காண வேண்டுமென்று மனதைத் தேற்றிக்கொண்டாள்.



கண. மகேஸ்வரன்

ஒவ்வொரு மனிதர் சிந்தனையிலும் பரோபகார சிந்தை உதிக்கின்றதா என்ன?

***

சிவகாமி அம்மையாரின் உபயத்தால் பாடசாலை வளவுக்குள் ஒரு குடிநீர்க் குழாய் புதிதாய் முளைத்தது. அதன் அடிவேர் தெருநீளம் நீண்டு, வீதியைக் குறுக்கறுத்து, சிவகாமியம்மாவின் கிணற்றடித் தாங்கியில் நின்றது.

"பிள்ளைகளே! இன்றைக்கு ஒரு நன்னாள். தாகத்தால் வருந்தும் உங்களுக்கு தண்ணீர் தானம் செய்திருக்கின்றார் முன் வீட்டு முதாட்டி. அவருக்கு நன்றி செலுத்த வேண்டியது, பிள்ளைகளாகிய உங்கள் ஒவ்வொருவர் கடமை மட்டுமல்ல, இங்குள்ள ஆசிரியர்களாகிய நாமும் அவருக்கு வெகுவாகக் கடமைப்பட்டுள்ளோம்..."

'அசெம்பிளி'யில் அதிபர் வார்த்தையை முடிக்கவில்லை, கரகோஷம் எழுந்து வானைப் பிளந்து, சிவகாமியம்மாவின் காதுகளையும் அதிர வைத்தது.

"..பிள்ளைகளே! இந்த நீர்க்குழாயை நீங்கள் நல்லபடி பாவிக்கவேண்டும். இது எமக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம். எனவே இதனைப் பேணிப்பாதுகாப்பது ஒவ்வொருவரதும் கடமையாகும். மாணவர்களை வழி நடத்தவேண்டிய பொறுப்பை ஆசிரியர்களும் ஏற்று ஒத்தாசை புரிய வேண்டும்..."

மீண்டும் கரவொலி எழுந்து கரைந்தது.

சில வாரங்கள் குதூகலமாக ஓடி மறைந்தன.

வீட்டிலிருந்து குடிநீரோடு வருபவர்கள் சிலர், அந்தப் பழக்கத்தை அதற்குள் மறந்துபோயினர்.

மாணவர்களில் பலருக்கு உபதேசம் காதில் ஏறவில்லைப் போலும்.

'பைப்'பைத் திறந்தது திறந்து போட்டபடியே 'பெல்' அடித்ததும் வகுப்புக்கு ஓடுவதிலேயே குறியாயிருந்தனர். ஆசிரியர்களும் சொல்லிச் சொல்லியே அலுத்துப் போன தாய் உணரத் தலைப்பட்ட சில நாட்களில் அந்த அநர்த்தம் நேர்ந்தது.

பார்க்கப் பார்க்க பரோபகாரி சிவகாமியம்மையார் சிந்தை கலங்கிப்போனார். நீர்த்தாங்கி என்னவோ வெகுவேகமாகவே நீரை இழக்கத் தொடங்கியது, ஒரு வயிற்றோட்டக்காரனைப் போல். 'லைற் பில்' வேறு உச்சத்துக்கு ஏறிக்கொண்டு போனது. அதைப் பற்றியெல்லாம் அம்மையார் கவலைப்பட்டாரில்லை. பாவனைக்கு எவ்வளவு நீர் செலவானாலும், அதற்கான 'பில்'லைச் 'செற்றில்' பண்ண அவர் தயாராகவேயிருந்தார்.

ஆனால் வீணே விரயமாகும் நீரைப் பார்த்தபோது அந்த அன்பு மனம் ஒருகால் அதிர்ந்தது.

சில நாட்களாவது இவர்களுக்கு ஒரு பாடம் படிப்பிடிக்க வேண்டுமென்று அவருக்குத் தோன்றியதில் வியப்பில்லையே.

அந்தக் குழாய்க்கு நீர் பரவும் வழியிலுள்ள ஆளியைத் திருகி மூடிவிடுவதைத் தவிர அவருக்கு வேறு வழியிருக்கவில்லை.

மூத்த மகன் அன்று சொன்னது தீர்க்க தரிசனம் என அவள் உணரத் தலைப்பட்டாள்.

"அம்மா, உனக்கு வேறை வேலையில்லையே..? சரி, சரி, ஏதோ நம்மட பிள்ளையள் தானே... செய்யிறதில பிழையில்ல. ஆனால் ஒரு நேரத்தில ஏன் போட்டோமெண்டு கவலைப்படுவாய். அதுக்குத்தான் சொல்லிறன்... சும்மா ஒரு லைனை நீட்டிவிட்டால் போதாது. ஒரு நேரத்தில பூட்டத் தக்கதாயும் ஒரு வேலை செய்யவேணும்!" என்றான்.

"சீ, அப்பிடிச் செய்யக்கூடாது.... அது வடிவில்லைத் தம்பி!" என்று எவ்வளவோ மறுத்துப் பார்த்தாள்.

"நீ சும்மா இரம்மா... ஒரு ஆறுமாதம் தாக்குப் பிடிக்கிறியோ எண்டு நானும் பார்க்கத்தானே போறன்... கடிதம் எழுதயிக்க இதையும் மறந்திடாமல் எழுது...!" என்று, அவள் எண்ணத்துக்கு ஆப்பு வைத்து, அவன்தான் அந்தத் திருகாளியை இடையில் பொருத்தி விட்டான்.

இன்றைக்குமூன்று மாதங்கள்கூட முழுதாக முடியவில்லை... அதைத் தற்காலிகமாகவேணும் செயற்படுத்த வேண்டுமென்று அவளுக்குப்பட்டது.

அதைச் செயற்படுத்தியபோதுதான் வந்தது வினை.

"...சீ...என்ன சனங்கள்? உதுகளும் ஒரு மனிசரே... மூதேவியள் முகத்தில் முழிச்சாலே பாவம்...!" என்று முகத்துக்கு நேராகவே சொல்லம்புகள் பாய்ந்து தாக்கியபோது அவள் மென்னிதயத்தால் பொறுக்க முடியவில்லை.

"இவ்வளவு கேட்டபின் பைப்பைத் திறந்து விடுகிறதும் ஒன்றுதான்... மூடியே விடுவதும் ஒன்றுதான்" என்று அவள் உள்மனம் அவ்ளை வெகுவாக எச்சரித்தது.

தற்காலிகத் தடையை நிரந்தரமாகச் செயற்படுத்த அவள் எடுத்த முடிவு, பாவம் நீண்டு வேரோடிப் போயிருந்த அந்தப் பாடசாலை வளவில் புதிதாக முளைத்த குழாய் மரம் நீரின்றிச் சீந்துவாரற்று வாடிக் கிடந்தது.

www.padippakam.com



'மதுக் கோப்பையில்
சொர்க்கம் இருக்கிறது!'
என்றார்கள் கூட இருந்தோர்!

மன்னன்
மதுக் கடலில் நீந்தினான்!

மங்கைக்குள்
மர்மங்கள் இருக்கின்றன!
என்றனர் சுற்றி இருந்தோர்.

மன்னன்
மங்கையரில் மொய்த்தான்!

நாடு பிடிப்பது
பீடு தரும் பெருமை
என்றனர் கூடஇருந்தோர்.

நாடுகள் பலமீது பாய்ந்து
சுடு காடாக்கினான்!

கொள்ளையடித்து வந்து
கஜானாவை நிரப்பினான்!

கூட இருந்த கூட்டம்
கொக்கரித்தது!

முன்னால் குந்திமிருந்து
முகஸ்துதி புரிந்தது!

பிற்பாட்டு இசை
மன்னனுக்கும் பிடித்தது!

மங்கைகளை கொண்டுவந்து
மன்னனுக்கு கொடுத்தனர்!

கனிகளில் மட்டுமா
பல ரகங்கள்?

மலர்களில் மட்டுமா
பல நிறங்கள்?

மாங்கனிகளில் மட்டுமா
பல சுவைகள்?

மங்கையரில் உண்டு
பல சுவைகள்!

மங்கையரில் உண்டு
பல கனிகள்!

ஆசை அம்புகள்
மனதில் தைக்க
மன்னன் வீழ்ந்தான்
காமக் களத்தில்!

மேதினியை ஆள்பவன்
மேனிகளில் ஆடினான்!

புவியாளும் மன்னன்
புருவங்களை வருடினான்!

வில் என்றான் வேல் என்றான்
வாள் என்றான் தோள் தழுவினான்!

முன்னிரு அழகும்
முரசங்கள் என்றான்!

பின்னிரு அழகும்
கலசங்கள் என்றான்!

கண்ணிரு அழகும்
அம்புகள் என்றான்!

காலிரு அழகும்
வாழைகள் என்றான்!

## ஒரு மணித்துளியானாலும்

கைமிரு அழகும்
மூங்கில்கள் என்றான்!

கழுத்திலொரு அழகு
சங்குதான் என்றான்

இதழிரு அழகும்
தேன் மலர் என்றான்!

இடையொரு அழகு
மென் நூல் என்றான்!

நடைமிடும் போது
படையெடுக்கின்றாய்!

படைகளால் என்னை
சிறை அடைக்கின்றாய்!

அழகுக் கடையென வந்து
ஆசை மடை திறக்கின்றாய்!

தடைகளை உடைத்து
கடைமினைத் திறக்கவோ?

நடைமினை தடுத்து
படைமினை பிடிக்கவோ?

சிறை உடைக்காமலேயே
படையுடன் கலக்கவோ?

கொஞ்சம் மஞ்சம் இன்றியே
கொவ்வைப் பழங்களை
கொய்யவோ?

அனுமதி ஒன்று இல்லாமலே
அருங்கனிகளை அடையவோ?!"

மன்னன்
பெரும் கவிஞனாய்
மதன காவியம்
பாடிப்பாடியே
மங்கையரோடு கலந்தான்!

அரச மாளிகை
சரச கூடமானது!

கூட இருந்தோரும்
கும்மாளமிட்டனர்.

மன்னனின் 'பெயரில்
கொள்ளைகள் செய்தனர்!

ஊரைச் சுருட்டி
உலைமில் போட்டனர்!

ஊழல்கள் புரிந்து
ஊதிப் பெருத்தனர்!

குடி மக்களை குதறி
குபேரர்களாமினர்!

இறுதியில்
மன்னனையும் கவிழ்க்க
மார்க்கம் தேடினர்!

ஆட்சிக் கட்டிலில்
காட்சி தரத் துடித்தனர்!

மன்னனை ஒழித்தால்
யானே மன்னன்!

கூட இருந்தவர்கள்
குழி பறிக்க
தனித் தனியாக
திட்டம் தீட்டினர்!

மன்னனுக்கு மங்கையர்
மடிமேல் ஆசை!
அவன் கூட்டாளிகளுக்கு
மன்னன் சுமந்த
முடிமேல் ஆசை!

சூழ்ச்சிகள் சூழ்ந்தன.
வீழ்ச்சிக்கு வித்திட
சுறு சுறுப்பாகினர்!

மன்னனைக் காண்பதற்கு
அருளாளர் ஒருவர்
அவசரமாய் வந்திருந்தார்!

அந்தப்புரத்தில் அரசன்
சுந்தரப் பெண்களுடன்
சந்தம் பாடுவதாக கூறியது
பந்தம் பிடித்த கூட்டம்!

அவர்களை ஒதுக்கிவிட்டு
அரசனை சந்தித்தார்-அந்தச்
சிந்தனைச் சிற்பி!

"மன்னா உனக்கு
மாபாதகம் நடக்கிறது!

உள்ளிருந்தே உனக்கு
உலை வைக்கப்படுகிறது!

பந்தம் பிடித்த கூட்டம்
உனக்கு அந்த பந்தத்தாலேயே
கொள்ளி வைக்கப் போகிறது!"

எச்சரித்தார்! எடுத்துரைத்தார்!
மன்னன் மனம் அதிர்ந்தான்!

"நான் என்ன செய்வது
தாங்களே வழி கூறுக?"
என்று மதி கேட்டான்!

"ஏழு நாட்களுக்கு
நீ ஒரே வார்த்தையைக் கூறு"
என்றார் அருளாளர்.

"அது என்ன வார்த்தை?"
என்றான் மன்னன்.

"நான் எல்லாம் அறிவேன்
நான் எல்லாம் அறிவேன்
என்று கூறிக்கொண்டிரு!"

மன்னனும் கூறினான்.
கூறியதைக் கேட்ட
குறுமதியாளருக்கு
குடல் வரை நடுங்கியது!

அறிந்துவிட்டான்
சூழ்ச்சிகளை!
விழித்துக் கொண்டான்
இனித் தொலைந்தோம்!

ஒவ்வொருவராக
ஓளித்தோடினார்கள்!

"பல காலமாய்
தீயோரோடு சேர்ந்திருந்தும்
கண்ட பலன் ஏதுமில்லை!

ஒரே ஒரு நாள்
அதுவும் சில நாழிகைகள்
நல்லவர் ஒருவரோடு
நான் உரையாடினேன்
விளைந்தது நன்மை
தொலைந்தது தீமை!

பூவோடு சேர்ந்த
நாரும் மணம்பெறும்!

நல்லாருடன் சேரும்
நட்பும் வளம் பெறும்!

காலமெல்லாம் தீயாரோடு
கலந்திருப்பதைவிட
ஒரு மணித்துளியாவது
நல்லாரோடு
நட்பாயிருப்பது மேல்!"
மன்னன் தெளிந்தான்.

இதனைத்தானே
அவ்வைப் பாட்டியும்
அழகாக கூறிப்போனார்:

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே-நலம்மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே
-நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்றே!"

## இலக்கிய நயம்

## தருவது ரசிகன்

♣ வன்னியில் தமிழ் நிலங்கள் உருமாறுவது தொடர்பாக தமிழ்க் கட்சிகள் கவலையே படவில்லையே?

கே. கிருஷ்ணராஜ், வவுனியா.

தாமே உருமாறி நிற்பவர்கள், நில உரு மாற்றம் பற்றியா உளச் சீற்றம் கொள்ளப் போகிறார்கள்?!

♣ செம்மணி என்றால் தமிழக எழுத்தாளர் பாலகுமாரனுக்குத் தெரியவில்லையாமே?

எம். குகநாதன், கொழும்பு-06.

எனக்குத் தெரியவில்லை! அப்படியே உண்மையாக இருந்தாலும் அது பாலகுமாரனின் தவறல்ல! செம்மணி அநியாயம் தொடர்பாக தமிழ் நாட்டில் பெரியளவில் பிரசாரம் நடக்கவும் இல்லை! பாலகுமாரன் ஒன்றும் பிற்போக்குவாதியல்ல; அவர்களையும் நம் தரப்புக்கு இழுத்து நட்பாக வைத்திருப்பது நம் கையில்தான் உள்ளது!

♦■♥

♣ இலங்கை அணி முதல் ஆட்டத்திலேயே தோல்வி கண்டுவிட்டதே? கிண்ணம் யாருக்கு?

எம். சேவியர், வத்தளை.

சந்தேகமே இல்லாமல் அவுஸ்திரேலிய அணிக்குத்தான்!

♦■♥

♣ 'குடும்பம்' நாடகத்தில் அம்பிகா ஏன் நடிப்பதை நிறுத்தினார்?

எஸ். மகேந்திரன், கொழும்பு-11.

அவர் எங்கே நிறுத்தினார். தயாரிப்பாளர்களே 'தாயே! உன் லொள்ளுத் தாங்க முடியவில்லை' என்று நிறுத்திவிட்டனர். மறுமணத்தின் பின்னர் படப்பிடிப்புக்களுக்கு ஒழுங்காக வருவதில்லையாம்!

♦■♥

♣ தமிழ் நாட்டில் தி.மு.க. கூட்டணி, அ.தி.மு.க. கூட்டணி-எது முன்னணியில் நிற்கிறது?

வி. அம்பலவாணர், மட்டக்களப்பு.

தற்போது தி.மு.க. கூட்டணிதான்! காங்கிரஸ் வாக்குகளை த.மா.க. ஓரளவு உடைக்கும். அதனால் அ.தி.மு.க.- காங்கிரஸ் கூட்டணிக்கு முன்புபோல அமோக வாக்கு அறுவடை இருக்காது. எனினும் ஜெயலலிதாவுக்கு கணிசமான ஆதரவு கிராமங்களில் இன்னும் இருப்பதால் படுதோல்வி அடைய மாட்டார். ஆனால் சென்ற முறையைவிட ஆசனங்கள் குறைவாகக் கிடைக்கும். தி.மு.க.வுக்குச் சென்ற தடவையை விட ஆசன எண்ணிக்கை உயரும்.

♦■♥

♣ விஜய்-சங்கீதா திருமணம் கோலாகலமாக நடந்துவிட்டதா சிந்தியா?

செல்வி இ. சாரதா, மன்னார்.

ஜாம் ஜாம் என்று நடந்ததாம்.

♦■♥

♣ இந்தியா விடயத்தில் அமெரிக்கா கொள்கையை மாற்றிவிட்டது. இந்தியாவுக்கு சார்பாக நடப்பதாக இந்தியாவிலும், இங்கும் சில பத்திரிகைகள் எழுதித் தள்ளின. இப்போது அணு ஆயுதக் கொள்கை பற்றி இந்திய அரசு கூறியதும் அமெரிக்கா மிரட்டியுள்ளதே! என்ன கூறப்போகிறார்கள்?

இ. ரவிச்சந்திரன், கொழும்பு-05.

அமெரிக்கா கொள்கையை மாற்றவில்லை. தந்திரங்களை மட்டும் அவ்வப்போது மாற்றிக்கொள்ளும். கார்க்கிலில் இந்திய-பாகிஸ்தான் மோதலில் சூழலுக்கு ஏற்ற தந்திரத்தைப் பாவித்தது அமெரிக்கா! இந்தியா வல்லரசாக மாறுவதை அமெரிக்கா ஒருபோதும் விரும்பாது! ஏனெனில் தென் ஆசியாவை ஆட்டிப் படைக்கும் கனவுக்கு ஆபத்தாகிவிடும்! அணுக்குண்டு பற்றி இந்தியா வாய்திறந்தாலே அமெரிக்கா வயிற்று வலி வந்தது மாதிரித் துடிப்பதும் அதனால் தான்!

♦■♥

♣ மந்த புத்திக்கு மருந்தே கிடையாதா?

எஸ். செல்வேந்திரன் (ஆசிரியர்), பதுளை.

மனது தெளிவதே மருந்து.



'தாளம்' படத்தில் ஐஸ்வர்யா ராய்

புத்தி மூன்று வகைப்படும். மாணவர்களில் சிலர் சொல்லிக்கொடுத்ததும் உடனே புரிந்துகொள்வார்கள். இதனை கற்பூர புத்தி எனலாம்.

அடுத்தது கரி புத்தி. கரிக்கட்டையில் நெருப்பை வைத்து சிறிது விசிறிவிட்டால்தான் பற்றி எரியும்.

மூன்றாவது வாழைத் தண்டு புத்தி. வாழைத் தண்டில் என்னதான் நெருப்பு வைத்தாலும் அது எரிவதேயில்லை.

♦■♥

♣ சிந்தியா! அகங்காரம் கொண்ட மனிதர்களைத் திருத்த முடியாதா?

சி. குணராசா, கொழும்பு-09.

மனிதர்களது ஆயுளை ஆறு கூர்மையான கத்திகள் தீர்மானிப்பதாக விதுர நீதி கூறுகிறது. இந்தக் கத்திகள்தான் மனிதனைக் கொல்கின்றனவாம்.

1. மிகவும் அதிகமான அகங்காரம்.
2. அதிகமான பேச்சு.
3. குற்றங்களை மிகுதியாகச் செய்வது.
4. தன்னை மட்டும் காத்துக் கொள்வது.
5. நண்பர்களுக்குத் துரோகம் செய்வது.
6. அதிகமான கோபம்.

♦■♥

## சிந்தியா பதில்கள்

♣ விஜய்-சங்கீதா திருமணத்தின் பின்னர் விஜய்க்கு இரசிகைகள் எழுதும் கடிதங்களை விஜய் படிப்பாரா?

செ. அஸ்வினி, நீர்கொழும்பு.

சங்கீதாவும் படிக்கக் கூடும்!

புகழ்பெற்ற ஒரு மேல் நாட்டு எழுத்தாளருக்கு பரம இரசிகையான வாசகி ஒருத்தி கடிதம் எழுதினாள்.



விஜய்-சங்கீதா. நிழல் அல்ல நிஜம்

'நான் உங்களுக்காக எதையும் செய்யக் காத்திருக்கிறேன். எதையும் என்றால்... எதையும்...'

தனக்கு வந்த கடிதத்தை எழுத்தாளர் தன் மனைவியிடம் கொடுத்து, "இதற்கு நீயே பதில் போட்டுவிடு!" என்று கூறினார்.

எழுத்தாளரின் மனைவி அந்த இரசிகைக்கு இப்படியொரு கடிதம் எழுதினார்:

"ஏற்கனவே அவருக்காக எதையும் செய்ய நான் ஒருத்தி காத்திருக்கிறேன். அதாவது எதையும் என்றால்...எதையும்....!"

♦■♥

♣ தாமரை இலையில் தண்ணீர் ஏன் நிற்பதில்லை என்று கூறுங்கள்?

செல்வி மா. சித்திரா, பண்டாரவளை.

தண்ணீருக்குத்தான் கால் இல்லையே!

♦■♥

♣ 'தாளம்' படத்தில் நாயகன் யார்?

எம்.கோகுல், கொழும்பு-05.

அனில் கபூர். இந்தியில் இருந்து தமிழுக்கு மொழிமாற்றியுள்ளனர். இந்தியில் 'தாள்'. தமிழில் 'தாளம்'. 50 கிலோ தாஜ்மஹால் தான் நாயகி.

♦■♥

♣ விதியை மதியால் வெல்ல முடியுமா?

எம். அம்பிகாராணி, திருமலை.

ஒரு சோதிடன் ஓர் அரசனிடம், அவனுக்கு மிகவும் பிடித்த பெண் 'பத்து நாட்களில் இறப்பாள்' என்று கூறினான். அவன் கூறியபடியே அந்தப் பெண் இறந்துபோனாள்.

தன் வாக்குப் பலிக்கவேண்டும் என்று சோதிடன்தான் அவளைக் கொன்றுவிட்டதாக அரசன் நினைத்தான்.

சோதிடனை அழைத்த அரசன்,

"நீ எல்லாம் அறிந்தவன். புத்திசாலி. சரி, உன் முடிவு பற்றி உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

சோதிடன் புத்திசாலி. தனக்கு அரசன் முடிவு கட்ட நினைத்துவிட்டதை புரிந்து கொண்டான். அரசனைத் தந்திரமாக சமாளிக்க நினைத்து பின்வருமாறு கூறினான்:

"தெரியும் அரசே! உங்களுக்கு எப்போது முடிவு வருமோ, அதற்கு மூன்று நாட்கள் முன்பு எனக்கு முடிவு வரும்!"

அவ்வளவுதான் அரசன் அரண்டு போனான். சோதிடனை சாகடித்த மூன்றாம் நாள் நமக்கும் முடிவு வந்துவிடுமே என்று பயந்து, அன்று முதல் சோதிடனை பாதுகாக்க ஏற்பாடு செய்தான்.

♦■♥

♣ தற்போதைய கிரிக்கெட் அணிகளில் வெற்றிக்கு நம்பகமான அணிகள் என்று எவற்றைக் குறிப்பிடலாம்?

எம்.எஸ். ஆமிஷா, கொள்ளுப்பிட்டி.

அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா. பாகிஸ்தான் மூன்றும்தான்! இந்திய அணி நிமிர பல ஆண்டுகள் பிடிக்கும்! இலங்கை அணியின் நிலையும் அதுவே. பொறுத்திருந்து பாருங்கள்!

♦■♥

♣ நீலன் மரணமாகாது விட்டால், அவர் பலியான நாளிலிருந்து நான்கு நாட்களுக்குள் தீர்வு வந்திருக்கும் என்று 'இந்திய ருடே' சஞ்சிகையில் வாஸந்தி எழுதியுள்ளாரே?

மா. ரங்கநாதன், மட்டுநகர்.

வாஸந்திக்கு கிடைத்துள்ள தகவல் எத்தனை அபத்தம் பார்த்தீர்களா? செப்டம்பர் முதல் மூன்றுமாதம் அமெரிக்காவில் தங்கவிருந்தார் நீலன்! பொதி வரவிருந்தால் அவர் ஏன் போக நினைக்கிறார்? அதுமட்டுமா? பத்திரிகையாளர் டி.பி. ஜெயராஜிடம் இறப்பதற்கு ஒரு மணி நேரம் முன்பாக பேசினாராம். டி.பி. ஜெயராஜ் நீலனின் நெருங்கிய நண்பர். அவர் 'பொதி ஒப்பேறாது. தனக்கு நம்பிக்கை தளர்ந்துவிட்டது' என்று நீலன் தன்னிடம் கூறியதாக அவர் சென்னை 'இந்து'வில் எழுதியதைக் கூடவா வாஸந்தி படிக்கவில்லை!

♦■♥

★ 'வீரலுக்கு ஏற்ற வீக்கம்' எப்படியிருக்கிறது சிந்தியா?

ஆர். சுமதி, வவுனியா.

கோவை சரளா குஷ்புவையும் சாப்பிட்டு விட்டார் போங்கள்! வடிவேலு மிரட்டும் போது அவர் மிரள்வதும், பின்னர் வடிவேலுவை புரட்டி எடுப்பதும், கலக்கல் சரளா!

(ஸ்போர்ட்ஸ்)

## சியட் தரவரிசைப் பட்டியல்

சியட் உலகக் கிரிக்கெட் வீரர்கள் தர வரிசைப் பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்டது. முதலிடத்தில் இருந்த இந்தியவீரர் ராகுல் ட்ராவிட்டை பின்னுக்குத் தள்ளிவிட்டு முதலிடத்தைப் பிடித்துள்ளார் நியூஸிலாந்து வீரர் கிறிஸ் கெய்ன்ஸ்.

உலகக் கோப்பைப் போட்டியில் சிறப்பாக விளையாடியதால் 22 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் இருந்த ராகுல் ட்ராவிட், இரண்டாவது இடத்தில் உள்ளார். முதலிடத்தைப் பெற்றுள்ள கிறிஸ் கெய்ன்ஸ் 23 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

சியட் தரவரிசைப் பட்டியலில் முதல் 10 இடங்களில் உள்ள வீரர்களும் அவர்கள் பெற்றுள்ள புள்ளிகள் பற்றிய விவரங்களும் வருமாறு:

| இடம் | வீரர் | நாடு | புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | கிறிஸ் கெய்ன்ஸ் | நியூஸிலாந்து | 23 |
| 2 | ராகுல் ட்ராவிட் | இந்தியா | 22 |
| 3 | நீல் ஜோன்சன் | ஸிம்பாப்வே | 21 |
| 4 | லான்ஸ் குளுஸ்னர் | தென்னாபிரிக்கா | 19 |
| 5 | சௌரவ் கங்குலி | இந்தியா | 16 |
| 5 | ஸ்டீவ் வோவ் | அவுஸ்திரேலியா | 16 |
| 5 | ஜெஃப் அலொட் | நியூஸிலாந்து | 16 |
| 5 | அண்டி கடிக் | இங்கிலாந்து | 16 |
| 9 | சயிட் அன்வர் | பாகிஸ்தான் | 15 |
| 9 | மார்க் வோவ் | அவுஸ்திரேலியா | 15 |

## அஸாரின் புதிய முயற்சி

இந்திய அணியின் முன்னாள் கப்டன் முஹமட் அஸாருதீன். உலகக் கோப்பைப் போட்டிக்குப் பின் கப்டன் பதவியும் பறிபோய் அணியிலும் இடம் பெறாமலும் இருக்கிறார்.



உலகில் அதிக ஒருநாள் பந்தயங்களில் விளையாடிய சாதனையாளரான இவர் ஒரு நாள் போட்டிகளில் அதிக ஓட்டங்களையும் குவித்த உலக சாதனையாளர். நேர்த்தியான துடுப்பாட்டத்தாலும், சிறந்த களத் தடுப்பாலும் சிறந்த வீரராக மிளிர்ந்தவர்.

இப்போது சோதனையில் சிக்கித் தவிக்கும் இவர், "இனிநான் நிறைய கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவேன். எனக்கு முன் உள்ள சவால்களைச் சந்தித்து இந்திய அணியில் மறுபடி இடம் பெறுவேன் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது!" என்று கூறுகிறார்.

இதேவேளை அவரது சொந்த இடமான ஹைதராபாத்தில் கிரிக்கெட் பயிற்சி மையம் ஒன்றை உருவாக்க முயற்சி செய்து வருகிறார். இந்த முயற்சி கைகூடினால் அஸாரின் பயிற்சியில் சிறந்த இளம் கிரிக்கெட் வீரர்களை உருவாக்க முடியும்.

## முதல் மோதல்

மேற்கிந்தியத் தீவுகள்-ஸிம்பாப்வே அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டித் தொடர் 2000ம் ஆண்டில் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ளது.

1983ல் நடைபெற்ற 3வது உலகக் கோப்பைப் போட்டியில் பங்குபற்றியதன் மூலம் முதன் முறையாக சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் நுழைந்தது ஸிம்பாப்வே. ஆனால் டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் அந்தஸ்தை 1992ல் தான் ஸிம்பாப்வே பெற்றது.

மேற்கிந்தியத் தீவுகளுடன் இதுவரை ஸிம்பாப்வே டெஸ்ட் போட்டிகளில் விளையாடியதில்லை. 2000ம் ஆண்டில் நடைபெறவுள்ள டெஸ்ட் தொடரில் தான் இரு அணிகளும் முதல் முறையாக மோதவுள்ளன.

## இவர்தான் அவர்



ரோஜா

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி


## புதிய ஆகமம் 15

ஆண்டவரின் திருக்குமாரராகிய இயேசு பிரான் சாதாரண மனிதரைப் போல் மக்கள் மத்தியில் உலவினார். தம் மக்களை வழி நடத்துவதற்காக அரும்பெரும் கருத்துக்களை அவர் மிகவும் எளிய உவமைகள் மூலம் விளக்கிக் கூறினார்.

ஒரு வயலில் வாற்கோதுமைப் பயிர்களுடன் வளர்ந்து விட்ட களைகளைப் பற்றி இயேசு பிரான் பேசியிருந்தார். இதனை அவருடைய சீடர்களில் சிலருக்குப் புரிந்து கொள்ள முடியாமல் போய்விட்டது. அவர்கள் இயேசுபெருமானை அணுகி, "வயலில் களைகள் பற்றிப் பேசினீர்களே! அந்த உவமையை எங்களுக்குச் சற்று விளக்கமாகக் கூற முடியுமா?" என்று கேட்டார்கள். அதற்கு இயேசு பிரான் இவ்வாறு விளக்கமளித்தார்.

"நல்ல விதைகளை விதைப்பவர்கள் மானிட மகன்; வயல், இவ்வுலகம், நல்ல விதைகள், கடவுளின் ஆட்சிக்குட்பட்ட மக்கள்; களைகள், தீயோனைச் சேர்ந்தவர்கள்; அவற்றை விதைக்கும் பகைவன், அலகை; அறுவடை செய்வோர், வானதூதர். எவ்வாறு களைகளைப் பறித்துத் தீக்கிரையாக்குவார்களோ அவ்வாறே உலக முடிவிலும் நடக்கும். மானிட மகன் தம் வானதூதரை அனுப்புவார். அவர்கள் அவருடைய ஆட்சிக்குத் தடையாக உள்ள அனைவரையும் நெறிகெட்டோரையும் ஒன்று சேர்ப்பார்கள்; பின் அவர்களைத் தீச்சூளையில் தள்ளுவார்கள். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும். அப்போது நேர்மையாளர் தம் தந்தையின் ஆட்சியில் கதிரவனைப் போல் ஒளி வீசுவர். கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்.

## இறுதி பற்றிய முன்னறிவித்தல்



### புதையல் உவமை

"ஒருவர் நிலத்தில் மறைந்திருந்த புதையல் ஒன்றைக் கண்டுபிடிக்கிறார். அவர் அதை மூடி மறைத்து விட்டு மகிழ்ச்சியுடன் போய்த் தமக்குள்ள யாவற்றையும் விற்று அந்த நிலத்தை வாங்கிக்கொள்கிறார். விண்ணரசு இப்புதையலுக்கு ஒப்பாகும்.

### முத்து உவமை

"வணிகர் ஒருவர் நல்முத்துகளைத் தேடிச் செல்கிறார். விலை உயர்ந்த ஒரு முத்தைக் கண்டவுடன் அவர் போய்த் தமக்குள்ள யாவற்றையும் விற்று அதை வாங்கிக் கொள்கிறார். விண்ணரசு அந்நிகழ்ச்சிக்கு ஒப்பாகும்."

### வலை உவமை

"விண்ணரசு கடலில் வீசப்பட்டு எல்லா வகையான மீன்களையும் வாரிக் கொண்டு வரும் வலைக்கு ஒப்பாகும். வலை நிறைந்ததும் அதை இழுத்துக்கொண்டு போய்க் கரையில் உட்கார்ந்து நல்லவற்றைக் கூடைகளில் சேர்த்து வைப்பர்; கெட்டவற்றை வெளியே எறிவர். இவ்வாறே உலக முடிவிலும் நிகழும். வானதூதர் சென்று நேர்மையாளரிடையேயிருந்து தீயோரைப் பிரிப்பர்; பின் அவர்களைத் தீச்சூளையில் தள்ளுவர். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும். ஆகையால் விண்ணரசு பற்றிக் கற்றுக்கொண்ட எல்லா மறைநூல் அறிஞரும் தம் கருவூலத்திலிருந்து புதியவற்றையும் பழையவற்றையும் வெளிக்கொணரும் வீட்டு உரிமையாளரைப்போல் இருக்கின்றனர்."

### யோவான் கொல்லப்படுதல்

யூதா மக்களை ஆட்சி செய்ய ரோமச் சக்கரவர்த்தியால் நியமிக்கப்பட்டிருந்த ஏரோது மன்னன் தன் சகோதரனின் மனைவியான எரோதியாவை தன் வாழ்க்கைத் துணைவியாக வைத்திருந்தான். திருமுழுக்கு யோவான் ஒருமுறை ஏரோது மன்னனை சந்தித்தபோது, சகோதரனின் மனைவியைத் தன் மனைவியாக வைத்திருப்பது முறைகேடானது என்பதைச் சுட்டிக்காட்டிக் கண்டித்திருந்தான்.

ஏரோதோ அல்லது ஏரோதியாவோ, யோவானின் இக் கூற்றினை ஏற்றுக் கொள்ளவில்லை. யோவானைச் சிறையிலடைக்க வேண்டும் என்று ஏரோதியா கணவனைக் கேட்டுக்கொண்டாள். திருமுழுக்கு யோவானின் பெருமையை ஏரோது மன்னன் ஓரளவு அறிந்திருந்தமையினால் யோவானைக் கைது செய்ய மனம் ஒப்பவில்லை. மனைவியின் தூண்டுதலால் யோவனைக் கைது செய்து சிறையிலடைத்தான். யோவானைக் கொன்றுவிட வேண்டும் என்றே அவள் ஏரோது மன்னனை நச்சரித்த வண்ணமிருந்தாள். யூதா மக்கள் திருமுழுக்கு யோவானை ஓர் இறைவாக்கினர் என்றே நம்பியிருந்தனர் என்பதனால் அவரைக் கொலை செய்தால் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டியிருக்கும் என்று ஏரோது மன்னன் அஞ்சியதால் அவரைச் சிறையிலேயே அடைத்து வைத்திருந்தான்.

ஏரோதியா, யோவானைக் கொல்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். அதற்கான சந்தர்ப்பமும் வந்தது.

ஏரோது மன்னனின் பிறந்த நாள் விழாவினைக் கொண்டாட அரண்மனையில் ஏற்பாடுகள் நடைபெற்றன. இவ்விழாவின்போது தனது மகளின் நடனத்தை விருந்தினர்கள் முன் நடத்துவதற்கு ஏரோதியாவே ஏற்பாடு செய்திருந்தாள்.

திட்டமிட்டபடி ஏரோதியாவின் மகள் எல்லோரையும் கவரத்தக்க நடனம் ஆடி அனைவரின் பாராட்டுக்களையும் பெற்றாள். மன்னன் ஏரோதும் மிக்க மகிழ்ச்சியடைந்தான். இதற்குப் பரிசாக, அவள் எதைக் கேட்டாலும் தருவதாக ஏரோது சபையோர் அனைவரின் முன்னிலையிலும் வாக்களித்திருந்தான்.

விருந்தினர்கள் அனைவரின் முன்னிலையில் மகளைத் தன்னிடம் அழைத்த ஏரோது, விருந்தினர் முன்னிலையில், "மகளே! உனக்கு என்ன வேண்டும் சொல்! இங்கு குழுமியிருக்கும் சகலரையும் உன் நடனத்தால் மகிழ்வித்தாய்! நீ விரும்பியது எதுவோ, அதனைக் கேள்! உடனடியாக நீ கேட்ட பரிசினைத் தருகிறேன்!" என்றான்.

தாயான ஏரோதியா கூறிவைத்ததைப் போல், அவள் சற்றும் தயங்காமல், "சிறையிலடைக்கப்பட்டிருக்கும் திருமுழுக்கு யோவானின் தலைதான் எனக்குப் பரிசுப் பொருளாகத் தரப்படவேண்டும்!" என்று கேட்டாள்.

இத்தகைய கோரிக்கையை எதிர்பாராத மன்னன் ஏரோது துணுக்குற்றான். இருப்பினும் பல பாகங்களிலிருந்து, பிறந்தநாள் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள வந்திருந்த விருந்தினர் அனைவரின் முன்னிலையிலும் தான் கொடுத்த வாக்கினைக் காப்பாற்ற வேண்டிய நிர்ப்பந்தத்திற்குட்படுத்தப்பட்டிருந்த மன்னருக்கு வேறு வழி தெரியவில்லை. சேவகனை அழைத்து, திருமுழுக்கு யோவானின் தலையைக் கொய்துவரும்படி கட்டளையிட்டான்.

திருமுழுக்கு யோவானின் தலையினைக் கொய்த ஏவலாளன், அதனை ஒரு தட்டில் வைத்து மன்னரிடம் கொண்டுவந்து சேர்த்தான். அத்தலையைத் தன்கையில் வாங்காமலேயே தன் மகளிடம் கொடுக்கும்படி ஏவலாளனைப் பணித்தான் மன்னன். அவள் யோவானின் தலையைப் பெற்றுக்கொண்டு போய், அந்தப்புரத்திலிருந்த அவளுடைய தாயிடம் கொடுத்தாள். தான் நினைத்ததைச் சாதித்து விட்டதாக ஏரோதியா பலத்துச் சிரித்தாள்.

யோவானின் சீடர்கள் அவருடைய உடலை எடுத்துக்கொண்டு சென்று உரிய மரியாதையுடன் அடக்கம் செய்தனர். இச்சம்பவம் இயேசு பிரானுக்கும் அறிவிக்கப்பட்டது. அவர் மிகவும் மனம் வருந்தினார்.

### பேதுருவின் அறிக்கை

இயேசுபிரான் மென்மேலும் பல இடங்களுக்கும் சென்று அருளுரைகளை வழங்கினார். நோய் துன்பங்களினால் துயருறும் பலரையும் குணப்படுத்தினார். அவருடைய திரு உருவத்தைக் காண்பதற்கும் அருளுரைகளைக் கேட்பதற்கும் மக்கள் ஆயிரமாயிரமாகத் திரண்டு அவர் போகுமிடங்களுக்கெல்லாம் சென்றனர்.

பிலிப்புச் செசரியா என்ற பகுதிக்கு இயேசுபிரான் தமது சீடர்களுடன் சென்றிருந்தார். அப்போது தன்னை மக்கள் எவ்வாறு கருதுகிறார்கள்? என்று சீடர்களிடம் வினவினார். பலரும் பலவிதமாகக் கூறினர். எனினும் சீமோன் பேதுரு என்ற சீடர் மட்டும், "தாங்கள் தான் மனுக்குலத்தை இரட்சிக்க வந்த மேசியா; வாழும் கடவுளின் மகன் தாங்களே!" என்றார்.

சீமோனின் வார்த்தையைக் கேட்ட இயேசுபிரான், "யோனாவின் மகனான சீமோனே! நீயே பேறுபெற்றவன்; ஏனெனில் எந்த மனிதரும் இவ்வுண்மையை உனக்குக் கூறவில்லை. விண்ணகத்திலுள்ள என் தந்தையே இதனை உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். எனவே இன்று முதல் உன் பெயர் பேதுரு.

### "இந்தப் பாறையின் மேல்..."

இந்தப் பாறையின்மேல் என் திருச் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா. விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன். மண்ணுலகில் நீ தடை செய்வது விண்ணுலகிலும் தடை செய்யப்படும். மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்." என்றார். பின்னர், தாம் மெசியா என்பதை எவரிடமும் சொல்ல வேண்டாம் என்று இயேசு சீடரிடம் கண்டிப்பாய்க் கூறினார்.

### சாவைப் பற்றிய முன்னறிவித்தல்

இயேசுபிரான் தமது சீடர்களிடம் தமது இறுதிக் காலம் நெருங்கி வருவதையிட்டுச்

இராஜகுமாரன்

சூசகமாக முன்னறிவித்தல்களைக் கூறத் தொடங்கினார். எருசலேமுக்குத் தான் போகப் போவதாகவும் அங்குள்ள மூப்பர்களும் குருக்கள்மாரும், மறைநூல் அறிஞர்களும் தம்மைச் சிறைப்பிடித்துச் சித்திரவதைக்குட்படுத்தப் போவதாகவும் கூறினார். அவர்களின் தூண்டுதலால் தான் கொலை செய்யப்படப் போவதாகவும் கூறினார். அவ்வாறு கொலை செய்யப்பட்டாலும், மரித்து மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படப் போவதாகவும் தெரிவித்தார்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட அவரது சீடர்கள் பெரும் துயரில் மூழ்கினர். பேதுரு இயேசுபிரானை அணுகி, "ஆண்டவரின் திருக்குமாரரே! இவ்வார்த்தைகளைக் கூறாதீர்கள். அவ்வாறு ஒருபோதும் உங்களுக்கு நேராது. அப்படி நடக்கவும் கூடாது!" என்று அழுதழுது சொன்னார்.

பேதுருவின் கூற்று இயேசு பெருமானுக்கு சற்றுக் கோபத்தை உண்டு பண்ணியது. பேதுருவிடம் சற்றுக் கடுமையாக இவ்வாறு கூறினார்:

"நீ கடவுளுக்கு ஏற்றவை பற்றி எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவை பற்றியே எண்ணுகிறாய்!" என்றார். பின்பு இயேசு தம் சீடரைப் பார்த்து, "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில் தம் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவர். மாறாக என் பொருட்டுத் தம்மையே அழித்துக் கொள்கிற எவரும் வாழ்வடைவார். நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்; இங்கே இருப்பவருள் சிலர் மானிட மகனது ஆட்சி வருவதைக் காண்பதற்கு முன் சாகமாட்டார்!"

(தொடர்ந்து வரும்)

**திருமறை [பு.ஆ] 12 விடை:** தமக்கு அறிவிக்கப்பட்ட மீட்பர் என்று கருதினார்

**பரிசு பெறுவோர்:**

1. **மெல்வின் றொயிஸ்,** தபாலக விடுதி, மன்னார்.
2. **ரி. மங்கள கௌரி,** பிரதான வீதி, இரத்தோட்டை.
3. **ரொபட் ஃபிரேன்ஸிஸ்,** பாம்கார்டன் தோட்டம், இரத்தினபுரி.
4. **எம். ஆர். றஸீனா,** கணேவல்பொல, கெகிராவ.
5. **பி. கிஷான் வாஸ்,** செலர் ஒழுங்கை, புனித செபஸ்தியார் தெரு, மட்டக்களப்பு.

**திருமறை [பு.ஆ] 15 வினா :-** சீமோனுக்கு இயேசு சூட்டிய பெயர் என்ன?

செப்டெம்பர் 04 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:

**திருமறை பு.ஆ.15 – தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# பாரீர்-பாரீர்-பரவசப்படுவீர்!

## ஐந்தாண்டுகால சாதனைகள்



✷ பொதி பற்றி மட்டுமே முப்பது கோடியே முப்பது இலட்சத்து முப்பத்தி நாலாயிரத்தி முன்னூற்றி முப்பத்தாறு தடவைகள் உலக அரங்கிலும், உள்நாட்டிலும் பேசி உள்ளோம்.

✷ 'அரசியல் தீர்வு இங்கு அவசியம்' என்ற வார்த்தையை மட்டும் அறுபது கோடியே ஆறு இலட்சத்து அறுபதாயிரத்தி அறுநூற்றி அறுபத்து மூன்று தடவைகள் அகில உலகத் தலைவர்களுக்கும், உள்நாட்டு மக்களுக்கும் கேட்கக் கூடியதாக வாய்வலிக்கப் பேசியுள்ளோம்.

✷ போர் தீவிரமாகும்போதெல்லாம், போரை தீவிரமாக்கும் திட்டங்களை அங்கீகரித்தபடியும், இராணுவ தளபாடங்களை வாங்கிக் குவித்தபடியும், 'போரை முடிவுக்கு கொண்டுவருவோம்' என்று கூறி சமாதான ஆர்வலர்களை வியக்க வைத்திருக்கிறோம்.

✷ தமிழ்க் கட்சிகளை நம்மிஷ்டம் போல ஐந்தாண்டுகள் தொடர்ந்து பயன்படுத்தி இருக்கிறோம்.

✷ 'இந்த ஆண்டு பொதி வரும்' என்று கூறிக் கூறியே ஐந்தாண்டு கடந்திருப்பதும் அசுர சாதனையன்றோ!

# தோள் கொடுப்பதில் துவளாத ஐந்தாண்டுகள்

மாண்புமிகு...

தங்களை ஆதரித்த நாமும், தங்களை ஆதரிப்பதில் ஐந்து ஆண்டுகளை வெற்றிகரமாக கடந்துள்ளதை நினைக்கையில் ஆனந்தக் கண்ணீர் அருவியாகக் கொட்டுகிறது.

எங்களுக்கு தாங்கள் கொடுத்த உத்தரவாதங்கள் யாவும் ஓட்டை வாளியில் ஊற்றிய தண்ணீர்போல ஒழுகிப்போய்விட்டன.

காணாமல் போனோருக்கான கமிஷன் என்னாச்சு? களுத்துறை சிறைப் படுகொலைக்கு நடவடிக்கை என்னாச்சு? பொல்கொடவாவி படுகொலைகளில் கைதானவர்கள் என்னாயினர்? வலிகாமம் காணி சுவீகரிப்புக்கு வர்த்தமானி அறிவித்தலை இரத்தாக்கவில்லையே? என்றெல்லாம் நாம் கேட்போம் என்று கனவிலும் நினைக்க வேண்டாம்.

அதனையெல்லாம் மக்களே மறந்து போய்விடவேண்டும் என்று நாம் மன்றாடாத கடவுளே கிடையாது!

'எல்லாம் வல்ல பரம்பொருளே! எம் மக்களுக்கு எல்லாவற்றையும் மறந்துவிடும் சக்தியைக் கொடு!' என்றுதான் தினமும் குறைந்த பட்சம் ஒரு மணிநேரம் பிரார்த்தித்து வருகிறோம்.

நாம் தங்களிடம் நினைவூட்டுவது எல்லாம், வடக்கு-கிழக்கு மாகாணசபைக்கு தேர்தலை நடத்தி எம்மில் ஒருவரை முதல்வராக்கி முத்தான வாய்ப்பை வழங்குமாறுதான்.

தேர்தல் நடத்தினால் உயிர்ப்பலி ஏற்படும் என்று தங்கள் மாண்புமிகு அமைச்சர் ஒருவரே கூறியுள்ளாராம்.

எத்தனையோ மக்களை பலியெடுக்கும் போரை நடத்துகிறீர்களே. நாங்கள் ஊரைக் கூட்டி அந்த உண்மைகளைச் சொன்னோமா?

நீங்கள் போரை நடத்துங்கள், எங்களுக்காக ஒரு தேர்தலை நடத்தி, தலைவர்களாக உலகுக்கு காட்டுங்கள். போருக்கு போர்வையும் கிடைக்கும், எங்களுக்கு குண்டு துளைக்காத கார்களும் கிடைக்கும்!

இந்த தந்திரத்தைப் புரியாமல் எங்களை காட்டிக்கொடுக்கும் விதமாக தங்கள் அமைச்சர் கூறியதை வன்மையாக கண்டிக்கும் துணிவை நாம் பெறவில்லையானாலும், தன்மையாக, மென்மையாக சுட்டிக்காட்டுகிறோம்.

ஐந்தாண்டு காலமாக தங்கள் மனம் கோணாது நாம் சேவை செய்வதற்கு பரிசு ஏதாவது தரவிரும்பினால், வடக்கு-கிழக்கு மாகாணசபையை ஆளும் பொறுப்பை தருவதாக எங்களிடம் ஐந்தாண்டுகளாக கூறிவருவதை மிஞ்சியுள்ள ஓராண்டுக்குள்ளாவது நிறைவேற்றி எங்கள் ஆசைக்கு விளக்கேற்றி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் ஓராண்டு மட்டும் உள்ளதால், இரண்டு மாதத்துக்கு ஒருவர் என்ற கணக்கில் எமது கட்சிகளில் ஒவ்வொருவர் முதல்வராக இருக்கக்கூடியதாக ஒப்பந்தம் செய்துள்ளோம் என்னும் தங்கமான தகவலையும் தாழ்மையோடு தெரிவிக்கிறோம்.

நன்றி வணக்கம்

தங்கள் நல் முடிவை நாடும்

..............................



www.padippakam.com






அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

436331


# இளவரசி








ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

323657




டயானா! அவர் அணியும் ஆடைகளும், அலங்கார அணிகளும்தான் நவீன பெண்கள் நாடும் ஃபாஷனாக இருந்தது.

உடைகளை நேர்த்தியாகவும், புதுப்புது ரகங்களிலும் தெரிவு செய்வதில் டயானாவின் ரசனையை மிஞ்சுவதற்கு வேறு ஆளில்லை.

டயானாவுக்கு உடைகள் வடிவமைத்தவர்கள் அனைவருமே உடைகள் பற்றிய டயானாவின் ரசனையைப் பற்றி இப்போதும் சொல்லிச் சொல்லி புகழ்கிறார்கள்.

உடை மட்டுமல்ல, அதற்கேற்ற கைப்பை, குடை, பாதணிகள், காதணிகள் மட்டுமன்றி, தனது சிகையலங்காரத்தையும் உடைக்கேற்ப அமைத்துக் கொள்வார் டயானா. இங்கு மூன்று விதமான உடையலங்காரம் அதற்கேற்ற உப அலங்காரங்களுடன் டயானா காட்சி தருகிறார்.

டயானா இளம் பெண்களின் இதயத்தில் இடம்பிடிக்க இந்த அலங்கார தோற்றங்களும் அலங்கார ஈடுபாடும் ஒரு முக்கிய காரணம்.

ஆடம்பரங்களை மனதார விரும்பி அனுபவித்தும் இருக்கிறார். எளிமையாக வாழ விரும்பியும் இருக்கிறார். டயானாவின் உடைகள் மற்றும் அலங்கார அணிகள் பல கோடி ரூபாய்கள் பெறுமதியானவை.

ஒரு கட்டத்தில் அரச குடும்ப பந்தாக்களை டயானா வெறுத்து ஒதுங்கிய போதும், தன்னை அலங்காரப்படுத்துவதிலும், விதம் விதமான ஆடைகள் அணிவதிலும் அவரது ஆர்வம் குறையவில்லை.

இந்த நூற்றாண்டின் இணையற்ற இளவரசியின் எழிலுக்கு அவரது அலங்காரமும் காரணம்தான். ஆள்பாதி ஆடை பாதி என்பது டயானாவுக்கும் பொருந்தும். □

# புன்னகை மன்னன்



நிலத்திலும் நீரிலும் வாழும் தன்மையுடைய தவளை ஒன்று நீரிலிருந்து முதன் முதலாக நிலத்துக்குத் தாவும் சந்தர்ப்பத்தைக் கண்டறிய அவாக்கொண்ட ஈசென்ரெட் எனும் படப்பிடிப்பாளர் இப்படத்தைப் பிடித்தார்.

தனது நீண்ட நாள் கனவு நனவாவதனால் படப்பிடிப்பாளர் நிச்சயம் மகிழ்ச்சி அடைந்திருப்பார். அவருடைய மகிழ்ச்சியில் மகிழ்ச்சியடைந்ததற்கு அடையாளமாக சிரித்தது என்று அவர் இப் படத்தை சான்றாகக் காட்டிப் பெருமைப்படுகிறார்.

தவளை கத்துவதைக் கேட்டிருப்பீர்கள். சிரிப்பதை இப்போதுதான் பார்ப்பீர்கள். நன்றாகப் பாருங்கள். புன்னகை மன்னன் என்று பட்டம் கொடுக்கலாம் அல்லவா! □

# உல்லாசம்



புதுமணத் தம்பதிகள் தங்கள் தேனிலவைக் களிப்புடன் அனுபவிப்பதற்காகவே மேலை நாடுகளில் தனியான விடுதிகள் நிறுவப்பட்டுள்ளன. அத்தகைய ஒரு தேனாக இனிக்கும் தேனிலவை மெய் மறந்து அனுபவிக்கும் காதலர்களின் கோலத்தை இப்படம் காட்டுகிறது.

இந்தக் குளியல் அறையில் நாலா பக்கமும் கண்ணாடிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

சவர்க்கார நுரை நிரப்பப்பட்ட தொட்டியில் இக்காதலர்கள் காணப்படுகின்றனர்.

காதலின் சின்னமான இதயத்தின் வடிவில் தொட்டி கச்சிதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதயத்திற்குள் தாம் இருப்பதாக நினைத்து ஜோடிகள் மகிழ்ச்சியில் திளைக்கலாமல்லவா!

வாழ்க்கை வாழ்வதற்கே. அதனை புதுமையான சிந்தனைகளோடு, இளமையான உணர்வுகளோடு அனுபவிக்க வேண்டும். இல்லையானால் வாழ்க்கை சலித்துவிடும். □

# சவால்




சனத் ஜெயசூர்யா-தற்போது நடைபெற்றுவரும் முத்தரப்பு போட்டிதான் ஜெயசூர்யாவின் எதிர்காலத்தை தீர்மானிக்கும். அவர் அணித் தலைவராக தொடருவதும், தொடராததும் இப் போட்டியின் வெற்றி தோல்வியில்தான் தங்கியுள்ளது. இது சில கிரிக்கெட் விமர்சகர்களது கருத்து.

இது தவறான கருத்து. அர்ஜுன ரணதுங்கா கப்டன் பதவியில் இருந்து நீக்கப்பட்டதற்கு கிரிக்கெட் தோல்விகள் மட்டும் காரணமல்ல. அரசியலும் புகுந்து விளையாடியிருக்கிறது.

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தேர்தலின் எதிரொலிதான் இப்போது கேட்டுக் கொண்டிருக்கிறது. உலகக் கோப்பைத் தோல்வியை ரணதுங்காவை பழிவாங்க தகுந்த சந்தர்ப்பமாக அவரது எதிரிகள் பயன்படுத்திக் கொண்டதுதான் உண்மை.

எனவே, சனத் ஜெயசூர்யாவை விட்டால் தற்போதைக்கு வேறு கப்டன் கிடையாது. எனவே அணி தோற்கிறதோ வெற்றி பெறுகிறதோ சில காலத்திற்கு சனத்தான் கப்டனாகத் தொடர்வார். மகாநாமாவும் அணியில் இல்லை. அவர் ஓய்வு பெற்றும் விட்டார். அதனால் சனத்தின் கப்டன் பதவிக்கு அணிக்குள் போட்டியும் இல்லை. □


அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில்

'கார்த்திகன் கோல் டெலிபோன் காட்'

இலங்கைக்கு 18 நிமிடம் பேசுவதற்கு, 10 கனேடியன் டொலர் மட்டுமே!

மேலதிக விபரங்களுக்கு:

தொ.பே.இ: (416) 461-3456

தொ.நகல்.இ: (416) 461-8621


## 4வது பிறந்தநாள் வாழ்த்து

15.08.1999

### செல்வி காருண்யா ஆனந்தகுமாரன்



கோப்பாய் கட்டப்பிராயைச் சேர்ந்த ஆனந்தகுமரன்—ராஜகுமாரி தம்பதியினரின் செல்வப் புதல்வி காருண்யா தனது நான்காவது பிறந்தநாளை 15.08.1999 அன்று கனடாவில் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, டிலக்ஷன் அண்ணா, டினேஸ் அண்ணா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், மச்சாள்மார், மச்சான்மார், அண்ணாமார், அக்காமார் மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் காருண்யாவை பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: அப்பா, அம்மா – கனடா.

படிப்பகம்